கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

திருவள்ளுவராண்டு 2047

மலர் - 8 இதழ் - 6 செப்டம்பர் - 2016

கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

த.ஸ்டாலின் குணசேகரன்

பொறுப்பாசிரியர்

சண்முகம் சரவணன்

ஆசிரியர் குழு

எஸ்.சண்முகநாதன்
தி.ரெத்தினசபாபதி
அ.கணேசன்
அ.கிருஷ்ணமூர்த்தி
ஜி.சரவணன்

இதழ் வடிவமைப்பு

ஞா.சரிதா

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.com
இணைய தள முகவரி: **www.keetru.com**

நன்கொடை **₹ 20.00,** ஓர் ஆண்டு **₹ 240.00**
வெளிநாட்டுச் சந்தா - ***25 டாலர்***

சந்தா தொகையை
New Century Reader's Sangam
என்ற பெயரில் அனுப்பலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

பொறுப்பாசிரியர்
உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600098.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

பொருளடக்கம்

படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் - 4

முற்றுப் பெறாத பாடல்...
ஜி.சரவணன் - 11

கலைச் சொற்களை வரையறை செய்தல்
டாக்டர் சு.நரேந்திரன் - 15

தமிழாய்வில் தகவல் சேகரிப்பும்
ஆய்வு நூலகங்களும்
ந.முருகேசபாண்டியன் - 21

வாசித்தல் தளத்திலிருந்து
அனுபவத் தளத்தை நோக்கி...
ப்ரதிபா ஜெயச்சந்திரன் - 33

தென்னக இசை ஆற்றுகைகளில்
தமிழிசையின் வளர்ச்சி நிலை
த.ராபர்ட் அருட்சேகரன் - 34

ராமனிலிருந்து பெரியார்வரை...
காயத்ரி சரவணன் - 37

மனோன்மணியம் சுந்தரனார்
க.காமராசன் - 44

தமிழியல் ஆய்வுவெளி -
கல்விப்புலம் சார்ந்த உரையாடல்
சுப்பிரமணி இரமேஷ் - 49

திணைக் கோட்பாடு: ஆய்வு அறம்
சுஜா சுயம்பு - 54

நன்பகல் அந்தி
முனைவர் இரா.வெங்கடேசன் - 62

படித்துப் பாருங்களேன்...

தமிழர்களின் நீர் மேலாண்மை: 1

ஆ.சிவசுப்பிரமணியன்

முனைவர் பழ. கோமதிநாயகம் (2013) நீரின்றி அமையாது நிலவளம், (2011) தாமிரவருணி சமூக - பொருளியல் மாற்றங்கள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

மனித குலத்திற்கு இயற்கை வழங்கிய ஓர் அடிப்படையான பொருள் தண்ணீர். பயிர்வளம், இயற்கைவளம், விலங்குவளம் என்பனவற்றைச் செழிக்கச் செய்வதுடன் மனிதனின் அன்றாடத் தேவையில் தவிர்க்க இயலாத ஒன்றாகத் தண்ணீர் இடம் பெற்றுள்ளது.

மழையின் வாயிலாகவும், ஆறுகளில் இருந்தும், நிலத்தினுள் இருந்தும் மனித சமூகம் நீரைப் பெற்று வருகிறது. ஆனால் இது திடீரென்று நிகழவில்லை. தொடக்கத்தில் இயற்கையாக ஓடும் காட்டோடைகளில் இருந்தும், ஆறுகளில் இருந்தும் மட்டுமே மனித சமூகம் தண்ணீரைப் பெற்று வந்தது. நீரைத் தேக்கிவைக்கவும், திசை திருப்பவும், பூமியின் உள்ளே இருந்து வெளிக் கொணரவும் படிப்படியாகக் கற்றறிந்தபோதுதான் மனிதசமூகம் வளர்ச்சி பெற்றது. இம்முயற்சியில்

ஏற்பட்ட வெற்றியே அச்சமூகத்தின் முன்னேற்றத்தை முடிவு செய்தது. அத்துடன் அதன் நாகரிகம் பண்பாடு என்பனவற்றை வளர்த்தெடுத்தது.

உலகின் தொன்மையான நாகரிகங்கள் ஆற்றங்கரை நாகரிகங்களாகவே இருந்துள்ளன. தமிழகமும் இதற்கு விதிவிலக்கல்ல. பரிபாடலில் வையை ஆறும், சிலப்பதி காரத்தில் காவிரி ஆறும் அழகுற இடம்பெற்றுள்ளன. 'கான்யாறு' 'விரிபுனல்' என்று ஆறுகளுக்குப் பெயரிட்டனர். தன்போக்கில் ஓடிக்கொண்டிருக்கும் நீரைத் தேக்கி வைக்கும் முறை தமிழக வரலாற்றில் பழமையான ஒன்று. இத்தகைய நீர்நிலைகள், குளம், இலஞ்சி, பொய்கை, ஏரி, வாவி, கூவல், குழி எனப் பல்வேறு பெயர்களில் பண்டைத் தமிழர்கள் அழைத் துள்ளனர். கிணறு வெட்டுதல் தொடர்பான நூல் 'கூவநூல்' எனப்பட்டது. இந்நூல் வல்லோர் 'கூவநூலோர்' எனப்பட்டனர். வேளாண்மைப் பெருக்கத்திற்கு, காடுகளை அழிப்பதும் குளங்களை வெட்டுவதும் இன்றியமையாதன என்பதனைப் பண்டைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். இவ்வுண்மையை,

காடு கொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி

என்ற பட்டினப்பாலைத் தொடர்களால் *(283-284)* அறியமுடிகிறது. மன்னனது கடமைகளுள் ஒன்றாக நீரைத் தேக்குவதும், திசை திருப்பலும் இடம்பெற்றன. குடபுலவியனார் என்ற கவிஞர்

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத் திசினோரே

என்று பாடியுள்ளார் (புறநானூறு : 18:22-23). நிலம் திருத்தி, நீரின் துணையால் வேளாண்மை செய்வோர் உயிரும், உடலும் படைத்துக்காப்போர் என்பதே இத்தொடரின் பொருளாகும்.

இத்தகைய வரலாற்றுத் தொன்மை கொண்ட தமிழர்களின் நீர்மேலாண்மை குறித்து வெளியான சில நூல்களை இத்தொடர் அறிமுகம் செய்கிறது. நூல்களின் நுவல்பொருள் பரந்துபட்டது என்பதால் இந்நூல்களின் செய்திகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. தொழில்நுட்பம் 2. நீர் உரிமை 3. நீராதாரங்களின் அழிவு

இங்கு அறிமுகம் செய்யும் நூல்கள் ஒவ்வொன்றிலும் இம்மூன்று செய்திகளும் இடம்பெறாவிட்டாலும் இவற்றுள் ஒன்றோ இரண்டோ இடம்பெற்றுள்ளன. இந்நூல்கள் அனைத்தையும் ஒருசேர படித்து முடிப்பின் தமிழகத்தின் நீர் மேலாண்மை குறித்த பரந்துபட்ட, ஆழமான வரலாற்றுச் செய்திகள் நமக்குக் கிட்டுவது உறுதி.

நூலாசிரியர்

இங்கு அறிமுகமாகும் இரு நூல்களின் ஆசிரியர் பழ.கோமதிநாயகம். நீரியல் - நீர்வளப் பொறியியலில் முதுநிலைப்பட்டமும், அமெரிக்காவின் கொலராடோ ஊட்டா பல்கலைக்கழகங்களில் நீர் மேலாண்மையிலும், கல்வி கற்பதிலும், சிறப்புப் பட்டயங்களும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர். தமிழகத்தின் நீர்மேலாண்மை வரலாறு குறித்தும் சிக்கல்கள் குறித்தும் ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்.

மன்னர்களும் நீர் மேலாண்மையும்

இந்தியாவை ஆட்சிபுரிந்த மன்னர்கள் நிதித்துறை, போர்த்துறை, நீர்ப்பாசனத்துறை என்ற மூன்று முக்கிய துறைகளைத் தம் பொறுப்பில் கொண்டிருந்ததாக, கார்ல்மார்க்ஸ் குறிப்பிடுவார். இவற்றுள் முதல் இரண்டு துறைகள் குறித்து எதிர்மறையான கருத்துக்களைக் கூறும் அவர் நீர்ப்பாசனத்துறை குறித்து சிறப்பாக மதிப்பிட்டுள்ளார்.

மருதநில வேளாண்மை உருவான பின்னர் 'இறை' என்ற பெயரில் நிலவரி வாங்கும் வழக்கம் பரவலானது. இதைப் பெற்றுக் கொள்ளும் மன்னன் தன் பங்கிற்கு நிலங்களுக்கு நீர் வழங்கும் கடமையைச் செய்ய வேண்டியிருந்தது.

இதன் அடிப்படையில் ஆறுகளின் கரைகளைப் பராமரித்தல், அணை கட்டல், வாய்க்கால் வெட்டல், ஏரி, குளங்கள் அமைத்தல் என்பன போன்ற செயல்களை மேற்கொண்டனர்.

இப்பணிகளின் ஊடாகத் தன்போக்கில் செல்லும் நீரைத் தம் விருப்பம்போல் தேக்கிவைக்கும், திசை திருப்பும், தொழில்நுட்பம் உருவானது.

தொல்லியல் சான்றுகள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் என்பனவற்றில் இது தொடர்பான செய்திகள் காணக்கிடைக்கின்றன. அத்துடன் அவர்கள் உருவாக்கிய நீர்நிலைகள் சில எஞ்சி நின்று நம் பார்வையில் படுகின்றன.

அணை கட்டுதல்

இயற்கையாகத் தன்போக்கில் ஓடி வரும் ஆற்று நீரைத் தடுத்து நிறுத்தி வைப்பதற்கும், அதைத் தாம் விரும்பும் பகுதிக்குக் கொண்டு செல்லவும் பயன்படும் அடிப்படையான தொழில்நுட்பம் அணைக்கட்டுதல் ஆகும்.

சங்ககாலத்திற்கு முந்தைய தொல்காப்பியத்திலும் (பொருள் 65-67) சங்க இலக்கியங்களில் ஒன்றான மதுரைக் காஞ்சியிலும் (725-726) 'கற்சிறை' என்ற பெயரில் அணைக்கட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

கற்களால் கட்டப்பட்டுள்ள பகுதியில் தண்ணீர் சிறைப்பட்டுள்ளதால் இப்பெயரை இட்டுள்ளனர். கற்சிறைகள் என்ற பெயரிலான தொன்மையான, அணைக்கட்டுகளில் இன்றும் நாம் காணக்கூடியதாக 'கல்லணை' அமைகிறது.

இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கரிகால் சோழனால் மணற்பாங்கான காவிரி ஆற்றுப்படுகையில் கட்டப்பட்டுள்ளது. இது குறித்து,

> மணற்பாங்கான ஆற்றுப்படுகையில் அணைக் கட்டுகள் கட்டுவது எப்படி என்ற அறிவியல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் ஆங்கிலேயர்களுக்குத் தெரியவந்தது. பேயர்டு ஸ்மித் என்ற ஆங்கிலேயர் 1853-ஆம் ஆண்டில் கல்லணையைப் பொறியியல் சாதனை என்று குறிப்பிட்டுள்ளார்

என்று கூறும் கோமதிநாயகம், சர் ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலப் பொறியாளர்தான் 'மகத்தான அணை' என்ற பொருளில் 'கிராண்ட் அணைக்கட்டு' என்ற பெயரை இட்டு அழைத்தார் என்று குறிப்பிட்டுள்ளதுடன் இக் கல்லணை குறித்து அவர் எழுதியுள்ள பின்வரும் பகுதியை மேற்கோளாகக் காட்டுகிறார்.

"ஆழம் காண இயலாத மணற்படுகையில் எப்படி அடித்தளம் அமைப்பது என்ற நுட்பத்தை இவர்களிட மிருந்து (கல்லணை கட்டியவர்களிடம்) தான் நாம் தெரிந்துகொண்டோம். இந்தப் பாடத்தைப் பயன் படுத்தி ஆற்றுப் பாலங்கள், அணைக்கட்டு போன்ற நீரியல் கட்டுமானங்களைக் கட்டினோம். எனவே, இந்த மகத்தான சாதனை புரிந்த பெயர் தெரியாத அந்நாளைய மக்களுக்கு நாம் பெரிதும் கடன்பட்டுள்ளோம்."

இப்படி ஆறுகளில் அணைகட்டி அவற்றின் நீரைத் தேக்கி வைக்கும் தொழில்நுட்பம் மட்டுமின்றி தேக்கிய நீரை வெளியேற்றும் தொழில்நுட்பத்தையும், தமிழர்கள் பெற்றிருந்தனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பாசன வாய்க்கால்களில் ஒன்று பாண்டியன் கால். இதைப் பழுது பார்த்த ஹாரஸ்லி என்ற ஆங்கிலப் பொறியாளர் இது தொடர்பாகத் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:

> "பாண்டியன் வாய்க்கால் மற்றும் பத்மநாபபுரம் புத்தனாறு வாய்க்கால்களை ஆரம்பத்தில் உருவாக்கியவர்களின் வழியில் செல்வது தொழில்நுட்பக் கண்ணோட்டத்தில் கலப்பில்லா மகிழ்ச்சியைத் தருகிறது. காரணம் இவர் களுடைய திறமையையும், மனித சக்தியையும் மீறிய விடாமுயற்சியும், காட்சியாக நன்கு பதிந்துள்ள தாலும், பாசனப் பொறியியல் கலையின் ஆசானாகவும் திறமையுள்ள மகத்தானவர்களாகவும் நான் கருதுகின்றவர்களின் அடிச்சுவட்டை ஒட்டி நான் அவ்வேலைகளைச் செய்வதில், போதுமென்ற மனநிறைவையும் முழுதிருப்தியும் அடைகிறேன்".

இவ்வாறு அய்ரோப்பியப் பொறியாளர்களின் கூற்றுக்களை மேற்கோளாகக் காட்டுவதுடன் நின்று விடாமல் தமது அவதானிப்பையும் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

> பண்டையத் தமிழர்கள் ஆற்றுநீரை விவசாயத் திற்குப் பயன்படுத்தத் திட்டங்கள் உருவாக்கும் பொழுது ஆற்றின் தனித்தன்மையான நில அமைப்பு, நீர்வளம் பற்றி நன்கு அறிந்திருந்ததால், அவர்களால் உருவாக்கப்பட்ட பாசனத் திட்டங்கள் பல நூற்றாண்டுகள் செயல்பட்டு வந்தன. மக்களும் அரசர்களும் அவற்றை ஈடுபாட்டுடன் பராமரித்தும் மேலான நிர்வாகமும் செய்து வந்தனர்

ரூ.130/-

இத்துடன், தமிழக ஆறுகளின், காவிரி, பெண்ணை ஆறு, பாலாறு, வைகை, தாமிரவருணி ஆகிய ஆறுகள் வாயிலாக நிகழும் பாசனங்கள் குறித்து விளக்கியுள்ளார். ஒவ்வொரு ஆறும் தனக்கெனத் தனித்துவமான பாசன முறைகளைக் கொண்டிருப்பதை நாம் அறியமுடிகிறது.

- காவிரி ஆற்றில், எல்லாக் காலத்திலும், நீர் கிடைத்து வந்தமையால் நேரடிப் பாசனமுறை நிலவியது.
- பெண்ணை ஆற்றுப் பாசனப் பகுதி ஏரிப் பாசனமும், குறைந்த அளவு நேரடிப்பாசனமும்

கொண்ட பகுதி. வெள்ளக்காலங்களில் மட்டுமே இதன் கிளை ஆறுகளில் நீர் செல்லும்

- பாலாற்றுப் பாசனம், நேரடிப்பாசனமும், ஏரிப்பாசனமும் கொண்டது. ஆறாகவும் நீர்த்தேக்கமாகவும் அமைந்துள்ளது.
- வடிநிலப்பகுதியில் பெய்யும் மழை அனைத்தையும் பயன்படுத்தும் வகையில் வாய்க்கால்களையும், ஏரிகளையும் கொண்டது வைகை ஆற்றுப் பாசனப் பகுதி.
- கால்வாய்கள் வாயிலாக நேரடிப் பாசனத்திற்கும், ஏரிகளுக்கும் நீரை வழங்கும் தன்மை கொண்டது தாமிரவருணி ஆற்றுப்பாசனம்.

இவ்வாறு மேற்கூறிய தமிழகத்தின் முக்கிய ஆறுகள் ஒவ்வொன்றும் தனக்கெனத் தனித்துவமான பாசன



ரூ.120/-

முறைகளைக் கொண்டிருந்தாலும் இவை அனைத்திற்கும் பொதுவான தொழில்நுட்பங்கள் உள்ளன. அவை வருமாறு:

1. ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கங்கள் கட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக பல ஏரிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பான இடங்களில் தொடர் சங்கிலி அமைப்பில் உருவாக்கப்பட்டன. இவை ஒரு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவுக்குச் சமமாக பல இடங்களில் உள்ளன. இப்படி உருவாக்கப்பட்ட ஏரிகளை எளிதில் உள்ளூர் நிர்வாகம் என்கிற உயர்ந்த தத்துவத்தின்படி நிர்வாகம் செய்யப்பட்டன.
2. ஆற்றிலிருந்து ஏரிகளுக்கு நீர் பெறுவதற்கு ஏற்படுத்தப்பட்ட வாய்க்கால்கள் சிறு ஆறுகளைப் போன்று பெரியதாக இருந்ததால் ஆற்றின் நீர்வளத்தை அதிக அளவில் தேக்கி வைத்துப் பின் பயன்படுத்த முடிந்தது.
3. மழைநீரை வடிநிலங்களிலிருந்து நேரடியாகப் பெறும் தொடர் சங்கிலி முறையில் அமைக்கப்பட்டுள்ளதால், வடிநிலப் பரப்பின் நீரை அதிக அளவில் சேகரிக்க முடிகிறது. இதனால் ஆறுகளில் ஏற்படும் வெள்ளம் மட்டுப்படுத்தப் படுகிறது.
4. ஆற்றிலிருந்து ஏரிகளுக்கு நீர் எடுத்துச் செல்ல உருவாக்கப்பட்ட வாய்க்கால்களும், ஏரியிலிருந்து வயல்களுக்கு நீர் பகிர்ந்து கொடுக்கும் வாய்க்கால்களும் பாசன நீரை எடுத்துச் செல்வதுடன் வடிகால் நீரையும் மீண்டும் உபயோகப்படுத்தப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. (பக்கம். 54)

தமிழர்களின் தொழில்நுட்பம்

ஆங்கிலக் காலனிய ஆட்சிக்குத் தமிழகம் ஆட்பட்டபோது, அவர்களும் சில புதிய அணைக் கட்டுக்களையும், கால்வாய்களையும் வெட்டினர். அவர்கள் கட்டிய பெரியாறு, மேட்டூர் அணைகளில், அணைகளின் மிகுதி நீர் வெளியேற தமிழர்களின் தொழில்நுட்ப அமைப்பான **கலிங்கு** போன்ற அமைப்பே உருவாக்கப்பட்டது. ஆங்கிலேயர்களின் வடிவமைப்பில் உருவான வாய்க்கால்கள் வழியாக வரும் நீரை நிலங்களுக்கு வழங்குவதில் தாமதம் ஏற்படும்.

'பண்டையத் தமிழர்களால் உருவாக்கப்பட்ட வாய்க்கால்களின் வடிவமைப்பு, ஆங்கிலேயப் பொறியாளர்களின் வடிவமைப்பு முறையை விடச் சிறந்தது' என்பது கோமதிநாயகத்தின் கருத்தாகும். தம் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில், ஒப்பீட்டு அடிப்படையிலான சான்றுகளைத் தந்துள்ளார்.

அதே நேரத்தில் ஆங்கிலேயர்களின் கட்டுமானத் தொழில்நுட்பச் சிறப்பை முற்றிலும் புறந்தள்ளவில்லை. "ஒரு வடிநிலப்பரப்பின் நீரை மற்றொரு வடிநிலப் பரப்புக்கு எடுத்துச் சென்று பாசனத்திற்கு உபயோகப் படுத்தும் திட்டங்களின் முன்னோடியாக" ஆங்கிலேயர் கட்டிய பெரியாறு அணை உலக அரங்கில் இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

இதுபோன்று மேட்டூர் அணையானது அது கட்டப்பட்ட காலத்தில் ஆசியக் கண்டத்தில் பெரிய நீர்த்தேக்கமாக இருந்துள்ளது என்றும் குறிப்பிடுகிறார்.

நீர்த்தேக்கங்கள் கட்டும் வல்லமை பண்டைத் தமிழர் களிடம் இல்லை என்பதும் அவரது கருத்தாகும். தமிழர் களின் அணைக்கட்டுத் திறன் தொடர்பாக ஆசிரியர் கூறும் கருத்துக்கள் வருமாறு:

> ஆறுகளின் நீரோட்டம் குறைவாக இருக்கும் காலங்களில், ஆற்றில் மூங்கில், மரக்கொம்பு, நட்டுவித்து, குறுக்கே கட்டி, அதன் முன் இலை, தழை, கற்கள், களிமண், மணல் கொண்டு தடுப்புகள் ஏற்படுத்தி ஆற்றின் நீரை உயர்த்தி வாய்க்கால்களில் அதிக அளவில் செல்லுமாறு செய்து வந்தனர். அவை தற்காலிகமானவை. அதிகம் நீர் வந்தால் அவை உடைந்துவிடும். மீண்டும் மீண்டும் அவை அமைக்கப்பட்டன. இவற்றைக் **கொரம்பு** என்றழைப்பர். இம் முறையில் அதிகச் செலவும், உழைப்பும் தேவைப்பட்டாலும் இதிலுள்ள தொழில் நுட்பமானது. ஆற்றிலும் வாய்க்காலிலும் மணலைத் தேங்கி நிற்கச் செய்யாது.
>
> தாமிரவருணி ஆற்றில் எட்டு அணைக்கட்டுகள் பாண்டிய மன்னர்களாலும், நாயக்க மன்னர் களாலும் உயர்ந்த தொழில்நுட்பத்துடன் கட்டப் பட்டுள்ளன. அவற்றுக்கு முன்னால் மணல் சேருவதில்லை. ஆனால், ஆங்கிலேயர்களால் தென்பெண்ணையாற்றின் குறுக்கே திருக் கோவிலூர் அணைக்கட்டும், பாலாற்றின் குறுக்கே பாலாறு அணைக்கட்டும் கட்டப் பட்டன. அவற்றின் முன்னால் மணல் சேர்ந்து இருப்பதைக் காணலாம்.

இதன் தொடர்ச்சியாக தாமிரவருணி ஆற்றில் கட்டப்பட்டுள்ள, கன்னடியன் அணைக்கட்டு, மருதூர் அணைக்கட்டு, திருவைகுண்டம் அணைக்கட்டு ஆகிய மூன்று அணைக்கட்டுகளின் தொழில்நுட்பம் குறித்து விளக்கிச் செல்கிறார். அதன் ஒருபகுதி வருமாறு:

மருதூர் அணைக்கட்டு தொழில்நுட்பரீதியாக உயர்ந்த நிலையில் உள்ளது. ஆனால், ஆங்கிலேயர் களால் உருவாக்கப்பட்ட ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு தொழில்நுட்பக் குறைபாட்டுடன் கட்டப்பட்டுள்ளது. மருதூர் அணைக்கட்டின் தொழில்நுட்பத்தின் அடிப் படையில், பிரான்ஸ் நாட்டின் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், 'வாத்து மூக்கு அணைக்கட்டுகள்' என்ற சிறிய அணைக்கட்டுகள், வாய்க்கால்களின் நீர் மட்டத்தை உயர்த்தக் கட்டப்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் மேலைநாட்டினரால் அறியப்பட்ட தொழில்நுட்பம், பண்டைய தமிழர்களால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கடைப்பிடிக்கப்பட்டது தான் என்பது தமிழர்கள் பெருமைப்படத்தக்கது.

இருபத்தொன்பது கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ள இந்நூல் தமிழர்களின் நீர்மேலாண்மை குறித்த ஆழமான செய்திகளுடன் நம் கால அவல நிலையையும் ஆங்காங்கே கூறிச் செல்கிறது.

•••

மேற்கூறிய நூல் பொதுவான செய்திகளைக் கூற இரண்டாவது நூல் தாமிரவருணி ஆற்றை மட்டுமே மையமாகக் கொண்டது (Conflicts Over Water Resources: A Caste Study From the Thamiravaruni Basin in Tamil Nadu) இது. ("நீர் ஆதாரங்களுக்கான மோதல்கள்: தாமிரவருணிப் படுகையை முன்வைத்து") என்ற தலைப்பிலான அவரது முனைவர் பட்ட ஆய்வேட்டின் தமிழ் வடிவமாகும். இதழியலாளர் திரு. எம். பாண்டிய ராஜன், வாசிப்புத்தன்மை குன்றாது இதனை மொழி பெயர்த்துள்ளார். இந்நூலின் உள்ளடக்கம் குறித்து,

> தாமிரவருணியைச் சார்ந்து 60 ஆண்டுகளில் ஏராளமான சமூக-பொருளியல்-அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல, தாமிரவருணி நெடுகிலும் தலைமடை, நடுமடை, கடைமடைப் பகுதிகளில் ஆய்வுக் கிராமங்களைத் தெரிவு செய்து மாற்றங்களை மிகத் துல்லியமாக மதிப்பிட்டுள்ளார் முனைவர். பழ. கோமதி நாயகம்.
>
> சாதி சார்ந்து தாமிரவருணி தண்ணீருக்காக நடந்த விஷயங்களும் மாற்றங்களும் அலசப்பட்டுள்ளன.

என்கிறார் பாண்டியராஜன். தாமிரவருணி ஆற்றை மையமாகக்கொண்டு நடைபெற்ற பொருளியல் மாற்றங் களையும், மேம்பாட்டையும் இந்நூல் ஆராய்கிறது. ஆய்வுக்கு உதவும் முறையில் தாமிரவருணிப் பாசன அமைப்பின் வளர்ச்சி, தண்ணீர் பயன்பாடு தொடர்பான காலத்தைப் பின்வருமாறு நூலாசிரியர் வரிசைப்படுத்தி உள்ளார்.

1. ஆங்கிலேயருக்கு முந்தைய காலம் – 1850 வரை
2. ஆங்கிலேயர் காலம் – 1850–1947
3. நாட்டின் விடுதலைக்குப் பின் – 1947–1970
4. தற்போதைய நிலை – 1970–2000

இக்காலப் பகுப்பிற்குள் தம் ஆய்வை மேற் கொண்டுள்ள இவர், அரசு, அமைப்பு தொடர்பான ஆவணங்களுடன் மட்டுமின்றி விரிவான கள ஆய்வையும் மேற்கொண்டுள்ளார். தாமிரவருணி ஆற்று நீர் மேலாண்மையை மையமாகக் கொண்ட, தொழில் நுட்பச் செய்திகளை மட்டுமே உள்ளடக்கிய ஒரு நூலாக இந்நூல் அமையவில்லை.

தாமிரவருணி ஆற்றுப்படுகையின் வளர்ச்சி, இதன் அடிப்படையில் உருவான சமுதாய மோதல்கள் என்பன நூலில் முக்கிய இடத்தைப் பெற்று சமூகவியல் ஆய்வு நூலாக இந்நூலை மாற்றி உள்ளன.

ஒரே சாதியின் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான மோதலாக, பேய்க்குளம், கோரம்பள்ளம் விவசாயிகளின் நீர் உரிமைச் சண்டையை மிக நுட்பமாக அவர் ஆய்வு செய்துள்ளார்.

பகாசுரத் தொழில் நிறுவனங்கள் தாமிரவருணி ஆற்றின் நீரை உறிஞ்சும் கொடுமையையும் விளக்கி உள்ளார். இது தொடர்பான புள்ளி விவரங்களையும் அவர் முன்வைக்கிறார். நூலின் முடிவுரையில் அவர் முன்வைக்கும் பின்வரும் கருத்துக்கள் ஆழமானவை. சிந்தனையைத் தூண்டுபவை.

> எந்தவொரு பாசனத் திட்டத்திலும் தலை மடையில் இருப்பவர்களால் தான் தண்ணீரில் கூடுதலான பங்கைப் பெறமுடியும் என்பது பொதுவான அம்சம். ஆனால், இது எப்போதுமே உண்மையாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. தண்ணீர் வழங்கலில் இருக்கும் செல்வாக்கைப் பொறுத்து, சில சூழ்நிலைகளில் தங்களுக்கு உரிய பங்கைவிடவும் கூடுதலான தண்ணீரைக் கடைமடைப் பகுதி விவசாயிகளால் பெறமுடியும். இதுவே ஒரு புதுவிதமான மோதலுக்கு வழிவகுத்துவிடுகிறது. தாமிர வருணியில் நிலைத்திருக்கும் மோதல்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது.
>
> விவசாயிகளிடையே சமமாகத் தண்ணீர் பகிர்ந்து கொள்ளப்படாவிட்டால், எப்போதும் மோதலில் தான் முடியும். பாரம்பரியமான ஒரு வேளாண் சமுதாயத்தில், மற்றவர்களைக் காட்டிலும் தாழ்த்தப்பட்ட (எனப்பட்ட) சாதியினரால் கூடுதல் தண்ணீரைப் பெற முடிந்தால் அதுவே மோதலைத் தீவிரப்படுத்திவிடுகிறது.
>
> மீண்டும் ஒருமுறை கூற வேண்டுமானால், ஒரு பாசனத்திட்டத்தின் ஒழுங்குமுறை விதிகளின் அடிப்படையில் தண்ணீர் வழங்குவது, மிகவும் சக்தி வாய்ந்த பயனாளர்களின் விருப்பத்துக்குப் பொருந்திச் செல்லாவிட்டால், அந்த பயனாளர்கள், பாசனத்திட்டத்தை நிர்வகிப்பவர்களின் ஒத்துழைப்புடன், தங்கள் விருப்பத்தை நிறை வேற்றிக் கொள்ளும் வகையில், எப்போதும் வெற்றிகரமாக, விதிகளை மாற்றி அல்லது அழித்தே விடுவார்கள்.
>
> இயற்கை வளங்களுக்கான மோதல்கள் என்பது, வளர்ச்சியின் பிரிக்க முடியாதோர் அங்கம். வளர்ச்சி பற்றிய திட்டமிடுதலின் போது, இந்த மோதல்களைப் பற்றியெல்லாமும் ஆராய்வது முக்கியம். மோதலின் முக்கியமான நோக்கம், தண்ணீர்ப் பகிர்வு என்கிறபோது, அதையொரு தொழில்நுட்பப் பிரச்சினையாகவும் தொழில் நுட்ப அடிப்படையில் (வெறும் கணக்குகளை அடுக்குவதன் மூலம்) தீர்க்கக் கூடியதாகவும் பார்க்கக்கூடாது. இந்த மோதல்கள் யாவும் சமூக-பொருளியல் காரணிகளின் வெளிப்பாடுகளே. வேளாண் பொருளியலில் தண்ணீரைப் பெறுவதும் தண்ணீர் வழங்கல் முறை மீதான கட்டுப்பாடும் அதிகாரத்துக்குரிய தீர்மானகரமான ஆதாரமாக விளங்குகிறது.
>
> ஒரு பாசனத்திட்டத்தில், கிடைப்பதை விடவும் தேவைகள் அதிகமாகும்போது, தண்ணீருக்கான போட்டி மிகவும் தீவிரம் பெறுகிறது. பின்னர், இது தண்ணீரைக் காப்பாற்றுவதற்கான அதிகாரம் சம்பந்தப்பட்டதாகிறது. தங்கள் நலன் சார்ந்த மோதல்கள் தவிர்க்க முடியாதவை. அனைத்து ஆற்றுப் படுகைகளும் தண்ணீரை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஒற்றைப் புள்ளியான இறுதி இலக்கை நோக்கியே நகரும்; அங்கிருந்து, அதன் பிறகு, மோதல்கள் தோன்றும். வேகமான நகர்ப்புற வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, மக்கள் தொகைப் பெருக்கம் ஆகியனவற்றெல்லாம் இந்த நடைமுறையை விரைவுபடுத்தும். ஏற்கனவே நிலவும் சமூக மற்றும் பொருளாதாரப் பதற்றங் களைத் தண்ணீர்ப் பற்றாக்குறை மேலும் மோச மடையச் செய்யும். புதிதாக சமூக மற்றும் பொருளாதாரப் பதற்றங்களைத் தண்ணீர்ப் பற்றாக்குறை உருவாக்கவும் கூடும்.
>
> எனவே பரந்துபட்ட வளர்ச்சிப் பார்வையுடன் இதுபோன்ற பதற்றங்களை எதிர்பார்த்து, தகுந்த கொள்கையுடன் கூடிய தலையீட்டின் மூலம் முன் கூட்டியே நடவடிக்கை எடுப்பது அல்லது தணிப்பது என்பது முக்கியமானது. பொதுவாக இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் குறிப்பாக, விவசாயிகள் எந்த அளவுக்குப் பங்கெடுத்துக் கொள்கிறார்கள் என்பதைப் பொருத்துதான் இதுபோன்ற நடவடிக்கைகளின் வெற்றி அமையும்.

இவ்விரு நூல்களையும் வெளியிட்ட பாவை பப்ளிகேஷன்ஸ் தி.இரத்தினசபாபதியும், துணைநின்ற இதழியலாளர் எம். பாண்டியராஜனும் பாராட்டுதலுக் குரியவர்கள்.

அடுத்த இதழில் ஏரிகள், குளங்கள் குறித்த தமிழர்களின் நீர்மேலாண்மை அறிவைக் காண்போம்.

- தொடரும்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்

விலை : ₹ 275/-

விலை : ₹ 325/-

விலை : ₹ 125/-

விலை : ₹ 750/-

விலை : ₹ 210/-

விலை : ₹ 20/-



விலை : ₹ 25/-

விலை : ₹ 30/-

விலை : ₹ 20/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

போன்: 044-26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

முற்றுப் பெறாத பாடல்...

ஜி.சரவணன்

அநாயாசமான கலைஞானமும் அபூர்வமான கவிமனமும் கொண்ட கவிஞர் நா.முத்துக்குமார் எனும் ஆளுமையின் எதிர்பாராத மரணம் தமிழிலக்கிய வெளியிலும் திரையிசையுலகிலும் பேரதிர்ச்சியும் பெரும் சோகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது,

'கடவுளுடன் சீட்டாடுவது
கொஞ்சம் கடினமானது
எவ்வளவு கவனமாக
இருந்தாலும்
பார்க்காமலே
அறிந்துகொள்கிறார்'

என்று கவிதையெழுதிய முத்துக் குமார்தான் 'தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தையின் அன்பின் முன்னாலே' என்றுமெழுதினார். சகலருக்குமான எல்லையற்ற காதலும் நேசமும் அன்பும் தன்வசங் கொண்டிருந்த மாகலைஞனின் முன்னால் தெய்வங்கள் தோற்றுப் போனதுடன் தலைகவிழ்ந்து நிற்பதாகவே தோன்றுகிறது,

'இறந்து போனதை
அறிந்த பிறகுதான்
இறக்க வேண்டும் நான்!'

என்றெழுதிய முத்துக்குமார் தன் இருப்பை புவிவெளியில் படர்த்திவிட்டு இறப்பை அறிந்துகொண்டுவிட்டார். அவரது கவிதை வரிகளை மணங்கொண்டு மலர்ந்த தமிழ்ச் சமூகம், ஆற்றாமையைச் சுமக்கவியலாமல் தவித்தலைகிறது

2001ம் ஆண்டில் சென்னை லயோலா கல்லூரியில் நடைபெற்ற அ,வெண்ணிலாவின் 'கனவிருந்த கூடு' கடிதத் தொகுப்பு வெளியீட்டு விழாவின்போது தோழர் மு.முருகேஷின் அறிமுகத்திலிருந்து அவருடன் தொடங்கிய சிநேகம் அறிவுமதி அலுவலகத்தில் தொடர்ந்த சந்திப்புகளில் இறுக்கமானதானது, 2003ல் கோவில்பட்டியில் நடந்த முருகபூபதி திருமணத்தில் சந்தித்தபோது அவர் திரையுலகில் மிகப் பிரபலமாகியிருந்தார், முதற்சந்திப்பின்போதான அதே மென்சிரிப்பு, அதே எளிமை, அதே கைப்பற்றல். இடையில் வந்து பேசிக்கொண்டிருந்த ஒரு

நண்பரிடம் விடைபெறுவதாகச் சொல்லிவிட்டு பையிலிருந்த பணத்தை அவரிடம் கொடுத்து 'இப்போதைக்கி இத வச்சிக்கங்க, இங்க ஏடிஎம் எதுவும் இல்ல' என்று அன்பொழுகச் சொல்லி அவரது தோளைத் தட்டியனுப்பிவிட்டு என்னிடம், 'திரும்பவும் சென்னைக்கே வந்துடுங்க' என்று சொல்லிச் சென்றார், 2004ல் திருபுவனத்தில் ஏற்பாடு செய்திருந்த ஒரு இலக்கியக் கூட்டத்தில் சி,மகேந்திரன், பாரதி கிருஷ்ணகுமார் ஆகியோருடன் கலந்து கொள்வதாகச் சொல்லியிருந்த நிலையில் கடைசி நேரத்தில் வர இயலாத சூழலை விளக்கி ஒரு கவிதையை அலைபேசி யிலேயே சொல்லி இதனை நிகழ்ச்சியில் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றார்.

வருடங்களுக்குப் பிறகு சென்னைக்கு வந்த பின்னாலும் ஏதேதோ காரணங்களால் அவரைச் சந்திக்கவோ உரையாடவோ வாய்க்கவில்லை. அவரது இறப்பு மீண்டும் அவருடன் திரும்பவும் உரையாட வைப்பதாக அமையும் என ஒருபோதும் எண்ணிப் பார்த்ததில்லை.

பொதுவாக திரையுலகத்தினருக்கே உரித்தான ஆர்ப்பாட்டமான எந்த குணாம்சங்களும் அவரை எப்போதும் அண்டவேயில்லை. திரையுலகிலும் இலக்கிய வெளியிலும் எண்ணிக்கையற்ற நண்பர்களைக் கண்டடைந்தது, அவரது எளிமைப் பண்பினாலும் அன்பும் அமைதியுமான அவரது சிநேகத்தாலும்தான் என்பதை அவருடன் பழகியவர்கள் அறிவர். பூஞ்சையான அவரது உடலைப் போலவே அவரது மனசும் அத்துணை மென்மையானது. பேதமற்ற அன்பு அவருடையது.

எல்லாவற்றையும்விட அவரது எளிமை மிகமிகப் பிரசித்தமானது. திரையுலகில் புழங்கும் பலருக்கும் சித்திக்காததும்கூட.

காஞ்சிபுரம் மாவட்டத்துக் கிராமமான கன்னிகா புரத்தைச் சேர்ந்த நா.முத்துக்குமார் சிறுவயதில் தாயை இழந்தநிலையில் தமிழாசிரியரான தந்தையாரின் நூலகச் சேமிப்பளவிருந்த புத்தகங்களைத் தன் இரண்டாவது தாயாக ஏற்றணைத்துக் கொண்டவர், சங்க இலக்கியத்திலிருந்து உலக இலக்கியம் வரை ஆழமாகப் படித்தறிந்து பள்ளி நாட்களிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கியவர், காஞ்சிபுரம் வீதிகளிலும் வெவ்வேறு கல்லூரிகளிலும் தமிழ்க் கவிதை முழக்கத்தோடு சமூகத்திற்கான அக்கறைக் குரலாகவும் ஒலித்தவர். ஆணாதிக்கத்திற்கெதிரான தனது விசாரணையை 'தூர்' என்ற கவிதையில் அழுத்தமாகப் பதிவு செய்திருந்தார், இந்தக் கவிதையை எழுத்தாளர் சுஜாதா கணையாழி விழா மேடையில் சிலாகித்துப் பேச அந்த மேடையிலேயே பார்வையாளராக அமர்ந்திருந்த முத்துக்குமாருக்கு ஒரு அன்பர் ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கியபோது, அத்தொகையை அதே மேடையில் கணையாழி வளர்ச்சி நிதிக்கு வழங்குவதாக அறிவித்து கவிதையின் உயர்ந்த அம்சங்களோடு தனது குணாம்சத்திலும் உயர்ந்தோங்கித் தோன்றியவர், 'நியூட்டனின் மூன்றாம் விதி' மற்றும் 'பட்டாம்பூச்சி விற்பவன்' கவிதைத் தொகுப்புகளின் வழியாக நவீன இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க கவனத்தையும் பெற்றார்.

பச்சையப்பன் கல்லூரியில் பயில்கிற காலத்திலேயே கவிஞராக பிரபலமடையத் தொடங்கியவருக்கு சினிமாவின் மீதிருந்த விருப்பத்தினால் பாலுமகேந்திரா விடம் உதவி இயக்குனராக சிலகாலம் பணிபுரிந்தார், திரையுலகில் பாட்டெழுதும் இளங்கவிஞர்கள் பலரையும் வளமாக வார்த்தெடுப்பு செய்யும் தோழமை கவிஞர் அறிவுமதியின் கூடாரத்தில் தன்னை மெருகேற்றிக்கொண்டு சிறிதுகாலத்திலேயே திரையுலகின் உச்சத்தை எட்டிப் பிடித்தவர், இருபது வயதில் தொடங்கிய கலைப்பயணத்தில் தன் கடும் உழைப்பாலும் கவித்திறத்தாலும் தனித்ததொரு அடையாளத்தைத் தக்கவைத்துக்கொண்டவர். தமிழ்த்திரையுலகத்துக்கேயான கீழ்த்தரமான தந்திர குணங்களாலும் சிபாரிசுகளாலும் அடையாளப்படுத்தப்பட்டவர் அல்ல அவர். பிரபலமாகிவிட்ட பின்னால் எந்த சந்தர்ப்பத்திலும் அகங்காரமோ ஆவேசமோ கொள்ளாத நிலையில் பெரும் புகழுக்குப் பின்னும் தன் நேர்மையான எளிமையைக் கைநழுவவிடாத கலைமனம் அவருடையது. போற்றுதலையும் ஏச்சுதலையும் அளவுக்கதிகமான பாராட்டுதல்களையும் கருத்தில் கொள்ளாது தன் அழகிய புன்னகையால் கடந்து செல்லும் எளிமை அவருக்கு வாய்த்திருந்தது.

திரையிசைப் பாடல்களுக்கு மாநில அரசின் விருதுகளுடன் இரண்டுமுறை தேசிய விருது என பதினைந்தாண்டுகளுக்குள் அளப்பரிய சாதனைகளை தன் கவிதைகள் மற்றும் பாடல்களின் வழியே நிகழ்த்திய அசாத்தியமான கலைஞன். குறுகிய காலத்திலேயே கண்ணதாசன், வாலி, வைரமுத்து போன்றவர்கள் நிகழ்த்திய சாதனைகளுக்கு மிக அணுக்கமாக நெருங்கிச் சென்றவர் முத்துக்குமார். எழுதவேண்டிய ஏராளமான பாடல்களைத் தன்னோடு எடுத்துக்கொண்டு சென்று விட்ட கவிஞனை எண்ணுகையில் ஆழ்ந்து லயித்து ரசித்துக்கொண்டிருக்கையில் தடைப்பட்டுவிடும் இனிய இசைப்பாடல் தோற்றுவிக்கும் துயரத்தை ஒத்ததாயுள்ளது.

காதலையும் அன்பையும் இயற்கை நேசத்தையும் இன்றைய தலைமுறையினருக்கு புதிய புதிய அர்த்தங்களிலும் வெவ்வேறு பரிமாணங்களிலும் அழுத்தமாகச் சொல்லிச் சென்ற முத்துக்குமார் இசையும் இசைப் பாடலும் உள்ள காலம்வரை உறவாடிக் கலந்திருப்பார். வாழ்வைக் கொண்டாடித் திளைக்கும் கலைக்கும் கலைஞனுக்கும் மரணமேது?

இனி எங்கும் நிறைந்தவராகினார் அவர். பெண் பிள்ளைகளைப் பெற்ற அப்பாக்களால் உச்சிமுகர்ந்து கொண்டாடப்பட்ட ஆனந்தயாழ் காலவெளியெங்கும் மீட்டப்பட்டுக்கொண்டேயிருக்கும். காலகாலமாக அனலாக உணர்ந்த வெயில்கூட ஓரழகு என்பதை உணர்ந்துகொள்வதோடு வெயிலோடு விளையாடும் வழக்கத்தை வரும் தலைமுறைகள் கைக்கொள்ளும். வழிதேடி வந்த வண்ணத்துப்பூச்சிகளின் வண்ணங்களுக்காக காதலர்களின் காதல்மனம் விரல்களையேந்தி நிற்கும். மின்சாரக் கம்பிகளில் மைனாக்கள் கூடு கட்டட்டும்.

காதலையும் அன்பையும் இயற்கை நேசத்தையும் இன்றைய தலைமுறையினருக்கு புதிய புதிய அர்த்தங்களிலும் வெவ்வேறு பரிமாணங்களிலும் அழுத்தமாகச் சொல்லிச் சென்ற முத்துக்குமார் இசையும் இசைப் பாடலும் உள்ள காலம்வரை உறவாடிக் கலந்திருப்பார். வாழ்வைக் கொண்டாடித் திளைக்கும் கலைக்கும் கலைஞனுக்கும் மரணமேது? ●

நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்

விலை : ₹ 500/-

விலை : ₹ 325/-

விலை : ₹ 120/-



விலை : ₹ 225/-

விலை : ₹ 60/-



விலை : ₹ 110/-

விலை : ₹ 325/-

விலை : ₹ 190/-

விலை : ₹ 260/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

போன்: 044-26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

கலைச்சொற்களை வரையறை செய்தல்– எவ்வளவு எளிது

டாக்டர் சு.நரேந்திரன்

தமிழ்வழி அறிவியல் பயிற்றும் முயற்சி பொது அறிவியல் துறைகளில் தொடங்கி இன்று மருத்துவம் பொறியியல் போன்ற தொழிற்கல்வி சார்ந்த அறிவியல் துறைகளுக்கும் விரிவடையும் நிலை வந்துள்ளது. இத்துறைகளில் பாடநூற்கள் தயாரித்தாலும் கலைச் சொல்லாக்கமும் இவ் விரிவிற்கு இன்றியமையாததவையாகும்.

கலைச்சொல்லாக்கம் பற்றிய பொதுக் கொள்கைகளும், உண்மைகளும்:

தமிழில் கலைச்சொற்களை வரையறை செய் வதற்குரிய நெறிமுறைகளை வகுக்குமுன், இன்று அறிவியலில் அனைத்துலக அளவில் கலைச் சொற்கள் பயன்படுத்தப்படும் முறைகள், அடிப் படை உண்மைகள் ஆகியவைகளை உணர்ந்து கொள்வது நன்மை பயப்பதாகும்.

ஒரு கருத்துக்கு ஒரு சொல்:

ஒரு கருத்துக்கு ஒரு சொல் என்ற வரை யறையும், ஒட்டுக்கள், குறியீடுகள் முதலானவற்றின் (Distinct) வரையறையும், ஆங்கிலத்தில் தீர்மான மாகிவிட்டதாகப் பலர் கருதுகின்றனர். இது மெய் அன்று. ஆங்கில மொழி தேவைக்கேற்பவே சொல்லாட்சி செய்கிறது. எடுத்துக்காட்டாகக் கோடிக்கணக்கில் உள்ள வேதியியல் பொருட்கள் ஒவ்வொன்றையும் ஒரே பெயரிட்டு இன்னும் அமைக்கவில்லை. அனைத்துலகத் தூய மற்றும் பயன்பாட்டு வேதியியல் ஒன்றியம் (International Union of Pure and Applied Chemistry) வேதியியல் பெயர்களை நிறுவப் பல விதிகளை அமைத்துள்ளது. ஆனால் காலத்தால் கனிந்த வழக்குச் சொற்களும் கூடவே பயிலப்படுகின்றன. கணிப்பொறியின் பேராதிக்கத்தால் இவ்விரு முறைகளின் பயன்பாடு களும் போதாதவை ஆயின. அமெரிக்காவில் வேதியியல் கொளுப்பணிக்குழு (Chemical Abstracts Service) வேதியியல் செய்திகளைப் பரப்பக் கணிப் பொறியைப் பயன்படுத்த நேர்ந்தது. இத்தேவைக் கேற்ப வேதியியல் பொருட்களுக்குப் பெயரிடும் விதிகளை மாற்றியும், புகுத்தியும் அமைத்தது. ஆங்கில வேதியியல் வழக்கு மொழி வேறு பாடுடையதாகவும், முறையில்லாமல் இருக்கிறது. கணிப்பொறியில் பயன்படுத்தப்படுவதற்காகப் புகுக்கப்பட்ட வேதியியல் கொளுப்பணிக் குழுச் சொற்கள் (Cas) எளிமை இல்லாமலும், சிக்கல் நிறைந்தவையாகவும் உள்ளன. பாடமொழியில்

வழக்குச் சொற்களும் மிகையாக உள்ளன. ஆங்கிலத்தின் வளர்ச்சிக்குக் காரணம் தேவைக் கேற்ப அவர்கள் சொல்லை ஆள்வதுதான். ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அறிவியலிலும் தேவை நேரும்போது பயன்படுகின்றன. ஒரு பொருளை அல்லது கருத்தைக் குறிக்க ஒரே சொல் தான் என்று தீவிரமாகத் தீர்மானிக்கக் கூடாது.

கலைச்சொற்களில் ஒட்டுக்களின் பயன்பாடு:

அறிவியலில் முன் ஒட்டுக்களும் (Prefixed) பின்னொட்டுக்களும் (Suffixed) பெரும் பயனை விளைவிக்கின்றன. இவைகளைத் தமிழில் ஒழுங்கு செய்துகொள்ளுதல் வேண்டும். ஆங்கிலத்தில் எல்லா ஒட்டுக்களும் ஒரு பொருளையே தருகிறது என்று கூற முடியாது. பாரா (Para) என்னும் முன்னொட்டைக் கவனியுங்கள். பாரா (Para) நைட்ரோபென்சாயிக் அமிலத்தில், பாரா (Para) என்னும் முன்னொட்டு கார்பாக்சிலிக் தொகுதியின் மூன்றாவது நிலையில் நைட்ரோ தொகுதியில் உள்ளது என்பதைக் குறிக்கிறது. Paragraphic- என்பது ஒரு நோய், மூளையில் காயம் ஏற்படுவதால் நேரும் நோய். இந்நோயாளி எழுதும் போது எழுத்துக்கள் ஒழுங்கின்றி அமைகின்றன. இங்கு Para- என்பது ஒழுங்கின்மையைக் (Disorder) குறிக்கிறது. Para-Biotic - twins என்ற சொற்றொடரில் para-biotic- என்ற சொல். இருவர் பக்கவாட்டில் இணைக்கப்பட்ட நிலையைக் குறிக்கிறது. இந்த இரட்டையரைச் சியாமிய இரட்டையர் (Siamese Twins) என்பார்கள். இங்கு Para- என்ற முன்னொட்டு பக்கவாட்டில் என்று பொருள்படுகிறது. Para- என்ற ஒட்டுப் பின்னொட்டாகவும் பயன்படுகிறது. Primipara- என்ற சொல் ஒரு குழந்தையைப் பெற்ற தாயையும், Multipara- என்ற சொல் பல குழந்தையைப் பெற்ற தாயையும் குறிக்கும். Primipara, Multipara- என்ற சொற்கள் ஒட்டுகளின் புணர்ச்சியிலேயே விளைந்தவை என்பதையும் கவனியுங்கள். அறிவியலில் ஒரே ஒட்டு இடத்திற்குத் தக்கவாறு பல பொருள்களையும் கொடுத்து நிற்கிறது. ஆங்கில அகராதியைப் புரட்டினால், ஒரே ஒட்டு பல பொருள்களைத் தருவதைக் காணலாம்.

குறியீடுகள், வாய்ப்பாடுகள், சமன்பாடுகள்:

குறியீடுகள், வாய்ப்பாடுகள், சமன்பாடுகள் ஆகியவற்றை ஆங்கிலேயரும், அமெரிக்கரும், ஆங்கில மொழியில் பயன்படுத்துவதைப் போல நாம் பயன்படுத்தலாம். அராபிய எண்களையும் பயன்படுத்தலாம். இதனால் சிக்கல் இப்பொழுது தவிரும் என்பது மெய். ஆனால் இக்குறியீடுகளும், வாய்ப்பாடுகளும், சமன்பாடுகளும், எண்களும் அனைத்துலகக் கோட்பாடு என்று நமக்குச் சொல்லப் படுகிறது. இக்கருத்து எவ்வளவு மெய் என அறிய வேண்டும். ஆங்கிலம் அல்லாத பிறமொழி மக்கள் இவைகளை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆராய வேண்டும்.

மேலும் ஒரு குறியீட்டுக்கு ஓர் அளவைக்கு ஒரு குறியீடு என்று அணுகியதேயில்லை. சில இயற்பியல் (physical Quantities) அளவைகள் பல குறியீடுகளைப் பெறுகின்றன. திசைவேகம் (Velocity) u, v, c- என்ற குறியீடுகளால் குறிக்கப்படுகிறது. அவாகாட்ரோ மாறிலி (Avogadre Constant) Na, I- என்ற இரு குறியீடுகளையும், அலை எண், சிக்மா என்ற குறியீடுகளையும் பெறுகின்றது. ஒரே குறியீடு பல இயற்பியல் அளவைகளையும் குறிக்கின்றது.

அனைத்துலக அளவை இயக்கம் (System Internation D Unite's) SI அலகுகளையும் குறியீடுகளையும், பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தாலும், பல பழைய அலகுகளும், குறியீடுகளும் கூடவே நிலைபெறுகின்றன. இரண்டு ஆட்சியும் நேர்கின்றன.

ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள்
அறிவியலிலும் தேவை நேரும்போது பயன்படுகின்றன.
ஒரு பொருளை அல்லது கருத்தைக் குறிக்க
ஒரே சொல் தான் என்று
தீவிரமாகத் தீர்மானிக்கக் கூடாது.

கலைச்சொல் தேர்வில் இணக்கமும் ஆயத்தின் பங்கும்:

ஆங்கிலத்தை நாம் அறிவோம் என்ற அளவில், அம்மொழி எவ்வளவு இணக்கமாகவும் (Accommodative) வளைந்து கொடுத்தும் (Flexible) சொற்களை ஏற்கிறது என்பதை அறிய வேண்டும்.

தூய மொழிப்போராட்டம் எல்லா மொழியினரிடமும் உண்டு. இத்தாலியில் 1582-ஆம் ஆண்டு Accademia Della Cruaea நிறுவப்பட்டது. 1635-இல் பிரெஞ்சு ஆயம் (French Academy, I 'Academic' Francaise) தோன்றியது. மொழி ஆட்சியை வரையறை செய்தல், (Standardisation), தெளிவு செய்தல் (Refining), முடிவாக்கல், (Fixing), இசைகளின் கோட்பாடு, ஆங்கிலத்திலும் மொழி ஆட்சியை வரையறுக்க ஓர் ஆயம் தேவை என்று ஆடிசன், டிரைடன், ஸிவிப்ட் (Swift) ஆகியோர் கருதினர். இங்கிலாந்தில் 1662-இல் நிறுவப்பட்ட மன்னர்

கழகம் (Royal Society) அறிவியல் சிந்தனைகளுக்கே முன்னுரிமை தந்தது; மொழி அறிவுக்கு அன்று; ஆங்கிலேயர்கள் தாங்களாகவே சிந்திக்கவும், செயல்படவும் எந்த ஆயமும் தடைக்கல்லாக இருப்பதை விரும்பவில்லை. இத்தகைய விடுதலை வேட்கையின் காரணமாகத் தீவிரமான ஒரு மொழி ஆயத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை. பிரெஞ்சு ஆயத்தால் நன்மையை விடவும், தீமையே மிகுதி யாக நேர்ந்ததாகப் பலர் கருதினர். பிரிஸ்ட்லே (Joasph Prieatley) பெரிய அறிவியல் அறிஞர். மொழி அதிகாரியும் கூட, 'இலக்கணம்' (Grammar) என்ற நூலை யாத்தவர். அதில் இவர் மொழி ஆயத்தின் தேவையை மறுக்கிறார்.

"ஒரு மொழியிலுள்ள சொற்களின் பயன் பாடு குறித்து நன்கு அதை அறிந்து, அதை உறுதிப் படுத்திப் புழக்கத்தில் கொண்டு வருவதற்கென அதிகாரப்பூர்வமான ஒரு பொது மன்றம் அமைக்கப் படும். அதன் முதன்மைத்திட்டம், இதைச் செயல் படுத்துவதுதான் அதற்காகத் தன்னம்பிக்கையோடும், ஆர்வத்தோடும், மிகுந்த எதிர்பார்ப்போடும் சில அறிஞர்கள் செயல்படுவதுண்டு. ஆயினும் அவர்கள் கையாளும் முறைகள் முழுவதும் ஏற்புடையதாக இருப்பதாகச் சொல்வதற்கில்லை. இதற்காக அவற்றைத் தவறாக மதிப்பிட்டு ஒதுக்கிவிடவோ, வேறொரு மொழியோடு பொருத்திப் பார்க்கவோ வேண்டியதில்லை." என்பது அவர் கூற்று.

ஒரு மொழியின் பேச்சு வடிவங்கள் காலப் போக்கில் வளர்ச்சியுற்று தங்களது தகுதியையும், திறனையும் நிலைப்படுத்திக் கொள்ளும். இதில் நாம் ஐயம் கொள்ள வேண்டியதில்லை. சொற் பயன்பாடு குறித்த அறிஞர்கள் கருத்துக்களிலுள்ள நிறை, குறைகளை ஆராய்ந்து காலங்கருதி நல்ல தொரு முடிவை எடுக்க இயலும். அது மெல்ல நடந்தாலும், உறுதியானதொரு முடிவைத்தரும். அறிஞர்களின் செயல்பாட்டிற்கு அவர்களின் வேகமும், ஆய்வுத்திறன் குறைவும் காரணம் ஆகலாம்.

தூய ஆங்கிலக் கழகமும் (Society for Pure English) மொழி வளர்ச்சியில் மக்களுடைய பங்கை வரவேற்றது.

"ஒரு மொழி தன்னுடைய தோற்றம் பயன் பாடு ஆகியவற்றில் தன்னியல்போடு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, சுதந்திரமாகச் செயல்படும் அல்லது செயல்பட வேண்டும் என்பது நமது நம்பிக்கையாகும். அந்த மொழியில் சிறந்த சொற் களை உருவாக்கிப் பயன்படுத்துவோர் படிப்பறி வில்லாத சாதாரண மக்கள்தான். அந்தப் பொது வழக்கிலுள்ள சொற்களில் பொருத்தமானவற்றை, தகுதியானவற்றை அறிவியலார் செயற்கையாக உருவாக்கும் சொற்களுக்குப் பதிலாக எடுத்தாள்வது ஏற்புடையதாகும்."

இது போன்று மற்றொரு கருத்தாக, கே.எல்.பிக் (K.L. PIKE). எனும் மொழி அறிஞர் ஒருவருக்கு நம்பிக்கையற்ற அழகான பெண்ணைவிட அழகற்ற நம்பிக்கையுள்ள பெண்ணே ஏற்றவள் என்பதைப் போன்று சொல்லில் அழகு முக்கியமல்ல, கருத்தே (Concept) முக்கியம் என்பார்.

தமிழ் மொழியில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்களை ஒரு முறை சார்ந்து திருத்தவும், செப்பம் செய்யவும், வரையறுக்கவும் (Standardisation of Terms) ஒரு அமைப்பு உடனடியாகத்தேவை என்ற ஆழமான எண்ணம் நிலவுகிறது. இந்த எண்ணம் வளர்ச்சியின் அறிகுறியே என்றாலும் சில அறிஞர் களின் குழுவைக் கொண்ட ஓர் அமைப்பு தன் தீர்மானத்தை முடிவானதாகவோ, மக்கள் மீது திணிக்கக் கூடியதாகவோ கருத முடியாது. ஓர் அமைப்பின் தீர்மானம் ஒரு வழிகாட்டியே. ஆனால் ஒவ்வொரு காலகட்டத்தின் தேவையைப் பொறுத்தும், இத்தீர்மானம் நிற்கும் அல்லது மாறும் அல்லது அழியும்.

தமிழைப் பொறுத்தவரையில் ஓர் ஆயம் அமைத்துக் கொள்ளலாம். ஆனால் துறைஅறிவு மிக்கவரே அத்துறையைச் சார்ந்த சொல்லாட்சியைத் தீர்மானம் செய்ய வேண்டும். தமிழ் மொழி அறிவு மிக்கவர் அவருக்குத் துணை நிற்க வேண்டும். இத்தீர்மானம் நிலைப்பதும், அழிவதும், அதன் தகுதியைப் பொறுத்தது. ஒரு சொல்லாட்சி தகுதி இல்லாமல் அழிந்து போவதால் மொழி அழிந்து போகாது. புதிய தகுதியுள்ள சொற்கள் தோன்றும், துறைஅறிவு மிக்கார், மொழியியல்அறிவு மிக்கார், தமிழ்அறிவு மிக்கார் என்ற வரிசையில் ஒவ்வொரு துறை ஆயமும் அமைய வேண்டும். இதில் மேலோர், கீழோர் பாகுபாடு இல்லை என்பதை அறிய வேண்டும். உண்மையில், ஒரு சொல் வரவேற்கப்படுவதும், வழங்கப்படுவதும், ஒதுக்கப்படுவதும் மக்களிடம்தான் உள்ளது.

ஆங்கிலேயர் கடைப்பிடிக்கும் இணக்கத் தையும், வளைத்துக் கொடுக்கும் திறனையும், நம் தமிழர்கள் ஏற்றுத் தமிழ் அறிவியல் கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட வேண்டும். கலைச் சொற்களைத் தீர்வு செய்யும் அமைப்பின் தீர்மானம் தேவைக்கேற்ப வழிகாட்டியாக அமைய வேண்டுமே தவிர, பல புதுமையான வளர்ச்சியான சிந்தனை களுக்கும், செயல்பாடுகளுக்கும் தடைக்கல் ஆகக் கூடாது. கலைச்சொற்களைத் தீர்வு செய்யும் அமைப்பு என்பதைவிட ஆய்வு செய்யும் அமைப்பு என்பது பொருந்தும்.

அறிவு வளர்ச்சியும், வாழ்க்கை மேம்பாடும்:

மாணவர்களை அறிவியல் கற்பதில் மிகுந்த ஆர்வம் உடையவராக ஆக்குதல் வேண்டும். இலக்கிய எழுத்து, பேச்சுப் போட்டிகளைப் போல, அறிவியல் எழுத்து, பேச்சுப் போட்டிகள் நிகழ்த்தப் பெறுதல் வேண்டும். நூல்களைப் படிப்பதில் ஆர்வம் மிகுந்ததால்தான், நூல்களை வாங்கும் ஆர்வம் மிகும். நிறைய நூற்கள் வாங்கப் பட்டால் தான் நிறைய நூல்கள் புதிதாக எழுதப் படும். நிறைய, புதிய நூற்கள் எழுதப்பட்டால் தான், கலைச்சொல்லாக்கத்தில் தேவையான, விரும்பத் தகுந்த வரையறைகளைச் செய்ய முடியும். தமிழ் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தது.

ஒளியியலில் ஒரு பண்பு வியப்பைத் தரும். ஒரே வழி ஒளி அலையாக இயங்குகிறது. இதை அலை - துகள் இரட்டைத் தன்மை (Wave Particle Dualism) என்பார்கள். இரண்டு தன்மையும் ஒக்கும். முட்டையிலிருந்து கோழியா? கோழியிலிருந்து முட்டையா? வித்திலிருந்து மரமா? மரத்திலிருந்து வித்தா? பலர் கேட்ட வினாக்கள், இரண்டும் ஒப்பே. தமிழர் அடிப்படையில் வாழ்க்கை வளம் பெற்றலின் அறிவு வளர்ச்சியா? அறிவு வளம் பெற்றபின் வாழ்க்கை மேம்பாடா? நாம் கேட்கும் வினாக்கள் ஒன்றை ஒன்று சார்ந்தது. ஆனாலும் அடிப்படை வாழ்க்கை வளம்பெற்ற பின்தான் பிற நிகழும். அந்நாள் கனியும் பொழுது, தமிழர் அறிவு விரைவில் மேம்பட நாம் அடிப்படை கோல வேண்டும்; ஆயத்தமாக வேண்டும். அத்தகைய முயற்சியின் ஒரு கட்டம் தான், நாம் தேவையான விரும்பத்தகுந்த வகையில் கலைச் சொற்களை வரையறை செய்வது ஆகும்.

ஒரு சொல் தெளிதல் - முழுச் சொற்கள்:

Fungus- என்ற சொல்லுக்குப் ‘படை’, ‘பங்கி’, ‘பூஞ்சை’, ‘பூசணம்’, என்ற சொற்கள் தமிழாகத் தரப்படுகின்றன. இதில் வழக்கில் உள்ள காளான் அல்லது பூசணத்தை ஏற்றுப் பிறவற்றைத் தவிர்க்கலாம். Cleft Palate- அண்ண அறவு, அண்ணப் பிளப்பு என்று கொள்ளப்படுகிறது. அறவு, பிளப்பு இரண்டும் ஒக்கும் என்றாலும், ஒன்றை இயற்கையாக நேர்வதற்கும் மற்றதைச் செயற்கையாக நேர்வதற்கும் கொள்ளலாம்.

ஒட்டுக்கள்:

Pseudo- என்னும் முன்னொட்டு ‘போலி’ என்றும் ‘பொய்’ என்றும் பெயர்க்கப்படுகிறது. ‘போலி’ போதுமானது. Anti- என்ற முன்னொட்டுக்கு ‘எதிர்ப்பு’, ‘முரண்’, ‘மறி’, ‘பகை’, ‘அடக்கி’, ‘அகற்றி’, ‘ஒழிப்பு’ என்ற பல தமிழ்ச் சொற்கள் தரப்பட்டிருக்கின்றன. ‘முரண்’ என்ற சொல் முற்றும் பொருந்தும். Itis- என்ற பின்னொட்டுக்குக் கூறப்பட்டுள்ள ‘அழல்’, ‘அழற்சி’, ‘வீக்கம்’ என்ற சொற்களில் ‘அழற்சி’ மருத்துவ இயலில் நிலை பெற்றுள்ளது.

இடத்திற்குத் தக்க சொல்லும் பொருளும்:

Allergy- மாற்றுவினை, இச்சொல்லிலும் ‘ஒவ்வாமை’ சிறந்ததாகக் கருதப்படுகிறது. ‘உவ்வா’ என்ற வழக்கு இப்பொழுது அரிதாக உள்ளது. இது ‘புண்’ அல்லது ‘காயத்தைக் குறிக்கும்’. ‘ஒவ்வா’, ஒவ்வாமை என்பதன் மரூஉ ‘உவ்வா’ Allergy- ஒவ்வாமை என்ற நோயை மட்டுமன்று; இடத்திற்குத் தக்க Incompatible- என்ற மருந்தியல் (pharmacological) நிலையையும் குறிக்கலாம். Lung- ‘நுரையீரல்’, ‘சுவாசப்பை’ எனப்படுகிறது. நுரையீரல் தூய தமிழ் ஆதலால் பயன்படுத்திக் கொள்ளலாம். ‘Cervix’- என்ற இலத்தீன் சொல்லுக்குக் ‘கழுத்து’ என்று பொருள். ‘Cervix of Uterus’- என்னும் போது ‘சூற்பை கழுத்து’ என்னாமல், ‘சூற்பை வாய்ப் பகுதி’ என நம் மொழி அமைதிக்கு முதலிடம் தந்து மொழி பெயர்த்திருப்பது நன்று.

> கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட வேண்டும்.
> கலைச் சொற்களைத் தீர்வு செய்யும் அமைப்பின்
> தீர்மானம் தேவைக்கேற்ப வழிகாட்டியாக
> அமைய வேண்டுமே தவிர,
> பல புதுமையான வளர்ச்சியான சிந்தனைகளுக்கும்,
> செயல்பாடுகளுக்கும் தடைக்கல் ஆகக் கூடாது.

ஒலி இணக்கமாக்கல்:

‘சீக்கு’ என்னும் சொல் ‘Sick’- என்ற ஆங்கிலச் சொல் நகர்ப்புற மக்களிடம் பெரும்பாலும் பயிலப்பட்டாலும், ‘நோய்’ என்னும் தமிழ்ச்சொல் நெடிய காலமாக வேரூன்றிய சொல்லாகும். ‘Carpus’- என்பது மணிக்கட்டைக் (Wrist) குறிக்கும். ஒலி இணக்கமாகக் ‘காப்பு’ என்று மொழிப் பெயர்க்கப் பட்டுள்ளது. ‘மணிக்கட்டு’ வழக்கில் உள்ளதால் ‘காப்பு’ என்னும் சொல்லைத் தவிர்க்க வேண்டும். ஒலி இணக்கமாக உள்ள போது, பிற சொற்கள் கிடைக்காத வரை சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்து ஆளலாம்.

வழக்குச் சொற்கள்:

'இதயம்' என்ற சொல் பெருவழக்கிலுள்ளது. 'நெஞ்சாங்குலை' என்ற தூய தமிழ்ப் பெயர்ப்பு கால் கொள்ளவில்லை. Heart- என்பதற்கு இதயம், இருதயம், மார், நெஞ்சு என்ற சொற்கள் பயன்படு கின்றன. 'இதயம்'. என்ற பெருவழக்குச் சொல்லையே தேரலாம். 'இருதயம்' நெருடலானது. Heart Attack- என்னும்போது மாரடைப்பையும் Heart Burn- என்னும்போது, 'நெஞ்செரிவையும்' பயன் படுத்தலாம்.

புதிய சொல் ஆக்கல்:

Aerosol- கூழ்மத்தில் ஒருவகை, பிரிகை நிலைமை நீர்மமாகவும், பிரிகை ஊடகம் வாயு வாகவும் அமைகிற கூழ்மம். இதற்கு 'முகில்', 'தூசிப் படலம் அதிகரிப்பு' என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. முகிலும் தூசிப்படலும் 'Aerosol'- க்கு எடுத்துக்காட்டுகள், 'Aerosol'- க்கு மொழிபெயர்ப்புச் சொற்கள் ஆகா. இதற்குப் புதிய சொல் ஆக்கியுள்ளார்கள். அச்சொல் 'காற்றுக் கரைசல்' ஆகும். 'Fits' வலிப்பு, 'Epilepsy'- வலிப்பு உள்ள நோய். வலிப்பு பிற காரணங் களாலும் நேரலாம். ஆதலால் 'Epilepsy' இன் வகை களான 'Grapdmal, Petitmal'- என்ற சொற்களுக்குப் பெருவலிப்பு சிறு வலிப்பு, என்ற சொற்கள் போதுமானதாக இல்லை. புதிய சொற்களைப் படைக்க வேண்டும்.

கலைச் சொற்கள்:

சொற்களுக்குக் கூச்சம் கிடையாது. ஆனால் சொல்பவர்களுக்குக் கூச்சம் நேர்வதால் குழப்பம் உண்டாகிறது. Anus- குதம், எருவாய், கழிவாய். 'கழிவாய்' பொதுச்சொல், கழிவு அல்லது எச்சம், குதம் வழியே மட்டுமன்று; பிற உறுப்புக்கள் வழியேயும் வெளியேறுகிறது. ஆதலின் 'கழிவாயைத்' தவிர்க்க வேண்டும். 'குதம்'. ஏற்புடைய சொல்; வழக்கில் உள்ள சொல். மருத்துவர்கள் கூச்சப் பட்டால் நோய் குணமாகாது. சொல் ஆட்சியில் கூச்சப்பட்டால் பொருள் விளங்காது.

தவிர்க்கப்பட வேண்டியவை:

Cirrhosis- 'ஈரல் நோய்', இப்பெயர்ப்பு தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் ஈரல் நோய்க்குள் ஒன்று 'Cirrhosis'. மேலும் ஈரல் உள்ளிட்ட பல உறுப்புக்கள் கடினமாவதைக் குறிக்கும் சொல் 'Cirrhosis'. 'ஈரல் இறுக்கி நோய்' என்பதில் நோயைத் தவிர்த்து 'ஈரல் இறுக்கி' எனலாம். 'நோய்' மிகையான சொல். 'மகோதரம்' என்ற சொல் Cirrhosis-க்கு மட்டுமன்று, Ascites-க்கும் பயன்படுத்தப்படுகிறது. ஒரே சொல் இரண்டு வகை நோய்க்குப் பயன்படுத்தப்படுதல் ஆகாது. சிக்கல் நேரும். Cirrhosis- என்பதற்கு 'இறுக்கி' என்றும். Ascites- என்ற சொல்லுக்குத் தமிழ்ச் சொல் கிடைக்கும்வரை 'மகோதரம்' என்ற பிற சொல்லையும் ஏற்கலாம்.

வழக்கிலுள்ள சொற்களை எடுத்தாளுதல்:

மக்கள் பேச்சு வழக்கில் பல சொற்கள் கலைச் சொற்களாகப் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன. எடுத்துக்காட்டாக 'இரத்த சோகை', இச்சொல் பெரும்பாலும் எல்லோருக்கும் பழகிய சொல். Anaemia- என்பதற்கேற்ற சொல்லாக இதனைப் பயன்படுத்திக் கொள்வதில் தடை இல்லை.

(அ) பிற நூல்களில் கண்ட சொற்களை எடுத்தாளல்:

சில கருத்துக்களை விளக்கத்தக்க சொற்கள் மக்கள் வழக்கில் இல்லாது போகலாம். ஆனால், மருத்துவ நூல் எழுதிய ஆசிரியர்கள் தகுந்த சொற் களைப் பயன்படுத்தியிருக்கலாம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முதலியவை சில மருத்துவ நூல்களை வெளியிட்டு உள்ளன. கலைக்கதிர் சில மருத்துவ கட்டுரை களை வெளியிட்டுள்ளது. இவற்றில் பயன்படுத்தப் பட்ட சொற்களில் ஏற்ற சொற்களை எடுத்துக் கொள்ளுதல் தரும்-

(எ.கா.): அறுவை மருத்துவம் - Surgery

உடல் கூறியல் - Anatomy - முதலியவை.

(ஆ) ஆங்கில – தமிழ் அகராதிகளைப் பயன் படுத்தித் தக்க சொற்களைக் காணல்:

டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரின் ஆங்கிலம்- தமிழ் அகராதி கலைக்களஞ்சியம் போன்றவைகள் கலைச்சொல் பயன்பாட்டுக்கு மிகவும் உதவும். அதே போல, இலங்கை அரசு, தமிழக அரசு வெளியிட்டுள்ள சில கலைச்சொல் பட்டியல்களும் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொகுத்த கலைச்சொல் பட்டியல்களுடன் டாக்டர் சாமி சண்முகம், முனைவர் மணவை முஸ்தபா, டாக்டர் சம்பத்குமார் அகராதிகளும் உதவும்.

சொல்லாக்கம்:

மக்கள் வழக்கு, நூல்கள், அகராதிகள், கலைச் சொல் பட்டியல்கள் ஆகியவற்றில் காணப்படாத அல்லது காணப்பட்டும் பொருத்தமில்லாததாகக் கருதப்பட்ட சொற்களுக்குப் பதிலாக புதிய சொற்களை உருவாக்கிக் கொள்ளுதல்.

Hernia- என்பது Hronas- என்கிற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. இதை Sprut என ஆங்கிலத்தில் வழங்கினர். இதற்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாகக் 'குடல் பிதுக்கம்' என்பது உருவாக்கப்

பட்டது. பலரும் Hernia- 'குடல் இறக்கம்' என்றனர். அதைவிட, 'குடல் பிதுக்கம்' என்பதே பொருளுடையதாகத் தோன்றியதால், இச்சொல் உருவாக்கப் பெற்றது.

சொல் தேர்வு:

ஒரு கருத்தை விளக்கத் தமிழில் ஒன்றுக்கு மேற்பட்ட சொல் காணப்படும். உதாரணம்: Inflammation- என்பதற்கு அழற்சி, அதாளம் என்பவை. இவற்றுள், அதிகப் பயிற்சியும், தெளிவும் உள்ள சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கையாளுதல், 'அழற்சி' என்பது 'அதாளம்' என்பதைவிட வழக்குப் பயிற்சி உள்ள சொல்லாகையால், அதை எடுத்துக் கொள்ளுதல் தகும்.

தமிழ்ப்படுத்தல்:

தக்க சொல்லைக் காணுதல்/ உருவாக்குதல் இயலாத கட்டத்தில், சொல்லுக்காகக் காத்திராமல், சர்வதேசச் சொற்களை அப்படியே தமிழ்ப்படுத்திக் கொள்ளுதல். protoblasms- புரோட்டோபிளாஸம்

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே":

சில சொற்களைச் சொல்லுதல் நாகரிகம் இல்லை எனக் கருதப்பட்டது. இது பொதுவான பேச்சு/ எழுத்து வழக்கில் சரியாகப்படலாம். ஆனால், ஒரு குறிப்பிட்ட பொருளைப்பற்றி எழுதும் விஞ்ஞான நூற்களில் இது சரிப்பட்டு வராது. 'முலை' என்று சொல்வது கூடாது. 'மார்பு' என்று தான் சொல்ல வேண்டும் என்பார்கள். ஆனால், மருத்துவஇயலில், மார்பு, முலை ஆகியவை வெவ்வேறு உறுப்புக்களைக் குறிக்கும். இவற்றில் வரும் நோய்களுக்கு சிறிது மாறுபட்டவை. இவ்விடங்களில் மார்பு, முலை என்பதைத் தனித்தனியாகக் குறிக்க வேண்டும்.

பழைய தமிழ்ச் சொற்களுக்குப் புதிய பயன்பாடு தருதல்:

தமிழில் பொருள் மிக்க, ஆனால் வழக்கில் இல்லாத சொற்கள் எண்ணிலடங்காமல் உள்ளன. இவைகளை அறிவியலில் ஆளலாம். புதிய வழக்கு நேரும். ஒரே சொல்லின் பல வடிவங்களை, அல்லது ஒரே சொல்லின் பல பொருள்களை, இவ்வழக்கால் தவிர்க்கலாம். எடுத்துக்காட்டாக, அறிவியலில் மிகவும் பயன்படும் Abstract- என்ற சொல் 'சுருக்க உரை' என்று மொழி பெயர்க்கப் படுகிறது. அறிவியல் கட்டுரையின் Abstract வெறும் சுருக்கம் அன்று. கட்டுரையில் மிக முக்கியமான கருத்தைக் கொண்டு விளங்குவது. புறப்பொருள் வெண்பா மாலையில் ஒரு நூற்பாவின் உட்கிடக் கையைக் கொண்டு நடக்கும் அடிகளுக்குக் 'கொளு' என்று பெயர். Abstract- என்பதற்கு மிகவும் பொருத்தமான தமிழ்ச்சொல் 'கொளு' என்பதாகும்.

முடிவுரை:

இவ்வாறான அடிப்படைக் கோட்பாடுகள்; தமிழறிவும் எழுத்துத் திறனும் உள்ளவர்கள், அறிவியல் நூல், கட்டுரைகளை எழுத முற்படும் பொழுது வேற்று மொழிச்சொற்களுக்கு நேர்த் தமிழ் கலைச் சொற்களை உருவாக்க ஒரு வழி காட்டியாக அமையக்கூடும். இத்துடன் பொது மக்கள் வழக்கில் உள்ளதை, சரியான பொருளைக் குறிக்க வல்லதை எளிதான, அருவருப்பற்ற, காலத்திற்கேற்ற கருத்துக்களை உள்ளடக்கிய, சொற்செட்டும் பொருட் செறிவுடன் சுருங்கிய வடிவில் அறிவியல் நூலுக்கு முதுகெலும்பான கலைச்சொற்களை வடிக்க துணை நிற்கக்கூடும். ●

வாழ்த்துகள்



**ஆத்மாநாம் அறக்கட்டளை வழங்கும்
கவிஞர் ஆத்மாநாம் விருது - 2016
க.மோகனரங்கனின் 'மீகாமம்'
கவிதைத் தொகுப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.**

**ஆத்மாநாம் விருதுபெறும் க.மோகனரங்கனுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.**

தமிழாய்வில் தகவல் சேகரிப்பும் ஆய்வு நூலகங்களும்

ந.முருகேசபாண்டியன்

மேலை இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளின் தாக்கத்தினால் தமிழிலக்கியத் திறனாய்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பல்வேறு பரிமாணங்களுடன் இன்று விரிவடைந்துள்ளன. அறிவியல் வளர்ச்சி காரணமாகத் தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மேம்பாடுகள், தகவல் உருவாக்கம், தகவல் வெளியீட்டின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியுள்ளன. புறநிலைக் காரணங்களினால், செவ்வியல் இலக்கியப் பிரதியானது, புதிய பொருள் தரும் வகையில் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. பொதுக் கருத்தியலை உருவாக்கும் வகையில் செய்தி நிறுவனங்கள், அச்சு ஊடகங்கள், காட்சி ஊடகங்கள் போன்ற தகவல் தொடர்பு அமைப்புகள், ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. கல்லூரிகளில் தமிழ் படிக்கிறவர் களின் எண்ணிக்கை கடந்த சில பத்தாண்டுகளில் பன் மடங்கு பெருகியுள்ளதால், தமிழாய்வில் வீச்சான எழுச்சி தோன்றியுள்ளது. இன்று அகலமாகவும், ஆழமாகவும், செயற்படும் தமிழாய்வின் பரப்பு, அண்மைக்காலத்தில் இளம் ஆய்வாளரின் பார்வைப் புலனுக்கு அப்பால் பரந்துள்ளது. ஆய்வு மேற்கொள்ள முதன்மைச் சான்றுகள், துணைமைச் சான்றுகள், தரவுகள், ஆய்வு மூலங்கள், புள்ளி விவரங்கள் சேகரித்தல் போன்றவை விரிவடைந்துள்ளன. இத்தகு சூழலில் போதிய நூலக வசதியின்மை, நூலகம் பற்றிய அறியாமை காரணமாக ஆய்வாளர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் அல்லல்படும் நிலையேற்பட்டுள்ளது. அறிவியல், தொழில்நுட்பத் துறைகளுடன் ஒப்பிடு கையில் கலைத்துறைகளில் தகவல் வெளியீடு மிகக் குறைவெனினும், தகவல் சேகரிப்பும் பதிவும் இன்னும் முறைப்படுத்தாமலே உள்ளன. குறிப்பாகத் தமிழ் தொடர்பான ஆவணங்களை இன்னும் முறையாகச் சேகரித்தல், பதிவு செய்தல் நடைபெறவில்லை. இன்று தமிழ் நூல்களும் பத்திரிகைகளும் ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, கனடா, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மொரிஷியல், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் இருந்து வெளியிடப்படுகின்றன. உலகம் முழுக்க மின்னணு ஊடகம்மூலம் இணையத்தில் வெளியாகும் பல்வேறுபட்ட தமிழ் ஆவணங்கள், பதிவு செய்யப்படாத நிலைதான் உள்ளது. இந்நிலையில் தமிழாய்வை முழுமையானதாகவும், தரமுள்ளதாகவும் ஆக்கிட அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழாய்வைப் பொறுத்தவரை கருத்தியலடிப் படையில் ஆய்வுகள் குறித்தும், பருண்மையான நிலையில் ஆய்வு மூலங்களின் சேகரிப்பும், பதிவு குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. ஓலைச்சுவடிகள், செப்புப் பட்டயங்கள் கல்வெட்டுக்களுக்குப் பின்னர் அச்சடிக்கப்பெற்ற தமிழ் நூல்களின் பயன்பாடு, கி.பி. 16-ஆம் நூற்றாண்டில்தான் தொடங்குகிறது. எனினும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பிற்பகுதிவரை தமிழ்ப் புத்தகங்கள், பத்திரிகைகள் வெளியீட்டில் தேக்க நிலை நிலவியது. முதல் உலகப்போருக்குப் பின்னர், கல்வியறிவு பெற்ற தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, கேளிக்கை பயன்பாடு காரணமாகத் தமிழ் ஆவணங்கள் வெளியீடு அதிகரித்த போதிலும், அவற்றைச் சேமித்தலும் பாதுகாத்தலும் சிறிய அளவில்தான் நடைபெற்றுள்ளன.

தமிழ்மொழி இலக்கிய இலக்கண ஆய்வினைக் கல்விப்புல ஆய்வுகள், சிறுபத்திரிகை சார்ந்த ஆய்வுகள், பயன்பாட்டு ஆய்வுகள் என மூன்றாகப் பிரிக்கலாம். பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், கல்லூரிகள் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பி.எச்.டி., எம்.ஃபில்., டி. லிட்., போன்ற பட்டங்கள் பெறு வதற்காகச் செய்யப்படும் ஆய்வுகள், பெரும்பாலும் 'ஆய்வு நெறிமுறை' என்ற சட்டகத்திற்குள்ளாக அடங்கி யுள்ளன. ஆய்வாளரின் சுயசிந்தனை, முயற்சிகள் வடி கட்டப்பட்டு, தீவிரத் தன்மையற்று முனைவர் பட்டம் பெறுவதற்காகப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப் படுகின்ற ஆய்வேடுகளின் தரம் குறித்துப் பேராசிரி யர்கள் கவலை தெரிவிக்கின்றனர். பெரும்பாலான ஆய்வேடுகள், புத்தகமாக வெளியிடுவதற்கான தகுதிகள் அற்று உள்ளன. ஆய்வேடுகளின் மொழிநடையும் தட்டையாக உள்ளது. அன்றாட வாழ்க்கையில் வருமானத் திற்காகப் பிற தொழில் செய்கின்ற விமர்சகர்கள், சுய ஆர்வம், இலக்கிய விருப்பம் காரணமாகத் தீவிரமான பிரக்ஞையுடன் சிறுபத்திரிகைகளில் பிரசுரிக்கின்ற கட்டுரைகள் ஆழமானவையெனினும், கல்வித்துறை சார்ந்தவர்களின் கவனிப்பு அற்றனவாகவே உள்ளன. அரசியல், மொழி, சமயம் சார்ந்து ஏதோவொரு பயன்பாடு கருதி எழுதப்படுகின்ற ரசனை அடிப்படை யிலான விமர்சனங்கள், வாசகரிடையே பொதுக் கருத்தியலை வலிந்து உருவாக்குகின்றன. அதே நேரத்தில் படைப்பிலக்கிய நூற்கள் வெளியீடானது பன்மடங்கு கூடியுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டி யுள்ளது. பொதுவாகத் தகவல் மூலங்களின் வகைகள் பின்வருமாறு:

1. ஆவண மூலங்கள் 2.ஆவணமற்ற மூலங்கள்

முதன்மைச் சான்றுகள்

1. இதழ்கள், மின் இதழ்கள் (மூலப் படைப்புக்கள்)
2. ஆய்வறிக்கைகள்
3. கருத்துப்பதிவுகள்
4. அரசாங்க வெளியீடுகள்
5. மூல நூல்கள்

துணைமைச் சான்றுகள்

1. இதழ்கள், மின் இதழ்கள் (திறனாய்வு தொடர்புடையன)
2. ஆய்வுச் சுருக்கங்கள்
3. பார்வைநூல்கள்
   அ) கலைக்களஞ்சியம்
   ஆ) அகராதிகள்
   இ) கையேடுகள்
   ஈ) அட்டவணைகள்
4. நூல்கள்
5. அறிக்கைகள்
6. பாடநூல்கள்

மூன்றாம் நிலைச் சான்றுகள்

1. ஆண்டுப் புத்தகங்கள்
2. துணைநூற் பட்டியல்கள்
3. மூலநூலுக்கான வழிகாட்டிகள்

இத்தகைய தகவல் மூலங்கள் வழியாக வெளியிடப் படும் தமிழ் ஆவணங்களின் நிலை, கட்டுப்பாடற்ற நிலையில் உள்ளது. இந்நிலையில் தமிழாய்வில் புதிதாக நுழையும் ஆய்வாளர், காத்திரமான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலையேற்பட்டுள்ளது.

தமிழாய்வு மூலங்களின் பரவல் நிலை

பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளின் காலனியாதிக்க நாடாக இந்தியா இருந்தமையால், கி.பி. 1947க்கு முற்பட்ட முக்கியமான தமிழ் ஆவணங்கள் லண்டன், பாரிசிலுள்ள ஆவணக் காப்பகங்களில் உள்ளன. இத்தாலியிலுள்ள வாடிகன், ஜெர்மன், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளில் உள்ள பழமையான நகரங்களிலும் தமிழ் ஆவணங்கள் பாதுகாக்கப்படுகின்றன. பல்வேறு காரணங்களுக்காக உலகமெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள், தற்சமயம் வாழ்கின்ற நாடுகளின் நூலகங்களில் தமிழ் ஆவணங்கள் காணப்படுகின்றன. இந்தியாவின் பிற மாநிலங்களிலும் தமிழ் ஆவணங்கள் பரவிக் கிடக்கின்றன. இந்தியாவில் தில்லிப் பல்கலைக் கழகம், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம், திருவேங்கடம் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் பல்கலைக்கழகம், பனாரஸ் பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் செயல்படுகின்ற தமிழ்த்துறையில் நடைபெறும் ஆய்வுகள், மேலைநாடுகளில் உள்ள பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளில் தமிழ் தொடர்பாக நடத்தப்படும் ஆய்வுகள் எனத் தமிழாய்வு மூலங்கள் உலகமெங்கும் பரவியுள்ளன.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் தமிழர் தொடர்பாக உலகின் பல பகுதிகளிலிருந்து, பத்திரிகைகள், நாளிதழ்கள், இதழ்கள் வெளிவருகின்றன. குறிப்பாகப் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் கணினியின் துணையுடன், நூற்றுக்கணக்கான பத்திரிகைகளை ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் இருந்து வெளியிட்டு வருகின்றனர்.

உலகமெங்கும் பரவிக்கிடக்கும் தமிழ் ஆவணங் களைப் பற்றிய அறிமுக அறிதல்கூட இல்லாதநிலையில் முழுமையான தரவுகளைத் தேடும் இன்றைய ஆய்வாளர் களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன

ஆய்வேடுகள்

பல்கலைக்கழகங்கள், ஆய்வுநிறுவனம் கல்லூரி களில் இதுவரை நடைபெற்ற தமிழாய்வுகள் தொடர் பான ஆய்வேடுகளின் நூற்பட்டியல் முழுமையான அளவில் தொகுக்கப்படவில்லை. ஆய்வேடுகளின் ஆய்வுச் சுருக்கங்கள் பணியானது, இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது. இந்நிலையில், ஒரு குறிப்பிட்ட துறையில் ஆய்வு செய்யத் திட்டமிடும் ஆய்வாளருக்கு, அத்துறையில் இதுவரை நடைபெற்றுள்ள முன் ஆய்வுகள் குறித்து அறிய வாய்ப்பில்லாத நிலையே உள்ளது. எனவே அவர் திட்டமிடும் ஆய்வு குறித்துப் பருண்மையாக கருதுகோளினை வகுப்பதில் சிக்கல் உண்டாகிறது. இதனால் தமிழ்நாட்டில் வெவ்வேறு இடங்களிலுள்ள தமிழாய்வு மையங்களில் ஒரே நேரத்தில் ஒரே தலைப்பின் கீழ் முனைவர் பட்டத் திற்காக, நான்கைந்து ஆய்வாளர்கள் ஆய்வு மேற்செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக சு.தமிழ்ச் செல்வியின் நாவல்கள் பற்றி தமிழகப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் இன்று ஒரேவகையான முனைவர் பட்ட ஆய்வுகள் அதிக எண்ணிக்கையில் நடைபெறுகின்றன. செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் செயல்பாடுகளுக்குப் பின்னர், முன்னர் நடைபெற்ற சங்க இலக்கிய ஆய்வுகளை முனைவர் பட்டத்திற்காக நகலெடுப்பது, கணிசமாக அதிகரித் திருக்கிறது. இத்தகைய ஆய்வுகளினால் ஆய்வாளருக்கு முனைவர் பட்டம் கிடைக்கிறது என்பதனைத் தவிர வேறு சிறப்பில்லை. இந்நிலைமையை மாற்றிட முனைவர் பட்ட ஆய்வேடுகளின் நூற்பட்டியலும், ஆய்வுச்சுருக்கங்களின் பட்டியலும் தயாரிக்கப் படுவதுடன், ஒவ்வொரு ஆண்டும் அண்மைக்கால ஆய்வுகள் குறித்த தனித்த நூற்பட்டியலும் தயாரிக்கப் பட்டு வெளியிடப்பட வேண்டும்.

ஆய்வுக் கட்டுரைகள்

மூல நூல்கள் தொடர்பான ஆய்வறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள் பெருமளவில் இதழ்கள் அல்லது கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகளில் வெளியா கின்றன. பின்னர் அவை தனி நூலாக வெளியிடப் படுகின்றன. இவ்வாறு வெளிவந்துள்ள ஆயிரக்கணக்கான கட்டுரைத் தொகுப்பு நூல்களின் தன்மை, அளவு காரணமாக ஆய்வாளருக்குச் சிக்கல் தோன்றுகிறது. ஓர் ஆசிரியரின் கட்டுரைத் தொகுப்பினுள் இலக்கணம், புதுக்கவிதை, சிற்றிலக்கியம், நாவல் எனப் பல்துறை தொடர்பான கட்டுரைகள் அடங்கியுள்ளன. மேலும் சில ஆய்வாளர்கள் இணைந்து வெவ்வேறு இலக்கிய வகைகளில் எழுதிய கட்டுரைகள், ஒரே கட்டுரைத் தொகுப்பு நூலாக வெளியிடப்படுகின்றன. ஆய்வுக் கோவை, வையை, இளவேனில், பரல்கள், தேடல் போன்ற கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகளுடன், உயர்கல்வி நிறுவனங்கள், ஆய்வாளர் மன்றங்கள் நடத்துகின்ற கருத்தரங்குகளில் அளிக்கப்படும் கட்டுரை களும் தொகுப்புகளாக வெளியாகின்றன. பள்ளி, கல்லூரி மாணவர்களின் பாடத்திட்டத்தில் இடம் பெறுவதற்காக மேலோட்டமாக எழுதப்பெற்ற கட்டுரைத் தொகுப்புகள் நூற்றுக்கணக்கில் தமிழில் வெளியாகியுள்ளன. இத்தகைய கட்டுரைத் தொகுப்புக் களைத் தேடிக் கண்டறிந்து, படித்து தனது ஆய்வினுக்குத் தொடர்பான செய்திகளைத் தேடிக்கண்டுபிடிப்பது என்பது தனிப்பட்ட ஆய்வாளருக்கு இயலாத செயலாக உள்ளது. இதுவரை வெளியாகியுள்ள கட்டுரைத் தொகுப்புக்களின் மதிப்பு, நம்பகத்தன்மை, காலங்கடந்த தன்மை போன்றவற்றை வரையறுப்பது தனிப்பட்ட ஆய்வாளரால் செய்ய முடியாத நிலையில், அவரது ஆய்வென்பது முழுமையடைவது இயலாது. இத்தகைய கட்டுரைகளின் தரம், மதிப்பு, உண்மைத்தன்மை போன்றவை கால அடிப்படையில் மதிப்பிடப்பெற்று ஆய்வுச் சுருக்கத்துடன் நூற்பட்டியலிடப்பட வேண்டியது அவசியமாகும். சில கருத்தரங்குகளில், வாசிக்கப்பெறும் கட்டுரைகள் நகலச்சு ஆவணமாகத் தொகுக்கப்படு கின்றன. அவை நூற்பட்டியலிடப்படுவதன் மூலம் ஆய்வாளர் பயன் அடைய வாய்ப்புள்ளது.

ஆய்விதழ்கள்

ஆய்வறிஞர்கள், கண்டறிந்த உண்மைகள் ஆய்வு முடிவுகள் உடனுக்குடன் journal எனப்படும் ஆய்விதழ் களில்தான் வெளியிடப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையில் அண்மைக்காலத்தில் தோன்றியுள்ள மாற்றங்களை அறிய வேண்டுமெனில், ஆய்விதழ்களைத் தான் ஆய்வாளர்கள் நாட வேண்டியுள்ளது. இன்று மின்-இதழ்களிலும் தமிழாய்வு தொடர்பான கட்டுரைகள் வெளியாகின்றன. பழமையான செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்பொழில் போன்ற இதழ்களில் ஆயிரக் கணக்கான கட்டுரைகள் இதுவரை வெளியிடப் பட்டுள்ளன. இத்தகைய இதழ்களைத் தொகுத்துத் தேவைப்படும் கட்டுரையைக் கண்டறிவது சிரமம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழியல், சமூக விஞ்ஞானம், காவ்யா தமிழ் போன்ற ஆய்விதழ்களை வாசித்து, தனது ஆய்வு தொடர்பான செய்தியைச் சேகரிப்பது, குறிப்பிட்டகால எல்லைக்குள் ஆய்வு செய்யும் ஆய்வாளருக்கு இயலாது. ஆய்விதழ்களில்

வெளியாகியுள்ள கட்டுரைகளை மதிப்பு, தரத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து, நுண்மையான பிரிவுகளாகப் பகுத்து அகர வரிசை மற்றும் பொருள் அட்டவணை செய்தல் அவசியமானதாகும்.

விரிந்து வரும் ஆய்வுப் பரப்பு

தொடக்ககாலத் தமிழாய்வில் பண்டைய இலக்கண, இலக்கியங்களைப் பற்றி ஆராய்வதுதான் ஆய்வெனக் கருதப்பட்டது. நாளடைவில் தற்கால இலக்கியங்களும் ஆய்வுப் பொருளாயின. பின்னர் தமிழாய்வில் மாற்றமேற்பட்டு 'மொழியியல்' அடிப் படையில் இலக்கண இலக்கியத்தை ஆய்வு செய்வது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எண்பதுகளில் தமிழாய்வு, பல்வேறு பிற துறைகளை உள்ளடக்கியதாக விரி வடையத் தொடங்கியது. நாட்டுப்புறவியல், மக்கள் தகவல்தொடர்பியல், கல்வெட்டியல், நுண்கலைகள், ஊடகவியல், திரைப்படம், நிகழ்கலைகள், இசையியல், மொழிபெயர்ப்பியல், சுவடியியல், கோயிற்கலைகள், தொல்பொருள் ஆய்வு, இதழியல், மெய்யியல், அளவையியல், சமூகவியல், நாடகவியல், பெண்ணியம், மானுடவியல், வரலாறு, ஒப்பிலக்கியம் போன்ற பல்வேறு துறைகளைத் தமிழுடன் தொடர்புபடுத்தி ஆய்வு செய்யும் போக்கு தோன்றியுள்ளமையால், பல்துறை ஒருங்கிணைந்த ஆய்வுகள் இன்று பெருகி வருகின்றன. எனவே ஆய்வாளருக்கு ஆய்விற்கான மூலங்களைக் கண்டறிந்திட தமிழைத்தவிர, பிற துறைகளிலும் தேட வேண்டிய நிலைமை புதிதாகத் தோன்றியுள்ளது. தமிழ் தொடர்பான பிற துறை ஆவணங்களின் சேகரிப்பும் பதிவாக்கலும் இன்றைய தமிழாய்வுக்குத் தேவையானதாகி விட்டன.

கொள்கைகளும் உத்திகளும்

தொடக்ககாலத் தமிழாய்வுகள், இலக்கணக் கோட்பாடு அடிப்படையில் சங்க இலக்கியத்தையும், காப்பியக் கோட்பாடு அடிப்படையில் காப்பியங் களையும் புராணங்களையும் ஆய்வு செய்யும் வரை யறைக்குட்பட்ட ஆய்வாகவே விளங்கின. இன்று இத்தகைய கோட்பாடுகளுடன் மேலைநாட்டினரின் அரசியல் கோட்பாடுகள், இலக்கியக் கொள்கைகள், உத்திகள் போன்றவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்யும் போக்கு ஏற்பட்டுள்ளது.

இலக்கியத்தைத் திறனாய்வு செய்ய அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம், நடப்பியல், உளவியல், மிகை நடப்பியல், செவ்வியல், மாந்திரிக யதார்த்தம் போன்ற கோட்பாடுகள் இன்று பயன் படுகின்றன. கருத்தியல் நோக்கில் ஆராய்ந்திட பொது வுடைமை, அந்நியமாதல், சோசலிசம், காந்தியம், பெரியாரியம் போன்ற கொள்கைகள் பயன்படுத்தப் படுகின்றன. இலக்கிய உத்திகள் அடிப்படையில், படிமம், குறியீடு, இருண்மை, உவமை போன்றன படைப்புகளை ஆய்வு செய்ய உதவுகின்றன. இந் நிலையில் ஆய்வாளர், தமிழாய்வு தவிர கோட்பாடுகள், கொள்கைகள், இலக்கிய உத்திகள் தொடர்பான நூல்களையும் அறிந்திருப்பது அடிப்படையாகியுள்ளது

ஆய்வாளர் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

தகவல் பெருக்கத்தின் காரணமாக தமிழ் ஆய்வாளர் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பின்வருமாறு:

1. உலகமெங்கும் பரவியுள்ள ஆய்வு மூலங்கள்.
2. தகவல் பெருக்கத்தின் காரணமாகப் பன் மடங்கு பெருகியுள்ள ஆவணங்கள்.
3. ஆயிரக்கணக்கான கட்டுரைத் தொகுப்பு நூல்கள்.
4. நூற்றுக்கணக்கான கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்புகள்.
5. பல்துறை ஒருங்கிணைந்த ஆய்வுகள்.
6. ஆயிரக்கணக்கில் இதழ்களில் வெளியாகியுள்ள கட்டுரைகள்.
7. மின்-இதழ்கள்
8. புதிய கோட்பாடுகள்
9. புதிய கொள்கைகள்.
10. புதிய உத்திகள்
11. தமிழுடன் தொடர்புடைய பிறதுறை ஆவணங்கள்

ஆவணங்கள் சேகரிப்பும் பதிவும்

தமிழில் ஒரு குறிப்பிட்ட துறையில் ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர் எதிர்கொள்ளும் சிக்கல்களை தீர்ப்பதற்கான ஒரே வழி ஆய்வு மூலங்களான ஆவணங் களைச் சேகரிப்பதும் பதிவு செய்வதும்தான். இத்தகைய பணி, கணினியின் மூலம் செய்யப்பட வேண்டும். அதாவது 'தகவல் சேகரிப்பு - பதிவு - தருதல்' என்று மூன்று நிலைகளில் செய்திடல் வேண்டும்.

தமிழ் இலக்கியம், தமிழ் மொழி, தமிழாய்வு தமிழுடன் தொடர்புடைய பிறதுறை ஆவணங்கள் உலகம் முழுவதிலிருந்து தொகுக்கப்பட்டு, அவை நுண்ணிய பகுதிகளாகப் பகுக்கப்பட்டு கணினிமய மாக்கப்பட வேண்டும். குறிப்பாக ஆயிரக்கணக்கில் வெளியாகியுள்ள இதழ்க் கட்டுரைகள், கட்டுரைத் தொகுப்பு நூல்கள், பகுப்படிப்படையில் பதிவு செய்தல் அவசியமானதாகும். ஆய்வேடுகளின் சுருக்கங்கள் நூல்களின் சுருக்கங்கள், கட்டுரைகளின் சுருக்கங்கள், ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பித்த ஆண்டு, பதிப்புக்கள் எண்ணிக்கை, பதிப்பகம், பதிப்பித்த இடம், இலக்கிய வகை போன்ற தகவல்களைப் பதிவு செய்வதன்மூலம் ஆய்வாளரின் தேவைக்கேற்ப தகவல்களைப் பெற்றிடலாம். ஆய்வாளர் தனது ஆய்வு தொடர்பான அனைத்துத் தகவல்களையும் பெறுவதன் மூலம், தான் செய்ய

வேண்டிய ஆய்வுப் பணியையும், ஆய்வின் அகலத்தையும், ஆழத்தினையும் அறிந்து கொள்ள முடியும். ஆய்வாளரின் நேரமானது பெரிய அளவில் சேமிக்கப்படுவதுடன், முன்னர் செய்யப்பட்ட ஆய்வினை மீண்டும் செய்திடும் நிலைமையும் மாறும். சுருங்கச் சொன்னால் ஒவ்வொரு ஆய்வாளனும் 'அ' விலிருந்து தொடங்கும் சிரமம் இல்லாமையினால், ஆய்வுத் தரமானது உயர்வடையும். எடுத்துக்காட்டாக, சிலப்பதிகாரத்தில் ஆய்வினை மேற்கொண்டிருக்கும் ஆய்வாளர், சிலப்பதிகாரம் தொடர்பான பல்வேறு இதழ்கள், கட்டுரைத் தொகுப்புக்களைப் புரட்டிட வேண்டியுள்ளது. இந்நிலையில் அவருடைய ஆய்விற்குத் தொடர்பற்ற நூற்றுக்கணக்கான கட்டுரைகள் ,நூல்களை கட்டாயம் வாசிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆய்வாளரின் நேரம், பொருளினை விரயமாக்கும் நிலைமையை மாற்றிட வேண்டுமெனில், தமிழாய்வு தொடர்பான முக்கியமான ஆவணங்களைக் கணினிமயமாக்குதல் அவசியமாகும்.

கணினி வழங்கும் உடனடிப்பணி

ஆய்வு என்பது நாளும் வளரும் தன்மையுடையதால், ஆய்வுத் தரவுகள் அண்மைக்காலத்தினதாக இருத்தல் அவசியம். அப்பொழுதுதான் ஆய்வு முழுமையானதாக அமையும். உலகமெங்கும் ஒவ்வொரு மாதத்திலும் இதழ்களில் வெளியாகும் கட்டுரைகளை 'தமிழ்ச் சுருக்கமாக' பிரசுரிக்க வேண்டும். அத்துடன் கருத்தரங்கக் கட்டுரைகள், நூல்கள், ஆய்வேடுகள் போன்ற ஆவணங்களும் கணினிமயமாக்கப்பட வேண்டும். இதனால் தமிழில் ஒரு குறிப்பிட்ட வகையில் நடைபெற்றுள்ள அண்மைக்கால ஆய்வுகள், குறிப்பிட்ட துறையில் ஆய்வு செய்யும் ஆய்வாளருக்கு உடனடியாகக் கிடைத்துவிடும். ஆய்வு தொடர்பான நூல்களையும் தொகுத்துப் பகுத்திடும்போது தமிழாய்வு குறித்த தகவல்கள் முழுமையடையும். எடுத்துக்காட்டாகப் பாரதியார் கவிதைகளில் ஆய்வு செய்யும் ஆய்வாளர், தனது தலைப்பு குறித்து குறிப்பிட்ட இணையதளத்தில் தேடினால், ஒவ்வொரு மாதமும் பாரதியார் குறித்து வெளியாகும் அனைத்துத் தகவல்களும், ஆய்வுச் சுருக்கத்துடன் அவருக்குக் கிடைத்துவிடும் நிலையை உருவாக்க வேண்டியுள்ளது. இதனால் ஆய்வாளர், தனது ஆய்வுக்குத் தொடர்பான தகவல்களை எளிதில் அறிவதுடன், குறிப்பிட்ட தகவல் பற்றி விரிவாக வேண்டுமெனில், மூல ஆவணத்தைப்படித்து அறிந்து கொள்ளலாம். இத்தகைய முறையினால், மூல ஆவணம் தேடி அலைவதில் ஆய்வுக் காலத்தினை வீணடிக்காமல், ஆய்வினை ஆழமான முறையில் மேற்கொள்ள முடியும்; தமிழாய்வின் தரமும் உயரும்.

ஆய்வு நூலகங்கள்

மனித குல நாகரிகத்தையும் பண்பாட்டையும் வரலாற்று அடிப்படையில் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு வழங்கிடும் பணியைச் செய்திடும் நூலகங்கள், அடிப்படையில் சமூக சேவை நிறுவனங்கள் ஆகும். கல்வி மேம்பாடு, அறிவியல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு, பொழுதுபோக்கு போன்றவற்றில் சமூக மாற்றத்தின் உந்துசக்தியாக நூலகங்கள் செயல்படுகின்றன. மனித நினைவுகள் போல சமூக வரலாறு என்பது, நூலகத்தினால்தான் சாத்தியப்பட்டுள்ளது. வரலாற்றைப் பதிவாக்கிடும் செப்புப் பட்டயங்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், புகைப் படங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள் போன்றவற்றைப் பராமரிப்பதுடன், பாதுகாத்திடுவதன் வழியாக நூலகங்கள், மானுட வளர்ச்சியில் அரிய தொண்டாற்றுகின்றன. தமிழைப் பொறுத்தவரையில் கல்வெட்டுகளுக்கு அடுத்து ஓலைச்சுவடிகள் கருத்துப் பதிவினில் முக்கியமான இடம் வகிக்கின்றன. தொடக்கத்தில் சமண, பௌத்த மடங்களைச் சார்ந்த துறவியர் பாதுகாத்த ஓலைச்சுவடிகள் அடங்கிய இடம் 'ஞானப் பண்டாரம் எனப்பட்டது. பின்னர் சைவ, வைணவ மடங்களும் நூலகங்களை நிறுவி சுவடிகளைப் பாதுகாத்தனர். தமிழகத்தில் வாழ்ந்த கவிராயர் பரம்பரையினர் வீடுகளிலும் சுவடிகள் இருந்தன. தஞ்சாவூரைத் தலைநகரமாகக்கொண்டு ஆண்ட தெலுங்கு நாயக்க மன்னர்களான சேவப்ப நாயக்கர்(*1538-1561*), அச்சுத நாயக்கர்(*1561-1614*) அரண்மனையில் நூலகம் வைத்திருந்தனர். நாயக்கரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய மராட்டிய மன்னர்கள், ஆங்கிலேயரின் தொடர்பினால் நூல்கள் உள்ளிட்ட ஆவணங்களைச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டினர். சரபோசி மன்னர்(*1798-1833*) முயற்சியினால் ஓலைச்சுவடிகள், வெளிநாட்டு நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் சேகரிக்கப்பட்டு, *1820* ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் சரசுவதி மஹால் என்ற பெயரில் நூலகம் உருவாக்கப்பட்டது. இதுவே தமிழகத்திலுள்ள தொன்மையான நூலகமாகும்.

இந்தியாவில் ஆங்கிலேயக் காலனியாதிக்க ஆட்சி வலுவடைந்தபோது, நிறுவப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகமும், கன்னிமாரா நூலகமும் நூலகம் பற்றிய புதிய கருத்தினை உருவாக்கின. அன்றைய கால கட்டத்திலும் கல்வி கற்றல் என்பது, சமூகத்தில் சிறுபான்மையினராக இருந்த உயர் சாதியினருக்கு மட்டும் என்று வைதீக சநாதனம் வகுத்திருந்த நெறிக்கு மாறாக யார் வேண்டுமானாலும் கல்வி கற்கலாம், நூலகத்தில் வாசிக்கலாம் என்பதற்கு ஆங்கிலேயக் கல்வி முறை வழிவகுத்தது. இந்நிலையில் சங்கங்கள், கழகங்கள், அறக்கட்டளைகள் மூலம் நூலகங்கள் நிறுவப்பட்டன. இன்னும் சில நூலகங்கள் தனியாரின் முயற்சியினாலும் உருவாக்கப்பட்டன. இத்தகைய நூலகங்களில் பல இன்றுவரை மக்களுக்குச் சேவை செய்து வருகின்றன. பழமையில் ஊறிப் போயிருந்த மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் நூலகங்களின் பணி, மகத்தானது. அரிய ஆவணங்களின் சுரங்கமாக

விளங்குகிற நூலகங்கள், இன்று தமிழாய்வினுக்குப் பெரிதும் உதவுகின்றன.

கி.பி.18ஆம் நூற்றாண்டில் அச்சு ஊடக வளர்ச்சி காரணமாகப் பழமையான ஓலைச்சுவடிகளில் இருந்த தமிழ் இலக்கியம், இலக்கணம் உள்ளிட்ட பல்துறை நூல்கள், புத்தகங்களாக வெளியாகியுள்ளன. ஒப்பீட்டளவில் கடந்த 125 ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையில் தமிழ் நூல்கள் பிரசுரமாகியுள்ளன. ஓலைச்சுவடிகளில் இருந்து சங்க இலக்கியம், காப்பியங்கள் போன்ற பழமையான படைப்புகள் முதன்முதலாக நூல் வடிவம் பெற்றபோது, வெளியான முதல் பதிப்புகள் இன்று அருகிவிட்டன. சீவக சிந்தாமணி காப்பியத்தை ஆராய முயலுகின்ற இன்றைய ஆய்வாளருக்கு உ.வே.சா. 1892-இல் பதிப்பித்த பிரதி எந்த நூலகத்தில் இருக்கிறது என்பது தெரியாது. முதல் பிரதியில் இடம் பெற்றிருந்த தகவல்கள் அடுத்த பதிப்பினில் சேர்க்கப்படாமல் இருக்க வாய்ப்புண்டு. எடுத்துக்காட்டாகப் புறநானூறு போன்ற எந்தவொரு செவ்வியல் இலக்கியமும் பதிப்பிக்கப் பட்டதில், ஒவ்வொரு புதிய பதிப்பிலும் ஏற்படுத்தப் பட்டுள்ள மாற்றங்கள் ஆய்வாளரின் கவனத்திற்குரியன. ஆனால் இன்று துரதிர்ஷ்டவசமாக புலியூர்க்கேசிகன் பதிப்பு, வர்த்தமானன் பதிப்பு போன்றவற்றை வைத்து ஆய்வாளர்கள் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்வது நடைபெறுகிறது. எந்த நூலகத்தில் முதல் பதிப்பு இருக்கிறது என்ற தகவல் அறியாமையே, மூலநூல்கள் தேடுவதற்குத் தடையாக உள்ளது.

முனைவர் பட்ட ஆய்வினைத் தொடங்குவதற்கு முன்னர், ஆய்வுத்தலைப்பைத் தேர்ந்தெடுப்பது, ஆய்வாளருக்குச் சவாலாக உள்ளது. எடுத்துக்காட்டாகத் தமிழிலக்கியப் பரப்பினில் சிலப்பதிகாரத்தில் ஆய்வினை மேற்கொள்ளலாம் என முடிவு செய்யும் ஆய்வாளர், பருண்மையான ஆய்வுப் பிரச்சினை எதுவென முடிவு செய்ய முடியாமல் திண்டாடுகிறார். இந்நிலையில் ஏற்கனவே சிலப்பதிகாரம் குறித்து வந்துள்ள முக்கியமான விமர்சன நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றை வாசித்திட ஆய்வு நூலகங்கள் அடிப் படையாக விளங்குகின்றன. ஆய்வு தொடர்பான கருதுகோள்களை உருவாக்கிட, குறிப்பிட்ட படைப்பினில் இதுவரை நடைபெற்ற முன் ஆய்வுகள் பற்றி அறிந்திட உதவுகின்ற நூலகங்கள், இறுதிவரை ஆய்வாளருக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன..

தமிழ் ஆவணங்கள் பாதுகாக்கப்படும் நூலகங்கள் இந்தியாவிற்கு வெளியே வாடிகன், பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், போர்த்துகீஸ், நெதர்லாந்து போன்ற நாடுகளில் உள்ளன. குறிப்பாக இந்தியாவிற்கு கிறிஸ்தவ மத போதனைக்காக ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்த பாதிரியார்கள் எழுதியுள்ள குறிப்புகள், கடிதங்கள், பதிப்பித்த நூல்கள், இதழ்களில் வெளியான தமிழகம் குறித்த கட்டுரைகள் போன்றவை, தமிழர் வாழ்க்கை யுடன் நெருங்கிய தொடர்புடையன. தமிழகத்தில் இலக்கியம், இலக்கணம், வரலாறு, பண்பாடு, மானிட வியல், நாட்டுப்புறவியல் போன்ற துறைகளில், கடந்த நானூறு ஆண்டுகளில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சி களை அறிந்திட, ஐரோப்பிய நாடுகளில் ஆவணக் காப்பகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் ஆவணங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இந்தியாவில் புதுதில்லி, கல்கத்தா, மும்பை, காசி, அகமதாபாத், திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி போன்ற இடங்களில் உள்ள நூலகங்களில் தமிழ் ஆவணங்கள் நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. தமிழகத்தில் ஆங்கிலேய அரசாங்கம் 1860 இல் தொடங்கிய கன்னிமாரா நூலகம், தேசிய நூலகமாக மாற்றப்பட்டு, மக்களின் சேவையில் இன்றுவரை தனித்து விளங்குகிறது. தமிழில் வெளியான நூல்கள், பத்திரிகைகள் தமிழக மெங்கும் உள்ள நூலகங்களில் பரவிக் கிடக்கின்றன. தமிழ் ஆய்வாளர்கள் அறிந்திருக்கவும் தேடிச் செல்லவும் வேண்டிய முக்கியமான நூலகங்களின் அட்டவணை:

சென்னை நகரில் செயல்படும் நூலகங்கள்

மெட்ராஸ் லிட்டரரி சொசைட்டி நூலகம்(1812)
DPI வளாகம்
கல்லூரிச் சாலை
நுங்கம்பாக்கம், சென்னை-6

அடையாறு நூலகம் & ஆய்வு நிறுவனம்(1886)
தி தியாபிசிகல் சொசைட்டி பன்னாட்டுத் தலைமையகம்
அடையாறு, சென்னை-600020

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் & ஆய்வு மையம்(1869)
சென்னைப் பல்கலைக்கழக வளாகம்
சென்னை-5

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்- நூலகம்
காந்தி இர்வின் சாலை
எழும்பூர், சென்னை

கன்னிமாரா நூலகம்(1896)
60, பாந்தியன் சாலை
எழும்பூர், சென்னை- 600 008

டாக்டர் உ.வே.சா.நூலகம்
2, அருண்டேல் கடற்கரைச் சாலை
பெசண்ட் நகர், சென்னை-90
மறைமலையடிகள் நூலகம்
கன்னிமாரா நூலகம் 3வது மாடி
60, பாந்தியன் சாலை
எழும்பூர், சென்னை- 600 008.

தமிழ்நாடு அரசு-தொல்பொருள் ஆய்வுத் துறை நூலகம்.
அரசுதொல்பொருள் ஆய்வுத் துறை நூலகம்
தமிழ் வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை- 600 008.

தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகம்
அண்ணா சாலை, சென்னை

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்
மூன்றாவது குறுக்குத் தெரு
மையத் தொழில்நுட்ப வளாகம்
தரமணி, சென்னை-600 113.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம்
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
இரண்டாம் முதன்மைச் சாலை
தரமணி-சென்னை- 600 113

பெரியார் பகுத்தறிவு நூலகம் மற்றும் ஆய்வு மையம்
பூந்தமல்லி நெடுஞ்சாலை
எழும்பூர், சென்னை- 600 008

கார்ல்மார்க்ஸ் நூலகம்
சி.ஐ.டி.நகர், சென்னை- 600 035.

பேராசிரியர் ஆய்வு நூல் நிலையம்
அண்ணா அறிவாலயம், அண்ணா சாலை
தேனாம் பேட்டை, சென்னை-600 018

பவானந்தர் கழகம் நூலகம்(1930)
டவுட்டன் பேருந்து நிறுத்தம்
வேப்பேரி, சென்னை-7

க.திருநாவுக்கரசு நூலகம்.
1-அன்னை நாகம்மை தெரு
மந்தைவெளி பேருந்து நிலையம் அருகில்.
சென்னை-600 028

சிங்காரவேலர் நினைவு நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை- 600 098

பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகம்
செம்மொழித் தமிழாய்வு நிறுவனம்
தரமணி, சென்னை-113

அண்ணா நூற்றாண்டு நூலகம்
கோட்டூர்புரம், சென்னை-25

சென்னைப் பல்கலைக்கழக நூலகம்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5

தலைமைச் செயலக நூலகம், தலைமைச் செயலகம்
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை

சட்டப் பேரவை நூலகம்
சட்டப் பேரவை
தலைமைச் செயலகம்
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை

தமிழகத்தில் முக்கியமான நூலகங்கள்

விக்டோரியா எட்வர்ட் நூலகம்
விக்டோரியா எட்வர்ட் மன்றம்
மேல வெளி வீதி, மதுரை-1

மதுரைத் தமிழ்ச் சங்க நூலகம்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
தமிழ்ச் சங்கம் சாலை
சிம்மக்கல், மதுரை-1

திரு.வி.க. நூலகம்(1946)
மேலப்பாதி, தஞ்சாவூர் மாவட்டம்

சிவகுருநாதன் செந்தமிழ் நூலகம்(1950)
நாணயக்காரத் தெரு, கும்பகோணம்

பல்லடம் மாணிக்கம் தமிழ் நூல் காப்பகம்
சேலம் நெடுஞ்சாலை
தமிழ் நகர், விருத்தாசலம்-606001

கோபால் ராவ் நூலகம்(1912)
காந்தி பார்க் எதிரில், கும்பகோணம்

பென்னிங்டன் பொது நூலகம்(1875)
ஸ்ரீவில்லிபுத்தூர்

கோட்டூர் அரங்கசாமி முதலியார் நூலகம்
ராஜ கோபாலசுவாமி கோவில் தெரு
மன்னார்குடி

திருவள்ளுவர் நூலகம்
சீதாபார்ப்ப நல்லூர்
திருநெல்வேலி
ஒன் டிரஸ்ட் நூலகம்
W.C.C. சாலை
நாகர்கோவில்

சரசுவதி மஹால் நூலகம்(1820)
அரண்மனை வளாகம், தஞ்சாவூர்

பாவாணர் நூலகம்
திருவள்ளுவர் தவச்சாலை
அல்லூர், திருச்சி மாவட்டம்-620101

ஞானாலயா நூலகம்
6,பழனியப்பா நகர்
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை-622002

திருவாவடுதுறை ஆதீன நூலகம்
திருவாவடுதுறை

திருப்பனந்தாள் ஆதீன நூலகம்
திருப்பனந்தாள்

குன்றக்குடி ஆதீன நூலகம்
குன்றக்குடி
சிவகங்கை மாவட்டம்

மதுரை ஆதீன நூலகம்
மதுரை

கரந்தைத் தமிழ்ச் சங்க நூலகம்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
கரந்தை, தஞ்சாவூர்-5

தொல்காப்பியனார் நூலகம்(1909)
சன்மார்க்க சபை
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி-622403

தருமையாதீன நூலகம்
மயிலாடுதுறை-609001

ஜோசப் கல்லூரி நூலகம்
புனித ஜோசப் கல்லூரி
சத்திரம், திருச்சி

ரோமன் ரோலந்து நூலகம்
ஒயிட் டவுண், புதுச்சேரி

French Institute Library
French Institute of Pondicherry
11, Louis Street
Puducherry-605001
Ph:0413-231611

பிற மாநிலங்களில் தமிழ் நூல்கள் இருக்கும் நூலகங்கள்

பொது நூலகம்
பாளையம், திருவனந்தபுரம்

தமிழ்ச்சங்க நூலகம்
தமிழ்ச் சங்கம்
கிள்ளிப் பாலம், திருவனந்தபுரம்

National Library
Belvedor road
Alpole
Kolkatta-700027
Ph: 033-22487831

National Library
Swami Vivekananda Road
Bandara West
Mumbai-400050
Ph:022-26425093

National Archives of India Library
Janpath Road
Near Sasthri Bhavan
New Delhi-110001
Ph: 011-23384797

Delhi Tamil Sangam
Tamil Sangam Marg
Ramakrishnapuram
New Delhi-110022
P˜ 011-26174217

The Bombay Tamil Sangam
215, Mumbai Tamil Sangam Marg
Sion East
Mumbai-400022
Ph:022-24094021

Bharathi Tamil Sangam
93-A, Rash Bihari Avenue
Kolkatta-700026 Ph: 033-24665685

Rampur Raza Library
Hamid Mazil Qila
Rampur
U.P.State-244901

தமிழ் மொழியினால் அடையாளப்படுத்தப் படும் அனைத்துவிதமான தரவுகளையும் திரட்டு வதற்கு நூலகங்களின் பயன்பாடு இன்றியமையாதது. ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வு தொடர்பான புத்தகம் அல்லது பத்திரிகையைத் தேடுவதற்காக மட்டும் நூலகங்களுக்குச் செல்வதைவிட, எந்த ஊருக்குப் போனாலும் அங்கிருக்கும் முக்கியமான நூலகத்திற்குப் போவதை வழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். நூலக உறவு என்பது காலந்தோறும் தொடர்ந்திடும்போது, இளம் ஆய்வாளர் எதிர்காலத்தில் விமர்சனத்துறையில் சாதனையாளராக மாறுவார்.

நூலகங்களின் தனிச்சிறப்புகள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்- நூலகம், தமிழ்நாடு தொல்பொருள்துறை ஆய்வு நூலகம் ஆகிய இரண்டும் தமிழக வரலாறு, பண்பாடு, சமூகம், இலக்கியம் குறித்த முக்கியமான ஆவணங்களைப் பாதுகாத்து வருகின்றன. ஆங்கிலேய காலனியாதிக்கம் தொடங்கி தமிழகத்தை ஆண்ட அரசுகள், செயல்பட்ட நடைமுறையைச் சேமித்து வைக்கப்பட்டுள்ள அரசாங்க கோப்புகளின் மூலம் அறிந்துகொள்ள ஆவணக் காப்பக நூலகம் உதவுகின்றது. காலனிய ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அடங்கிய கோப்புகள், இன்று ஆய்வாளர்களுக்குப் பயன்படுகின்றன. எடுத்துக் காட்டாக மருது சகோதரர்கள், வீரபாண்டிய கட்ட பொம்மன் போன்ற காலனியாதிக்க எதிர்ப்புப் போராளி களுக்கும் ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் நடைபெற்ற இறுதிக்கட்ட விசாரணைகள் கோப்புகளாகப் பதிவாகி யுள்ளன. 19 ஆம் நூற்றாண்டில் வெளியான அரிய நூல்கள், ஆவணக் காப்பக நூலகத்தில் கிடைக்க வாய்ப்புண்டு. தமிழ் ஆய்வாளர்கள் இத்தகைய வரலாற்றுப் பழமையான நூலகத்தை ஒருமுறையாவது சுற்றிப் பார்க்க வேண்டியது அவசியம்

சரஸ்வதி மஹால் நூலகத்தின் சிறப்புகள் அளவற்றவை. பதினொரு இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலும் வெளியான நூல்கள் உள்ளன. வரலாற்றுப் புகழ்வாய்ந்த கையெழுத்திலான அஞ்சல் மடல்களும், அவற்றுடன் படங்களும் இருக்கின்றன. நானூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த நந்திநாகரி என்னும் எழுத்தில் உள்ள சுவடிகள் உள்ளன. முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட சீவக சிந்தாமணி, திருக்குறள், திருவாசகம், கம்பராமாயணம், திவாகரம், கலிங்கத்துப்பரணி போன்ற நூல்கள்

நூலகச் சேமிப்பில் பாதுகாக்கப்படுகின்றன. இந்தியா, ஐரோப்பா நாடுகளில் உள்ள அழகிய நகரங்களின் படங்கள், மனித உடற்கூறு, தாவரங்கள் அடங்கிய வண்ணப்படங்களும், எழிலான ஓவியங்களும் உள்ளன. மகாராட்டிர அரசர்கள் அலுவலகங்களில் பயன்படுத்திய 'மோடி' எழுத்துக்களாலான கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. பிரெஞ்சு ஆசிரியர் ஒருவரால் எழுதப்பட்ட சாமுத்திரிகா என்ற அரியநூல், சிறப்பாகக் கருதப் படுகிறது.

கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சரஸ்வதி மஹால் நூலகம், மதுரைத் தமிழ்ச் சங்க நூலகம், உ.வே.சா. நூலகம், ஆதீனங்களின் நூலகங்கள் போன்றவற்றில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பாக உள்ளன. அவற்றில் இலக்கியம், இலக்கணம் மட்டுமின்றி, சித்த மருத்துவம், ஜோதிடம், சமையல் கலை, கால்நடை மருத்துவம், தத்துவம், மதம், நாட்டுப்புற வழக்காறுகள் போன்றனவும் உள்ளன. தமிழரின் பண்பாடு, சமூகவியல் விஷயங்களை மீட்டுருவாக்கம் செய்ய முயலும் ஆய்வாளர் இத்தகைய ஓலைச்சுவடிகளை வாசிக்க வேண்டும்.

தமிழகத்தின் பழமையான கன்னிமாரா நூலகம், தமிழில் வெளியாகியிருக்கும் பல்வேறு நூல்களைச் சேமித்து வைத்திருக்கும் அரிய கருவூலமாகும், தமிழாய்வு மேற் கொண்டிருக்கும் ஆய்வாளர்கள் அவசியம் கன்னிமாரா நூலகத்தைப் பயன்படுத்த வேண்டும். தமிழ்நாட்டு அரசினர் தமிழ் வளர்ச்சி மன்ற வெளியீடான தமிழ் நூல் விவர அட்டவணை, இந்தியாவிலுள்ள மையக் குறிப்பு நூலகம் வெளியிட்டுள்ள இந்திய தேசிய நூற்றொகை, சென்னை கன்னிமாரா பொது நூலகம் வெளியிட்ட தமிழ்நாட்டு நூற்றொகை: தமிழ், கல்கத்தாவிலுள்ள மையக் குறிப்பு நூலகம் வெளியிட்டுள்ள இந்திய தேசிய நூல் விவரப் பட்டியல்: தமிழ் போன்ற அரிய நூற்றொகைகள் கன்னிமாரா நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. 1960 ஆம் ஆண்டிற்கு முன்னர் தமிழில் வெளியான நூல்களைக் கண்டறிய நூற்றொகைகள் உதவுகின்றன.

ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில், போன நூற்றாண்டில் தமிழர் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நாடகம் ,திரைப்படம், நிகழ்த்துக் கலைகள் போன்றவை குறித்த புத்தகம், பத்திரிகை தவிர விளம்பர நோட்டீஸ் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களைக் காணலாம். அந்தக் காலத்தில் வெளியான துண்டறிக்கைகள், விளம்பரங்களும் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

பல்லடம் மாணிக்கம் ஆய்வு நூலகத்தில் பண்டைத் தமிழிலக்கிய நூல்கள் பல்வேறு பதிப்புகளுடன் ஆய்வாளர்களுக்காகக் காத்திருக்கின்றன. சிறுபத்திரிகை மரபில் வெளியான முக்கியமான பத்திரிகைகளின் தொகுப்புகள் உள்ளன. ஆயிரக்கணக்கான கர்நாடக இந்துஸ்தானி, மேற்கத்திய இசைப்பேழைகள், குறுந் தகடுகள் பாதுகாக்கப்படுவது, இந்நூலகத்தின் தனிச் சிறப்பாகும்

பெரியார் பகுத்தறிவு நூலகம், பேராசிரியர் ஆய்வு நூல் நிலையம் இரண்டிலும் திராவிட இயக்கத்தினரின் கருத்துகளுக்கு முன்னுரிமை தந்து நூல்கள், பத்திரிகைகள் சேமிக்கப்பட்டுள்ளன. பெரியாரின் எழுத்துகளை மூல வடிவினில் அறிந்திட பெரியார் பகுத்தறிவு நூலகம் பெரிதும் உதவியாக உள்ளது,

சட்டப்பேரவை நூலகம், தலைமைச் செயலக நூலகம் ஆகிய இரண்டிலும் தமிழக அரசாங்கம் பல்வேறு காலகட்டங்களில் வெளியிட்ட அறிக்கைகள், அரசாணைகள், பிரசுரங்கள் இடம் பெறுள்ளன. சட்டப் பேரவை நூலகத்தில் பல்லாண்டுகளாக நடைபெற்ற தமிழக சட்டப்பேரவைக் கூட்ட நடவடிக்கைகள், கேட்கப்பட்ட கேள்விகள், பதில்கள், இயற்றப்பட்ட மசோதாக்கள் போன்றன ஆவணங்களாக இடம் பெற்றுள்ளன.

சிங்காரவேலனார் நினைவு நூலகத்திலும், காரல் மார்க்ஸ் நூலகத்திலும் மார்க்சிய சித்தாந்த நூல்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ரசியன், பிரெஞ்ச் உள்ளிட்ட மேலை மொழிகளில் வெளியான இலக்கிய வாதிகளின் சிறந்த படைப்புகள் உள்ளன.

பல்லடம் மாணிக்கம் நூல் காப்பகம், பாவாணர் நூலகம், ஞானாலயா போன்ற நூலகங்களில் பண்டை இலக்கிய இலக்கண நூல்களின் முதல் பதிப்புகள் உள்ளன.

தனிநாயகம் அடிகளார் அறுபதுகளில் வெளியிட்ட Tamil Culture இதழின் பழைய இதழ்களின் தொகுப்பு உள்ளிட்ட பல்வேறு பத்திரிகைகளின் தொகுப்புகள் ஞானாலயாவில் உள்ளன. பண்டைய இலக்கிய, இலக்கண நூல்களின் முதல் பதிப்புகள் முக்கியத்துவம் தந்து சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

திருவனந்தபுரம் அரசு பொது நூலகத்தில் வை.மு.கோதைநாயகி அம்மாள் எழுதியுள்ள நாவல் களும், கோட்டூர் அரங்கசாமி முதலியார் நூலகத்தில் வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஜே.ஆர்.ரங்கராஜூ, ஆரணி குப்புச்சாமி முதலியார் போன்ற நாவலாசிரியர் களின் நாவல்களும் உள்ளன. தமிழ் நாவல் வரலாற்றில் இருண்ட காலம் என அழைக்கப்படும் காலத்தில் வெளியான வெகுஜனரீதியில் பிரபலமான நாவல்களை ஆராய்ந்திட முயலும் ஆய்வாளருக்குப் பயன்படும் நாவல்கள் அங்கே உள்ளன

மேலைச்சிவபுரி, தொல்காப்பியனார் நூலகத்தில் தனவணிகன்(1920), நச்சினார்க்கினியன், சைவம், கலாநிலையம் வெ.சாமிநாத சர்மா ஆசிரியராக ரங்கூனில் நடத்திய ஜோதி(1943), இந்திரா, செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், கலைமகள் போன்ற பழமையான

பத்திரிகைகளின் தொகுப்புகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மின்னணு நூலகங்கள்

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான மாற்றங்கள் காரணமாக உலகமெங்கும் வாழ்ந்திடும் தமிழர்களிடையே தமிழ்ப் புத்தகங்கள், பத்திரிகைகளை இணையத்தின் வழியாக வாசித்திடும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. தமிழ்ப் புத்தகங்களை உடனடியாக வாசித்திடுவதற்கு இலவசமாகவே சேவை அளிக்கும் இணைய தளங்கள் நிரம்ப உள்ளன. ஆய்வாளர்கள். செவ்வியல் இலக்கியப் படைப்புகளைப் பதிப்பாசிரியர் ரீதியாக அணுகிடுவதற்கான வாய்ப்புகள் இணைய தளத்தில் இருப்பதனால், நூல்களைத் தேடியலைகின்ற நேரம் மிச்சமாகிறது. கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வெளியாகி, மீண்டும் மறுபதிப்புகள் வெளிவராத நூல்கள்கூட மின்னணு வடிவில் கிடைப்பது, ஆய்வினை முழுமையாகச் செய்திட உதவுகிறது. குறிப்பிட்ட துறை சார்ந்து இதுவரை வெளியாகி வெளிநாட்டு நூலகங்களில் கிடைக்கின்ற புத்தகங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டிட இணைய தளங்கள் உதவுகின்றன. தமிழாய்வில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்கள் பின்வரும் இணைய வெளிகளில் உலாவினால், தேடுகின்ற புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்யலாம்.

Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>

Tamil virtual University Library- www.virtualvu.org/library <http://www.virtualvu.org/library>

Project Madurai - www.projectmadurai.org.

Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.

Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.

Tamil E-Books Downloads- tamilebooksdownloads.blogspot.com

E Books உங்களுக்காக- senthivayal.com

Tamil Books on line- books.tamil cube.com

Catalogue of the Tamil books in the Library of British Congress- archive.org/details/ catalogue of Tamil

Tamil novels on line - books.tamilcube.com.

இங்கு தரப்பட்டுள்ள இணையதளங்களில் தேடினால் தமிழ் தொடர்பான அரிய புத்தகங்கள் கிடைக்க வாய்ப்புண்டு. தமிழில் இதுவரை வெளியாகியுள்ள லட்சக்கணக்கான புத்தகங்கள் இன்னும் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படாத நிலையில், தமிழாய்வானது, பெரிதும் நூலகங்களையே சார்ந்துள்ளது.

இன்று ஆய்வாளர்கள், தமிழாய்வில் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த நிலையில் தரவுகளைத் திரட்டுவது சிறிய அளவில் நடைபெறுகின்றது. அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் எதுவாகினும், ஆய்வு தொடர்பான ஆவணங்கள் பற்றிய புரிதல் ஏற்பட வேண்டுமெனில், ஆய்வாளர் நூலகப் பயன்பாட்டில் முனைந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் ஒரு குறிப்பிட்ட துறையில் இதுவரை நடைபெற்ற ஆய்வுகளை அறிவதுடன், ஆய்வுலகில் நிலவும் இடைவெளிகளையும் அறிந்திட முடியும். தமிழாய்வு தரமானதாக அமைந்திட, நூலகங்கள் அடிப்படையானவை என்ற புரிதல், ஆய்வுப்போக்கினைச் சரியான திசை வழியில் நடத்தும். ●

வாழ்த்துகள்



கனடா இலக்கியத் தோட்டத்தின்
2016ம் ஆண்டுக்கான
‘இலக்கியச் சாதனை சிறப்பு விருது’
கி.ராஜநாராயணனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

போற்றத்தக்க இலக்கியச் சாதனைக்கான
விருது பெறும் கரிசல் எழுத்தாளர்
கி.ராஜநாராயணனுக்கு
‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’
வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

மதுரை புத்தகத் திருவிழாவில்

காவ்யாவின்

ஆறு புத்தகங்கள் வெளியீட்டு விழாவும்
விந்தன் நூற்றாண்டு விழாவும்

தலைமை : **பேரா. காவ்யா சண்முகசுந்தரம்**

விந்தன் நூல்களை வெளியிடுபவர் **பேரா. ம.திருமலை** (முன்னாள் துணைவேந்தர்)

பெறுபவர் : **பேரா.மு.இராமசாமி** ஏற்புரை : **விந்தன் ஜனார்த்தனன்**

திலக பாமாவின் **திகம்பர சக்கரக் குருதி**
வெளியிடுபவர் : முனைவர் **சுந்தரவல்லி**

தமிழ்த் தாசனின் **நனைந்த நதிகள்**
வெளியிடுபவர்: கவியரசு **நா.காமராசன்**

எம்.எம்.தீனின் **மாறவர்மன் குலசேகர பாண்டியன்**
வெளியிடுபவர்: பேரா. **இரா.மோகன்**

அரங்க எண் 133

வரவேற்புரை : முனைவர் **இரா.மனோகரன்**
நன்றியுரை: நல்லாசிரியர் **சு.நடராசன்**

நூல்கள் மொத்தவிலை ரூ. 3500/- சலுகை விலை ரூ. 2500/-

இடம் : தமுக்கம் மைதானம், மதுரை
நாள் : 10.09.2016 சனிக்கிழமை, மதியம் 2.30 மணிக்கு

அனைவரும் வருக !

09-08-16 மயிலாடுதுறையில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புத்தகக்கண்காட்சியை
திருவையாறு அரசர் கல்லூரி முன்னாள் முதல்வர் கலியபெருமாள் அவர்கள் தொடங்கி வைத்தார்.
கலந்துகொண்டவர்கள் பூம்புகார் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் க.தமிழ்செல்வி,
தமிழ்த்துறைத் தலைவர் தமிழ்வேல், இரா.சங்கரன் வரலாற்றுத்துறை,
செந்தில்நாயகம் நூலகர் பரமசிவம், A.V.C. கல்லூரி, கார்முகிலன் தமிழ்த்துறை,
செல்வகுமரன் நூலகர், அரசு கல்லூரி, மணல்மேடு, கருணாசேகர் தமிழ்த்துறை,
நல்லமலை வீணா ஆங்கிலத்துறை, தருமபுரம் கல்லூரி மற்றும்
துரைகுணசேகரன், கணேசமூர்த்தி ஆகியோர்.

சிறந்த கட்டுரை நூல்களுக்கான
எம்.வி.பீமராஜா - ஜானகியம்மாள் டிரஸ்ட் வழங்கும்

'ஆனந்தாஸ்' பீமராஜா இலக்கிய விருது

இரண்டு சிறந்த கட்டுரை நூல்களுக்கு தலா ரூ. 10,000

கட்டுரை நூல் 2013- 2015 ஆண்டுகளுக்கிடையே வெளிவந்திருக்க வேண்டும்.
போட்டிக்கான கட்டுரை நூல்களை பதிப்பகமோ அல்லது எழுத்தாளரோ அனுப்பி வைக்கலாம்.
கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு, அறிவியல், சூழலியல் குறித்த, நூல்கள் வரவேற்கப்படுகின்றன.
போட்டிக்கான கட்டுரை நூலின் 4 படிகள் அனுப்பப்படவேண்டும்.
படைப்பாளரின் தன் விவரக்குறிப்பும், முகவரியும் குறிப்பிட வேண்டும்.
போட்டி தொடர்பான எந்தவித தகவல் தொடர்பும் மேற்கொள்ளப்படலாகாது.
நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.
எம்.வி. பீமராஜா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 18-12-2016 அன்று விருது வழங்கப்படும்.

கட்டுரை நூல்கள் அனுப்பவேண்டிய கடைசி நாள்: 15-09-2016

அனுப்பவேண்டிய முகவரி :
எம்.வி.பீமராஜா- ஜானகியம்மாள் டிரஸ்ட்
825, தென்காசி ரோடு, இராஜபாளையம் 626 117
விருதுநகர் மாவட்டம்.

வாசித்தல் தளத்திலிருந்து அனுபவத் தளத்தை நோக்கி...

ப்ரதிபா ஜெயச்சந்திரன்

செந்திலின் முகத்தில் பஞ்சு பஞ்சாய் அப்பிக் கொண்டிருந்தது போல் நாவலைப் படித்து முடித்தவுடன் மனதில் குட்டி இளவரசர்களின் சிதிலமாகிப்போன பனியன் கம்பெனி வாழ்க்கைத் துணுக்குகள் நம் மனதில் அப்பிக் கொள்கிறது. ஒரு கள, காலப் பதிவுகளின் முரண்களற்ற வெற்றிதான். இது "சாயத்திரை" போன்ற நட்சத்திர நாவல்.

கதை சொல்லியின் மொழி எந்த இடத்திலும் வாசகனுக்குச் சிக்கலை ஏற்படுத்தாத எளிமையான எதார்த்த மொழி.

கதைக் களத்தில் சிறுவர்களின் வாழ்க்கை எவ்வாறு பனியன் கம்பெனிகளின் வாசலுக்கு அவர்களைக் கொண்டு வந்து நிறுத்துகிறது என்ற கேள்விக்கான பதில்கள் நாவலெங்கும் ஆங்காங்கே யதார்த்தமான விவரணையில் கதாபாத்திரங்களின் மொழியில் சொல்லப்படுவதும் அந்த வாழ்வில் அவர்கள் இழந்து போன சுகங்களும் அவ்வாழ்க்கையில் கதாபாத்திரங்கள் ஒருவிதமான தப்பித்தலை உணர்வது போலும். இவ்வாழ்வின் சிக்கலான இண்டு இடுக்குகளையும் சொல்வதுடன் பெண்களின் அவலமான நிலையும் தாய்க்கும் மகளுக்கும் மறைப்பு ஒரு கவசமாக மாறி விடுவதும், கம்பெனியில் ஆண்களின் சிறுசிறு தொடுதல் களிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று மனம் நினைத்த போதிலும் தொடுதலின் சுகத்தில் காலூன்றி விடும் ஒரு தன்னிலைச் சிக்கல் சார்ந்த பெண்களின் வாழ்வும் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இடையிடையே சொல்லப்படும் அம்மா சொன்ன கதை, ஆசிரியர் சொன்ன கதை, தொலைக்காட்சி சொன்ன கதை போன்ற இவையாவும் தங்கள் வாழ்வை பனியன் கம்பெனிகளில் தொலைத்த சிறுவர்களின் ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் இடைவேளைகளாக மிஞ்சிப் போய்விடுகின்றன. அல்லது அவை தங்கள் வாழ்வில் நினைவு கூரத்தக்க அகவய நிகழ்வுகளின் படிமங்களாக மாறி கரடுமுரடான வாழ்க்கைப் பாதைகளின் இடையே வேர் விட்டு நீட்டும் சிறிய பசிய இலைகளாக நிற்கின்றன புதிய உத்தி.... ...அடுத்து

1. அம்மாவின் புடவை வாசனை மூக்கை இழுத்துக் கொள்ளச் செய்தது
2. குடித்தால் சிவப்பாகி விடலாம் என்ற சிறுவர் களின் கற்பனை
3. தேவடியாக்கீரை என்ற பெயர் இருப்பதையும் அம்மா சொன்னபோது ரொம்பவும் வெட்க மாக இருந்தது கனகுவுக்கு.

பிணங்களின் முகங்கள்
சுப்ரபாரதிமணியன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098
ரூ.200/-

4. என்ன சமாதானம் வேண்டியிருக்கு. இனிமேல் சிகரெட்டெல்லா குடிக்க மாட்டேன்னு சத்தியமா பண்ணனும். போடா... தலையைக் குனிந்து கொண்டு சொன்னான் செந்தில்.

போன்ற வரிகள் சிறியவர்கள் எனக் கணித்துவிட முடியாதபடிக்கு வாசிப்போடு வளர்ந்து விடும் சிறுவர்கள் தங்கள் நடவடிக்கைகளால் பெரியவர் களானாலும் தாங்கள் இன்னும் சிறுவர்களே என சட்டென நிஜத்தைத் தழுவும் கணங்கள். ஞாயிறுகளில் அவர்கள் விளையாட முடியாமல் போகையில் அவர் களுடன் நம்மையும் மனம் கனக்கச் செய்யும். சிறுவர் களின் வாழ்க்கை பறிக்கப்பட்டு பனியன் கம்பெனிகள் என்னும் பிணக்கிடங்கினுள் அவர்கள் தள்ளப்பட்டு, அவர்கள் தங்கள் வீட்டிற்குச் சம்பாதித்துக் கொடுக்கும் பணம், கனகுவின் அப்பாவின் வார்த்தைகளில் "உன்னப் படிக்க வெக்காமெ உன்னெ சம்பாதிக்கச் சொல்லி செலவு பண்ரம் பாரு அது திருட்டுப் பணமில்லாமெ என்னடா... கள்ளப்பணம்" போன்ற வரிகள் ஒளிக் கீற்றுகளாக, யதார்த்தம் சார்ந்த தீர்வுகளையும் முன் வைக்கின்றன என்ற வகையில் "பிணங்களின் முகங்கள்" உயிர்த்துடிப்புடன் இருக்கிறது.

தென்னக இசை ஆற்றுகைகளில் தமிழிசையின் வளர்ச்சி நிலை

த. ராபர்ட் அருட்சேகரன்

ஒரு மனிதன் தனது உணர்வுகளைத் தான் பேசும் மொழியின் ஊடாகவே இன்னொருவருக்கு வெளிப் படுத்துகின்றான். அந்த மொழி தெரிந்தவர்கள் அதனை அதே உணர்வுடன் கேட்பர். ஒவ்வொரு மனிதனும் தனது உச்சமான உணர்வைத் தனது தாய் மொழியிலேயே முழுமையாக வெளிப்படுத்துகின்றான். அதாவது ஒரு மனிதனின் அடிமனச் சிந்தனை அவனது தாய் மொழியிலேயே இருக்கும் என்பதே இதன் பொருளாகும்.

இந்த வகையில் இசை என்பது அனைவரையும் இன்புறச் செய்யும் சிறந்த கலை வடிவமாக இருக்கின்ற போதும் இசைக்கலையிலும் மொழியின் முக்கியத்துவம் பேணப்பட்டால் அந்த இசைவடிவமானது அனைத்து நிலை மக்களையும் சென்றடையும். தமிழ் மக்கள் முன்னிலையில் தெலுங்கு மொழியிலோ வடமொழி யிலோ இசையரங்கை அமைத்துக் கொண்டால் அந்த இசையரங்கானது முழுமையாக வெற்றிபெறும் என்று கூறமுடியாது.

பார்வையாளர்கள் விளங்கிக்கொள்ளக் கூடிய மொழியில் பாடல்களைப் பாடுவதன் ஊடாகவே ஓர் இசையரங்கைச் சிறப்புற நிகழ்த்த முடியும். ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் நடைபெறும் இசை விழாக்கள் முழுமையாகத் தமிழ் மக்களால் விரும்பப்படும் விழாக்களாக நடைபெறாமைக்கான காரணம் தமிழ் மொழிப் புறக்கணிப்பே ஆகும்.

தமிழிசையானது தென்னக இசை ஆற்றுகைகளில் முக்கியத்துவம் பெறாமைக்கான காரணங்களையும் எதிர்காலத்தில் தமிழிசையானது சிறப்படைவதற்கான வழிமுறைகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

தமிழிசையின் நிலை

உலகில் காணப்படும் மொழிகளுள் தமிழ் மொழி யானது மிகவும் தொன்மையான மொழியாகும். மிகவும் செழுமையான இலக்கிய, இதிகாச, புராண வரலாறு களைத் தன்னகத்தே கொண்ட மொழியாகவும் தமிழ் மொழியானது காணப்படுகின்றது. எனினும் தமிழ் மொழியை, தமிழ் இசையைப் பயன்படுத்துவதிலும்

அதனைக் கேட்டு இன்புறுவதிலும் தற்காலத் தமிழ்ச் சமூகத்தின் ஆர்வம் குறைந்து வருவது கவனிக்கத்தக்க விடயமாகும்.

சங்க இலக்கிய காலம் முதல் இன்று வரையான காலம் வரையில் தமிழ் மொழியில் ஏராளமான பாடல்கள் உருவாக்கம் பெற்று வந்துள்ளன. எனினும் ஏனைய மொழிப்பாடல்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம், தமிழகத்திலும் ஈழத்திலும் நடைபெற்று வரும் தென்னக இசையரங்குகளில் தமிழிசைப் பாடல் களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்பதும் தமிழிசை ஆய்வாளர்களால் உற்று நோக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும்.

தமிழிசைப் பாடல்கள்

தமிழ் மொழியில் அமைந்த பாடல்களே தமிழிசைப் பாடல்கள் ஆகும். திருமுறைப் பாடல்களும் தமிழிசைக்குள் அடங்கும். தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் எண்ணற்ற தமிழிசை வாக்கேயக்காரர்கள் பல நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளனர். முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக் கவிராயர், பாபநாசம் சிவன், கோபால கிருஷ்ண பாரதியார், நீலகண்ட சிவன், கோபாலையர், கோடீஸ்வர ஐயர், பெரியசாமி தூரன், அண்ணாமலை ரெட்டியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, ஊத்துக்காடு வெங்கட சுப்பையர், எம்.எம்.தண்டபாணி தேசிகர், லால்குடி ஜெயராமன், எம்.பாலமுரளி கிருஷ்ணா, அம்புஜம் கிருஷ்ணா, ஜி.என்.பாலசுப்பிரமணியம் போன்ற இயலிசைப் புலவர்களும், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய பாரதியார், பாரதிதாசன், வாலி போன்ற இயற் புலவர்களும் எண்ணற்ற தமிழ்ப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

இவை தவிர சுவாமி விபுலானந்த அடிகள், ஆறுமுக நாவலர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், யோக சுவாமிகள், இயலிசை வாரிதி ந.வீரமணி ஐயர், அருட்கவி வினாசித்தம்பி, ஏ.கே.ஏரம்பமூர்த்தி, பொன்னாலை சிவகுருநாதன், பொன்னாலை கிருஷ்ண பிள்ளை, எல்.திலகநாயகம்போல், பொன்.ஸ்ரீவாமதேவன், அரியாலை ச.பாலசிங்கம் போன்ற ஈழத்தின் இசைப் புலவர்களும் எண்ணற்ற தமிழ்ப் பாடல்களை இயற்றி யுள்ளனர்.

தமிழ்ப் பாடல்கள் பற்றிய கருத்தியல்கள்

தமிழ்நாட்டில் தோன்றிப் பெருவளர்ச்சி கண்ட செந்நெறி இசையானது மிகவும் தொன்மையானது என்னும் பொருள்பட கர்நாடக இசை எனப் பெயர் பெற்றது. இவ்விசையைத் தென்னக இசை என்றும் கூறுவர். தமிழ்நாட்டில் வாழ்ந்து இசைப்பணியாற்றிய தொடக்ககால வாக்கேயக்காரர் பலர் தெலுங்கிலும், வடமொழியிலுமே உருப்படிகளை (பாடல்களை) இயற்றினர். இவர்களது புதிய படைப்புக்கள் இவர்களது மாணவர்கள் ஊடாகத் தமிழ்நாட்டிற்கும் ஏனைய இடங்களுக்கும் பரவலாக்கம் பெற்றன.

இதனால் இசையரங்குகளில் தமிழ் மொழி அல்லாத பாடல்களே முக்கியத்துவம் பெற்று வந்தன. நீண்ட காலமாக இந்நிலை தொடர்ந்து வந்ததால் கர்நாடக இசை என்பதன் ஆழம் தெலுங்கு, வடமொழி போன்ற மொழிக் கீர்த்தனைகளிலேயே பொதிந்து கிடக்கின்றது என்னும் கருத்து கலைஞர்கள் மத்தியில் நிரந்தரமாக வேரூன்றி விட்டது.

பாபநாசம்சிவன் காலத்திற்குப் பின்னரே தமிழ்க் கீர்த்தனைகள் இசையரங்குகளில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்பட்டன எனலாம். இசைச் செழுமை கொண்ட பாடல்கள் தமிழில் குறைவு எனும் எண்ணம் இசையாளர்கள் மத்தியில் இருந்தமையால் பிரதான உருப்படியாகத் தமிழில் பாட எவரும் முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழிசை மறுமலர்ச்சியை ஏற்படுத்தப் பலர் முயற்சிகள் செய்தாலும் இசையரங்குகளில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை எனலாம். தமிழிற்கென எடுக்கப்படும் விழாக்களில் மட்டும் தமிழிசைப் பாடல்களைப் பாடும் இசையாளர்கள் ஏனைய இசையரங்குகளில் தமிழ் மொழிக்கு முக்கியத் துவம் கொடுக்க விரும்புவதில்லை என்பதும் உண்மையான விடயங்கள் ஆகும்.

தமிழ்நாட்டில் நிலவிய அதே நிலை ஈழத்திலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் நிலவியது. இன்றும் அதே நிலையே நீடித்து வருகின்றது. முது கலைஞர்கள் பலர் தமிழிசையின் பால் நாட்டம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றமையே இதற்கான முக்கிய காரணம் ஆகும். முதுகலைஞர்கள் தமது சிறுபிராயத்தில் கற்றுக் கொண்ட தெலுங்கு, வடமொழிக் கீர்த்தனைகளைத் தவிரப் புதிதாகத் தமிழ்க் கீர்த்தனைகளைக் கற்றுக் கொள்ளவோ புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடவோ இவ்வகையான சிந்தனை கொண்டவர்களாக மாணவர் களை உருவாக்கவோ எவரும் விரும்பவில்லை.

ஈழத்து இசையரங்குகளின் தன்மை

தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் தமிழ் மொழியல்லாத பாடல்களுக்கே இசை அரங்குகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் தென்னக இசை யானது மக்கள் மயப்படவில்லை என்று கூறலாம். இசை விழாக்கள், கலை விழாக்கள் நடைபெறும் இடங்களில் தமிழ் அல்லாத பாடல்களுக்கே இசையாளர்கள் முக்கியத் துவம் கொடுக்கின்றனர்.

இசையரங்கின் நிறைவில் ஒரு சில மெல்லிசைப் பாடல்களை மட்டும் தமிழில் அமைந்தனவாகச் சேர்த்துக்கொள்ளுகின்றனர். இதனால் ஈழத்து இசையரங்குகளில் தமிழிசையின் பயன்பாடு மிகவும் குறைந்தே காணப்படுகின்றது எனலாம். எனினும் யாழ்ப் பாணத்தின் நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு நடைபெறும் தெய்வீக இசையரங்கில் தமிழ்க் கீர்த்தனைகள் மட்டும் பாடப்பட வேண்டும் எனும் நியமம் ஏற்பாட்டாளர்களால் பல ஆண்டுகளாகக் கோரப்பட்டு வந்தாலும் இந்த நியமத்தைப் பல கலைஞர்கள் பின்பற்றுவதில்லை.

நிறைவுரை

தென்னக இசையரங்குகளில் தமிழிசைப் பாடல் களை அதிகரிப்பதற்கான வழிமுறைகளுள் முதன்மை யானதாகத் தமிழிசை விழாக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இளையோரிடையே தமிழிசை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் தமிழிசை பற்றிய கருத்தரங்குகள் போட்டிகள் என்பன நடாத்தப் பட வேண்டும். தமிழிசைப் பாடல்கள் ஒலிப்பதிவு களாகவும் நூல்களாகவும் வெளியிடப்படுவதும் முக்கிய மானதாகும். இசைக் கலைஞர்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும். புதிய மாணவர் பரம்பரையை உருவாக்கிக் கொண்டிருக்கும் இசையரங்க ஆற்றுகையாளர்கள் தமது மாணவர்களைத் தமிழிசைப் பற்றுள்ள மாணவர்களாகவும் புதிய தமிழ்க் கீர்த்தனைகளை அறிமுகம் செய்யும் ஆற்றல் கொண்டவர் களாகவும் உருவாக்க வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்திலும் ஈழத்தின் ஏனைய பகுதிகளிலும் இயங்கி வரும் அரச இசை நிறுவனங்களும் பாடசாலைகளும் தமது இசைக் கற்பித்தலில் தமிழிசைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அத்துடன் தமிழிசை பற்றிய ஆராய்ச்சிகளையும் ஊக்குவிக்க வேண்டும். வினைத்திறன், ஆற்றுகைத்திறன் கொண்ட இசையாளர்கள் தமிழிசையின் வளர்ச்சி பற்றி அதிகூடிய அக்கறை கொள்ளும் பட்சத்தில் இசையுலகில் தமிழிசையை நிச்சயமாக வெற்றிபெறச் செய்யமுடியும்.

உதவிய நூல்களின் விபரம்

1. பக்கிரிசாமி பாரதி கே.ஏ. இந்திய இசைக் கருவூலம், குசேலர் பதிப்பகம், 2004
2. திலகநாயகம் போல் எல்., தமிழிசையின் தொன்மையும் திண்மையும், கரிகணன் பதிப்பகம், 2010
3. அருணாச்சலம் மு, தமிழிசை இலக்கிய வரலாறு, கடவு பதிப்பகம், 2009
4. அருணாச்சலம் மு, தமிழிசை இலக்கண வரலாறு, கடவு பதிப்பகம், 2009
5. சேமாஸ்கந்த சர்மா அ.நா, ஈழத்து இசை முன்னோடிகள், திருமகள் அச்சகம், 1995
6. பாலசிங்கம் ச. இசைவாழ்வில் எழுபதாண்டுகள், ஷாம்பவி பதிப்பகம், 2011
7. நீலகண்டன் கா, சுதர்சன் செ, உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு, 2014

அஞ்சலி

தமிழகத்தின் வீதிகள்தோறும்
கலை இலக்கிய அரசியல் மேடைகளில்
தன் மாய வசீகரக்குரலால்
மக்களுக்கான பாடல்களைப் பாடி
மக்களிசைப் பாடகராகத் திகழ்ந்த
தோழர் திருவுடையானின் மறைவுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
நெஞ்சார்ந்த அஞ்சலியைத்
தெரிவித்துக்கொள்கிறது.

ராமனிலிருந்து பெரியார்வரை...

காயத்ரி சரவணன்

''நாயக்கரைப் பற்றி அய்ரோப்பாவில் உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால் அவரின் புகழைப்பற்றி நான் என்ன சொல்லப் போகிறேன். நாயக்கரிடத்தில் உள்ள விசேஷ குணம் என்னவென்றால், மனதில் படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஒரு உத்தமகுணம் தான்.

இன்னும் நாயக்கரைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் அதிக நேரம் பிடிக்கும் என நினைக்கிறேன். சுருக்கமாக, நாயக்கர் அவர்கள் தமிழ்நாட்டில் எல்லாத் தலைவர் களைவிட பெரிய தியாகி என்றுதான் சொல்லவேண்டும்.'' (நாகப்பட்டினத்தில் வ.உ.சி உரை - குடிஅரசு 10-6-1928)

இந்திய அளவில் சாதி மதம் சமயம் சார்ந்த நெறிப்படுத்தல்களும் மரபார்ந்த நம்பிக்கைகள் சடங்குகள் அடிப்படையிலான வாழ்முறையும் மையப்படுத்தப்பட்டிருந்த அறிவு முதிர்ச்சியற்ற இருண்மையானதொரு காலத்தில் தெளிந்த சிந்தனைகளால் தேசத்திற்கு ஒரு புதிய ஒளியைப் பாய்ச்சியவர் பெரியார்.

பகுத்தறிவுக்கொப்பாத மத நம்பிக்கைகள், புராணப் புரட்டு இதிகாசக் கதைகளையும் வருணாசிரம சாதிப் பகுப்புமுறைகளால் ஏற்பட்ட சாதியக் கொடுமைகள், சமுதாய ஏற்றத்தாழ்வுகள்,

தீண்டாமை போன்ற சீர்கேடுகளையும் எதிர்த்துத் துணிச்சலாகவும் கடுமையாகவும் குரலெழுப்பிய பெரியாரின் வாழ்க்கை நிகழ்வுகளை 'பெரியார் வாழ்வின் வெளிச்சங்கள்' என்ற நூலாக கழக இயக்க வெளியீடு வெளியிட்டுள்ளது. நூலாசிரியர் கி.வீரமணி.

சிறுபிராயந்தொட்டு தன்னுடைய கூர்த்த அறிவுச்செயல்பாடுகளால் பெரியார் எப்படியெல்லாம் தனித்துவமிக்க தத்துவார்த்தச் சிந்தனையாளராக பரிணமித்தார் என்பதனை வாழ்க்கை நிகழ்வுகளைப் பற்றிய அவரது எழுத்துகளிலிருந்தும் இன்னபிற சம்பவங்களிலிருந்தும் பிறரால் பதிவு செய்யப்பட்ட குறிப்புகளிலிருந்தும் ஏராளமான அரிய தகவல்களைத் தொகுத்தளிக்கிறது இந்நூல்.

நூலாசிரியர் கி.வீரமணி தனது முன்னுரையில் "பெரியாரைப் பற்றி 'மூட்டை தூக்கும்போது பாரத்தினால் கஷ்டப்பட்டிருப்பேனே தவிர வெட்கத்தினால் ஒருபோதும் சங்கடப்பட்டதில்லை' என்று பட்டாங்காய் அவர் எழுதிய எழுத்துகளின் தத்துவப்பாடம் நம் வாழ்க்கைக்கு எவ்வளவு பெரிய வெளிச்சம் - இல்லையா" என்று குறிப்பிடுகிறார்.

தமிழ்ச்சமூகத்தின் வெளிச்ச விடியலுக்கான தனது நெடிய போராட்டப் பயணத்தில் அவர் கடைத்தேற்றிய காரியங்களால் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் வெளிச்சத்தைக் கொணர முற்பட்ட அவரது வாழ்க்கைச் சரித்திரத்தின் முக்கிய நிகழ்வுகளை விரிவாக எடுத்துரைக்கும் இந்நூல் அவரது தந்தையார் குடும்ப வரலாற்றிலிருந்து தொடங்குகிறது. சிறுபிள்ளையில் குறும்பனாகவும் வம்பனாகவும் இருந்த ராமன் என்ற சிறுவன் பெரியாரெனும் பெரும் புரட்சிக்காரராக தன்னை வளப்படுத்திக்கொண்ட செழுமையான வரலாற்றை இந்நூல் ஆவணப்படுத்துகிறது. தலைமைத்துவத்துக்கான பண்புநலன்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த பெரியாரின் ஆகச்சிறந்த குணஇயல்புகள் மேன்மையும் எளிமையும் மிகுந்ததாக இருந்ததனை இந்நூலில் இடம்பெற்றுள்ள பல சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன.

காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியார் வாழ்வில் திருப்பு முனையாக அமைந்த நிகழ்வு, அதுபோன்ற இன்னபிற வரலாற்றுச் சிறப்புமிக்க சில அரசியல் நிகழ்வுகள் அனைவரும் அறிந்தவை என்பதால் இந்நூலில் இடம் பெறவில்லை போலும். மாறாக ஒவ்வொரு அரசியல் நிகழ்விலும் பெரியாரின் எவ்விதமான குணாம்சங்கள் தனித்துவமாய் மிளிர்ந்தன என்பதனையே மையப்படுத்துகிறது இந்நூல். பெரியார் வரும் பாதையில் அவருக்கெதிராக செருப்புத்தோரணம் கட்டி அவமானப்படுத்த முற்படுகிறபோதும், இரவில் அவருக்கு ஒவ்வாத உணவை தோழரொருவர் உவந்தளிக்கும்போது இன்முகத்துடன் அதனை உண்கிறபோதும், தர்மசாலா என்ற குப்பைக்கூடாரத்தில் கொசுக்கடியிலும் நிம்மதியாகப் படுத்துறங்குகிறபோதும், அவரது எளிமைப் பண்பும் தோழமை உணர்வும் கொள்கை உறுதியும் எதிர்ப்புகளுக்கு அஞ்சாத மனோதிடமும் ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கான வெளிச்சங்கள் என்பதை உரைக்கிறது இந்நூல்.

தனது குடும்பத்தைப் பற்றி பெரியார் எழுதிய குறிப்புகளிலுள்ள தகவல்கள்.

ஏழைக்குடும்பத்தில் பிறந்து கூலிவேலை செய்து கொண்டிருந்த வெங்கட்ட நாயக்கர் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த சின்னத்தாயம்மாளை மணம் முடித்தபின்பு மூன்று குழந்தைகள் பிறந்த பின்னால் தரித்திர வாழ்விலிருந்து மெல்ல விடுபட்டு மளிகைக் கடை வைத்து முன்னேறி, மளிகைக்கடை வெங்கட்ட நாயக்கரானார். இந்நிலையில் மூன்று குழந்தைகளும் இறந்து போக அம்மையார் ஸ்தல யாத்திரைகளும் தவங்களும் செய்து மண்சோறு, சந்நியாசிகளின் எச்சிலைச் சாப்பிட்டு வரம் பெற்று ஈ.வெ.கிருஷ்ண சாமியையும், ஈ.வெ.ராமசாமியையும் ஈன்றெடுத்தார்.

அம்மையாருக்குள்ள பிள்ளை ஆசையால் மூத்த பிள்ளை ஒன்றே தனக்குப் போதும் எனக்கருதி தனது இளையபிள்ளை ராமனை தனது புருசனின் சிறிய தகப்பனார் மனைவி ஆகிய ஒரு விதவையிடம் இனாமாகக் கொடுத்து வளர்த்துக்கொள்ளச் சொல்லி விட்டார்கள்.

மண்டி வியாபாரம் நன்றாக செழித்து மண்டி வெங்கட்ட நாயக்கரான பிறகு அவருக்கு நாமம் பட்டை பட்டையாய்த் திகழ்ந்தது. மூத்தபிள்ளை கிருஷ்ண சாமியும் பாகவதராக ஆகிவிட்டார். ஆனால் 9 வயதில் விதவை வளர்த்த பிள்ளையாய் ஊர்சுற்றியாய் 'லோலனாய்' திரிந்ததால் படிப்பும் சரிவர இல்லாத தோடு அடிதடி சண்டையென்று இருந்ததால் மண்டிக்கு வேலைக்கு அனுப்பினார்கள்.

பெரியார் சிறுவயதிலிருந்தே சாதி மத சடங்காசாரங்களைக் கருத்தில் கொள்ளாது அதனை மறுத்தே பழகிவந்தார் என்பதை அவர் பள்ளியில் பயிலும்போது நடந்த சம்பவங்களிலிருந்து அறிந்துகொள்ளமுடிகிறது.

பள்ளியில் படிக்கச்சென்றபோது பள்ளிக்கு அருகிலுள்ள 'புழங்கக்கூடாத ஜாதி'யினரிடம் தண்ணீர்

வாங்கி அருந்தக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்ட நிலையில் பெரியார் அக்குடும்பத்தினரிடம் தண்ணீர் வாங்கிக் குடிப்பதோடு தின்பண்டங்கள் வாங்கித் தின்னவும் செய்தார். இதையறிந்த அம்மையார் ‘குலாச்சாரம் கெட்டு விட்டது’ என்று சொல்லி பள்ளியி லிருந்து வந்தவுடன் உடுப்பைக் கழற்றி விட்டு வேறு உடைகளை அணிய வேண்டும் என்றும் அதற்குமுன் ‘அம்மாவைத் தொட்டுவிடக்கூடாது’ என்றும் கண்டிக்கப்பட்டார்.

பெரியாரின் பகுத்தறிவு மற்றும் சுயமரியாதைக்கான மூலவித்து அவரது குடும்பத்திலிருந்தே உதித்தெழுந்ததைப் பற்றி பெரியார் எழுதியவை கவனிக்கத் தக்கது.

> “அம்மையாருக்கு தெய்வபக்தி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. பணத்தை அள்ளி இறைக்க ஆரம்பித்துவிட்டார்கள். கண்டவிடமெல்லாம் கோவில் சத்திரம் சாவடி கட்ட ஆரம் பித்தார்கள். வீட்டில் வாரம் ஒரு காலட்சேபம், இராமாயண, பாரத வாசகம். எங்கெங்கோ திரியும் சன்னியாசிகளுக்கும் பாகவதர் களுக்கும் சதாசர்வகாலமும் உலையில் நீர்கொதித்த வண்ண மாய் இருக்கும் தண்டச்சோறு சத்திரம்போல் வீட்டை நடத்தி வந்தார்கள்.
>
> இளையமகன் ராமனிடம் எவ்வளவு அன்பு காட்டினாலும் அம்மையார் ராமன் தொட்ட செம்பு, டம்ளர் ஆகியவற்றைக் கழுவியே வைப் பார்கள். ராமனை சமையல் வீட்டுக்குள் விடமாட்டார்கள். அப்பொழுதே அவன் ‘ஜாதி கெட்ட’ பயலாக விளங்கினான்.”
>
> *(குடிஅரசு - 2-8-1936)*

பெரியார் மதம் சம்பந்தப்பட்ட கதைகளையோ புராணங்களையோ தானாகப் படித்தறிந்துகொள்ளவில்லை

என்றாலும் சதாகாலமும் அவரது வீட்டில் நடந்தேறிய கதாகாலட்சேபங்களைக் கேட்டுக்கேட்டு அதிலிருந்து பகுத்தறிவுக்கு உட்பட்ட சில கேள்விகளைக் கேட்டு பண்டிதர்களை திணறவைத்தார் என்பதி லிருந்தே அவரது பட்டறிவு புலப்படும். மேலும் தன் வீட்டுச் சூழ்நிலையிலிருந்தே பெரியார் தனது பகுத்தறிவுச் சிந்தனை களுக்கு உரமேற்றிக்கொண்டார் என் பதையும் விளங்கிக்கொள்ளமுடியும்.

இற்றைக்கு 115 ஆண்டுகளுக்கு முன்னதாகவே 'ஜாதி பேதம் நீக்கல், சமபந்தி உணவு, கலப்பு ஜாதி மணம் என்ற கொள்கை அடிப்படையில் தன் மண்டியில் பணிபுரிந்த ஒருவருக்கு வேற்றுசாதிப்பெண்ணுடன் செய்து வைத்த திருமணத்தை பாட்டுக் கச்சேரி, பல்லக்கு ஊர்வலம், சமபந்தி விருந்து என கடைகளில் பலரிடமும் வசூல் செய்து அமோகமாக நடத்திக்காட்டினார். ஊரிலுள்ள பலரும் இவ்விருந்தில் கலந்துகொண்டனர்.

ஈரோடு நகரசபைத்தலைவராக அவர் பெருமைப் புகழோடு விளங்குகையில் நடைபாதை ஆக்கிரமிப்பு களை அகற்றி அகன்ற சாலைகளைப் போட்டபோது அவருக்கு வேண்டிய வியாபாரிகள் எதிர்த்துக் கேட்ட போது, 'நான் இரண்டாவதுமுறை போட்டியிடப் போவதில்லை. சீர்திருத்தக் கருத்துகளில் நான் மாற்றிக்கொள்ளவோ பின்வாங்கவோ போவதில்லை' என்று சிரித்துக்கொண்டே பதிலுரைத்தார்.

அதுபோலவே ஈரோடு நகராட்சி சாலையில் திரியும் ஆடுமாடுகளைப் பிடித்து பவுண்டில் அடைத்த போது தனது வீட்டு ஆடுகளையும் சேர்த்தே அடைத்த தோடு அதற்கான அபராதத் தொகையையும் மனைவி யிடம் கொடுத்தனுப்பினார்.

மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது தன் தோட்டத்திலிருந்து 'கள்' இறக்கப்படுவதைத் தடுப் பதற்காக 500 தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார்.

இந்நிகழ்வுகளிலிருந்து பெரியாரின் அசைக்கவியலா மனோதிடமும் கொள்கைப் பற்றுறுதியும் விளங்கும். பெரும் தியாக மனப்பான்மையோடு தன் செல்வம், பதவிகள், புகழ் எதைப் பற்றியும் கவலைகொள்ளாமல் மக்கள் நலனுக்காக வீதிக்கு வந்து போராடிய போராளி பெரியாரின் தியாகத்திற்கு ஈடில்லை என்பதை உறுதிப்படுத்துவதாக திரு.வி.க. மற்றும் உ.வே.சா ஆகியோரின் கருத்துகள் அமைந்துள்ளன.

> "தந்தை பெரியார் அவர்கள் 1919ல் ஈரோட்டில் தாம் வகித்துவந்த நகரசபைத் தலைவர் பதவியையும் பல்வேறு கவுரவப் பதவிகளையும் துறந்து காங்கிரசில் சேர்ந்தார். அவர் துறந்த பதவிகள் 29 என்றால் எவரே இவ்வாறு செய்யவல்லவர்?
>
> ஆண்டு ஒன்றுக்கு அந்தக் காலத்திலேயே சுமார் 20 ஆயிரம் ரூபாய் வருவாய் வரக்கூடியதான சீரும் சிறப்புடனும் நடைபெற்று வந்த வியாபாரத்தினை விட்டொழித்தார்." (திரு.வி.க., நவசக்தி 24-5-1924)

அழுக்கேறிய கதராடைகளுடன் அடையாளந் தெரியாதபடி பெரியார் மூட்டை சுமந்து வந்ததைக் கண்டு உ.வே.சா மனம் பதறிக் கூறுகிறார்.

> "செல்வச்சீமானாக பெரும் வணிகராக பொது மக்களின் நன்மதிப்பினைப்பெற்ற நகரசபைத் தலைவராக வாழ்வாங்கு வாழ்ந்த தாங்கள் இன்று வணிகத்திலும் செல்வத்திலும் வீழ்ச்சி அடைந்து இப்படி மூட்டை சுமந்து ஊர்சுற்றி விற்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டீர்களே" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினார்.



பெரியார் வாழ்வின் வெளிச்சங்கள்

கி.வீரமணி

வெளியீடு: திராவிடர் கழக (இயக்க) வெளியீடு

பெரியார் திடல், 84/1(50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை - 600 007

ரூ.150/-

தன் பதவி அந்தஸ்து செல்வம் அனைத்தையும் ஒரு பொருட்டாகக் கருதாது பொதுவாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டதோடு நில்லாமல் தனது குடும்பத்துப் பெண்களையும் ஈடுபடச் செய்தார் என்பதி லிருந்தும் அவரது கொள்கை உறுதிப்பாட்டையும் தியாக உணர்வையும் விளங்கிக்கொள்ளவியலும்.

ஈரோட்டில் 1921ல் கள்ளுக்கடை மறியல் நடைபெற்றபோது பெரியாரும் அவரோடு சுமார் 100 தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். இதற்கடுத்து நாகம்மையாரும் பெரியாரின் தங்கை கண்ணம்மாளும் பல பெண்மணிகளுடன் மறியலுக்குப் புறப்பட்டனர். இதையடுத்து தமிழகமெங்கும் போராட்டம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. இந்தியாவெங்கும் எதிரொலிக்கவும் செய்தது. இந்நிலையில் காங்கிரசுக் கட்சிக்கும் அரசாங்கத்துக்குமான ஒப்பந்தப்பேச்சுக்கான ஒரு மாநாடு நடத்த வேண்டியிருந்த நிலையில் சிலர் தற்காலிகமாக மறியலை ஒத்திப்போடலாம் என்று காந்திஜியைக் கேட்டுக்கொண்டபோது ''மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும்'' என்று காந்திஜி சொன்ன பதில் 19-1-1922 நாளைய 'இந்து' பத்திரிகையில் வெளியிடப் பட்டுள்ளது.

பெரியார் 'உண்மை விளக்கம் அச்சகம்' என்ற அச்சகம் அமைத்து 'குடிஅரசு' வாரப்பத்திரிகையைத் தொடங்கினார். ''இந்தப் பத்திரிகைக்கு போதிய ஆதரவில்லாமல் நட்டப்படுவதால் இதனை நிறுத்தி விடலாமா'' எனக்கேட்ட அச்சக மேலாளருக்கு பெரியார் இப்படி பதில் சொல்கிறார்.

> ''எவர் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் எவர் படித்தாலும் படிக்காவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. நான் ஒருவனே எழுதி நானே அச்சுக்கோர்த்து அடித்து நானே திண்ணையில் உட்கார்ந்தாவது உரக்கப்படித்து மகிழ்வேன். ஊராருக்கு அது போய்ச் சேரும்.''

பெரியார் தனது அரசியல் செயல்பாடுகளில் தணியாத ஊக்கமும் தெளிவும் கொண்டமைக்கு இது மற்றொரு சான்றாக விளங்குகிறது. பின்னாட்களில் கைவல்ய சாமியார், மா.சிங்காரவேலர், பாரதிதாசன், ப.ஜீவானந்தம், அண்ணா, கருணாநிதி, புலவர் குழந்தை என எண்ணற்ற அறிஞர்களின் படைப்பாற்றல் களமாக 'குடியரசு' பத்திரிகை திகழ்ந்ததென்பது நாடறிந்த வரலாறு.

பெரியார் பங்கேற்ற விழாக்களிலேயே ஒரேயொரு விழாவில் மட்டும் அவர் உரையாற்றாமல் திரும்பியமை நடந்தேறியது. அப்போதைய காங்கிரஸ் அரசின் பண்பின்மைக்குச் சான்றான நிகழ்வும்கூட.

பெரியார் தமிழக அரசுக்கு 5 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியதனடிப்படையில் 24-8-1965ல் திருச்சியில் பெரியார் ஈ.வெ.ரா கல்லூரி துவக்கவிழாவில் முதலமைச்சர் பக்தவத்சலம் கலந்துகொண்டார். கலெக்டர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு பெரியாரும் அழைக்கப்பட்டிருந்தார். முதலமைச்சர் பேசி முடித்ததுடன் விழா முடிவடைந்துவிட்டது. நன் கொடையாளர் என்ற முறையிலும் பெரியார் பேசவோ வாழ்த்துக் கூறவோ வாய்ப்பளிக்கப்படவில்லை. உடனிருந்தவர்கள் உள்ளங்குமுறினாலும் பெரியார் இதனை பொருட்படுத்தாது அமைதியாக இருந்து விட்டார்.

அதேபோல 1962 பொதுத்தேர்தலில் பெரியார் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த போது ஈரோடு சட்டமன்ற காங்கிரஸ் வேட்பாளரான ஏ.எஸ்.கிருஷ்ணமூர்த்தியை ஆதரித்துப்பேச உடல்நிலை சரியில்லாத நிலையில் ஈரோடு வந்திருந்தார். அப்போது ஏ.எஸ்.கிருஷ்ணமுர்த்தி பெரியாரிடம் ''எனக்கு வெற்றி வாய்ப்பு நன்றாக இருக்கிறது அய்யா, நீங்கள் பிரச்சாரம் செய்தால் எதிர்மறையாகிவிடுமென்று சிலர் அச்சுறுத்துகிறார்கள், அதனால் அதனை ரத்து செய்தால் நல்லது'' என்று கேட்டுக்கொள்கிறார்.

அப்போது பெரியார் ''பரவாயில்லை அப்படியே செய்துவிடுகிறேன். எனக்கு ஒருநாள் பிரச்சாரம் வீணாகப் போய்விட்டதே என்ற கவலைதான். நீங்கள் வெற்றி பெறவேண்டும் என்பதுதான் எனது கவலையும் ஆசையும். அது நான் பேசாமல் கிடைக்கும் என்றால் அதுதான் சிறந்த முடிவு'' என்று பெருந்தன்மையோடு பதிலுரைத்து இந்த ஒருநாள் பயனற்று வீணாய்ப் போனதே என வருந்தி அன்றைய தினம் ஓய்வெடுத்துக்கொண்டார்.

பெரியாரைப் பற்றிய ஏராளமான அரசியல் நிகழ்வுகள் பயணங்கள் வாயிலாக பெரியாரின் அரும் பெரும் குணாம்சங்களை தமிழ்கூறு நல்லுலகம் முழுமை யாகப் புரிந்துகொள்வதற்கு மிகுந்த சிரத்தையோடு இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் சுட்டப்பட்டுள்ள, சுதந்திரப் போராட்டத்தில் மாபெரும் தியாகியாக விளங்கிய வ.உ.சி.யின் பெரியாரைப் பற்றிய உணர்ச்சி மயமான பாராட்டுரை எத்தனை மெய்ம்மையானது என்பதை இந்நூலைப் படிப்பதன் வாயிலாக உணர்ந்து கொள்ளவியலும். ●

நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்



விலை : ₹ 80/-



விலை : ₹ 240/-

விலை : ₹ 150/-

விலை : ₹ 315/-

விலை : ₹ 80/-

விலை : ₹ 145/-

விலை : ₹ 125/-



விலை : ₹ 110/-

விலை : ₹ 330/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

போன்: 044-26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

கிருஷ்ணகிரியில்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
புதிய விற்பனை நிலையம்

திறப்பு விழா அழைப்பிதழ்

நாள்: 17.09.2016 சனிக்கிழமை, நேரம்: காலை 11.00 மணி

இடம்: புதிய பேருந்து நிலையம், கிருஷ்ணகிரி.

வரவேற்புரை

திருமிகு. **சண்முகம் சரவணன்** அவர்கள்
மேலாண்மை இயக்குனர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

தலைமை

திருமிகு. **கே.ஆர்.சி. தங்கமுத்து** அவர்கள்
நகர மன்றத் தலைவர், கிருஷ்ணகிரி

முன்னிலை

திருமிகு. **தி. இரத்தினசபாபதி** அவர்கள்
பொது மேலாளர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

திருமிகு. **ஜே.கே. வெங்கடாசலம்** அவர்கள்
நகர மன்றத் துணைத்தலைவர், கிருஷ்ணகிரி

திருமிகு. **ஆர். சம்ஷாத்ரியாஸ்** அவர்கள்
நகர மன்ற அவைத்தலைவர், கிருஷ்ணகிரி

விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து சிறப்புரை

மாண்புமிகு. **பி. பாலகிருஷ்ணரெட்டி** அவர்கள்
தமிழ்நாடு அரசு கால்நடைத்துறை அமைச்சர்

முதல் விற்பனையைத் தொடங்கி வைப்பவர்

திருமிகு. **கே. அசோக்குமார்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர், கிருஷ்ணகிரி

முதல் விற்பனையைப் பெற்றுக்கொள்பவர்கள்

திருமிகு. முனைவர் **என். பழனிவேல்** அவர்கள்
தமிழ்த்துறைத் தலைவர், அரசு கலைக் கல்லூரி (ஆடவர்), கிருஷ்ணகிரி.

திருமதி. முனைவர் **எஸ். கீதா** அவர்கள்
தமிழ்த்துறைத் தலைவர், அரசு கலைக் கல்லூரி (மகளிர்), கிருஷ்ணகிரி.

வாழ்த்துரை

திருமிகு. முனைவர் **எம். சுப்பையா** அவர்கள்
முதல்வர், அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி..

நன்றியுரை

திருமிகு. **அ. கணேசன்** அவர்கள்
மண்டல மேலாளர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., கோவை மண்டலம்.

அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்...

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

தொடர்பு: 9489522387, 9443324508.

மனோன்மணியம் சுந்தரனார்: காலனியத்தை எதிர்கொண்ட தமிழ்ப் புலமையாளர்

க.காமராசன்

அ.கா.பெருமாள் எழுதிய 'மனோன்மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம்' என்ற நூலை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் அண்மையில் வெளியிட்டுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடியவர், மனோன் மணியம் நாடகத்தை எழுதியவர் என்ற சுந்தரனாரின் ஒரு பக்கம் பரவலாக அறியப்பட்டது. தத்துவவியலாளர், வரலாற்று ஆராய்ச்சியாளர், கல்வெட்டு ஆய்வாளர் முதலான சுந்தரனாரின் இன்னொரு பக்கம் பரவலாக அறியப் படாமல் உள்ளது. இந்த இன்னொரு பக்கத்தை அ.கா.பெருமாளின் நூல் சுருக்கமும் தெளிவும் கொண்ட நடையில் எடுத்துச் சொல்கிறது.

இந்த நூல் வாழ்வும் பணியும், நாடகாசிரியர், ஆராய்ச்சியாளர், உரைநடையாளர் ஆகிய நான்கு தலைப்புகளில் சுந்தரனாரைப் பற்றி எடுத்துரைக்கிறது. சுந்தரனாரைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள பதிமூன்று பின்னிணைப்புகள் நூலில் கொடுக்கப் பட்டுள்ளன. இந்தப் பின்னிணைப்புகள் ஆய்வாளர் களுக்கும் வாசகர்களுக்கும் ஆர்வமூட்டக் கூடியவை.

இந்த நூல் காலனியமும் தமிழ்ப் புலமையும் எவ்வாறு ஒன்றையொன்றை எதிர்கொண்டது என்பதைப் பற்றி புரிந்துகொள்ளவும் துணை

செய்கிறது. நீண்ட வரலாறு கொண்ட தமிழ்ப் புலமை மரபு காலனிய ஆட்சியின் தொடக்க காலத்தில் ஒரு புதிய நெருக்கடிகளைச் சந்தித்தது. அறிவுசார் மதிப்பிலும், புதிய காலனிய சமூக அமைப்பின் வேலைவாய்ப்பு களிலும், அரசாங்க நிர்வாகத்திலும் அதன் இடம் என்ன என்ற கேள்வி எழுந்தது. புதிய ஆங்கிலக் கல்வி முறையில் கல்வி கற்ற சுதேச அறிவாளிகள் தமிழ்ப் புலமை மரபைப் புதிய சூழலில் மீள்-உருவாக்கம் செய்ய முயன்றனர். பழம் நூல்களை அச்சு வாகனம் ஏற்றும் நடவடிக்கையின் மூலமும், பழம் மரபுக்குப் புதிய அர்த்தப்பாடுகளைத் தருவிப்பதன் மூலமும், காலனியம் அறிமுகம் செய்த அறிவுப் பரப்பைத் தமிழ்ப் புலமை மரபு நிலைநின்று எதிர்கொள்வதன் மூலமும் இதனைச் செய்தனர். அந்த வகையான முதல் தலைமுறை அறிவாளிகளில் ஒருவர் சுந்தரனார். இதனை மனோன் மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம் நூல் நேரடியாக விவாதிக்க வில்லை. ஆயினும், இந்நூல் தரும் விவரங்கள், விளக்கங்கள் அந்த விசயத்தை நோக்கி வாசகரைத் தள்ளுகிறது. இதைப் பற்றி இந்நூல் மதிப்புரையின் இறுதியில் விவாதிக்கலாம்.

சுந்தரனாரின் வாழ்வும் பணியும்

பெ. சுந்தரனார் 1855 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி ஆலப் புழையில் பிறந்தார். திருவிதாங்கூர் சமஸ்தானம் ஐரோப்பாவுடன் வாணிகம் செய்ய உருவாக்கிய சிறு துறைமுக நகரம் ஆலப்புழை. சுந்தரனாரின் முன்னோர் நெசவுத் தொழில் செய்த மக்களுக்கு சலுகை கொடுக்கப் பட்டதால் ஆலப் புழைக்குக் குடி பெயர்ந்த வேளாளர் குடும்பங்களில் ஒன்று என்று அ.கா.பெருமாள் கூறு கிறார். அவரது பெற்றோர் துணி வணிகம் செய்த பெருமாள் பிள்ளை-மாடத்தி அம்மாள்.

சுந்தரனார் பிறப்பதற்கு முன், சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே, கிழக்கிந்திய கம்பெனியின் பிரதிநிதி முறை ஆளுகையின் கீழ் திருவிதாங்கூர் சமஸ்தானம் வந்துவிட்டது. அவர் பிறந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பிரித்தானிய பேரரசின் நேரடி ஆளுகைப் பகுதியாக அறிவிக்கப்பட்ட பிரித்தானிய இந்தியப் பேரரசின் சென்னை மாகாணத்தின் அங்கம் ஆகிவிட்டது. அந்த வகையில் காலனிய அரசு இயந்திர அலுவல்முறையும், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட பிற பண்பாட்டுக் களங்களும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உருவாகின.

ஆலப்புழையில் பெ.சுந்தரனார் தொடக்கப் படிப்பைத் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும், மெட்ரிக் குலேசன் படிப்பை ஆங்கில வெர்னாக்குலர் பள்ளியிலும் முடித்தார். திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில், 1871-இல், அதாவது தமது 21வது வயதில் இளங்கலைப் பட்டத்தையும், 1880ஆம் ஆண்டு, அதாவது 25வது வயதில் முதுகலைப் பட்டத்தையும் தத்துவத்தில் பெற்றார். சுந்தரனார் தமிழ் இலக்கிய, இலக்கணத்தை எவ்வாறு படித்துக் கொண்டார் என்று தெளிவாகத் தெரியவில்லை. வீட்டிலும், ஸ்ரீ கோடகநல்லூர் சுவாமிகளிடமும் சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பாடம் கேட்டுள்ளார்.

42 ஆண்டு காலமே (1855-1897) வாழ்ந்த சுந்தரனார் 21 ஆண்டுகள் பணி செய்தார். பெரும் பாலும் கல்வி கற்பிக்கும் பணியிலும் ஆய்வுப் பணியிலும் ஈடுபட்டார். இதில் 3 மட்டுமே சமஸ்தான நிர்வாகப் பணி. அதிலும்கூட கல்வெட்டு ஆராய்ச்சிப் பணியில் கவனம் செலுத்தியுள்ளார்.

திருவிதாங்கூர் அரசர் வரலாறு குறித்து எழுதிய ஆங்கில நூல், மனோன்மணியம் கவிதை நாடகம், நூற்றொகை விளக்கம், திருஞானசம்பந்தர் காலம் பற்றியும் நம்பியாண்டார் நம்பியின் காலம் பற்றியும் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், பத்துப்பாட்டை ஆங்கிலத்தில் அறிமுகம் செய்தும் அவற்றில் சிலவற்றை மொழிபெயர்த்தும் எழுதிய கட்டுரை ஆகியவை சுந்தரனாரின் தமிழியல் பங்களிப்புகள். இவற்றைப் பற்றி அ.கா.பெருமாள் விரிவாக எழுதியுள்ளார். இவை பற்றி எடுத்துரைப்பதின் வழி சுந்தரனாரின் பன்முகத்தை எடுத்துக்காட்டுவதில் அ.கா.பெருமாள் கவனம் செலுத்தியுள்ளார்.

திருஞானசம்பந்தர் காலம் பற்றிய ஆய்வுப் பணியில் சுந்தரனார் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. தமிழ் இலக்கியங்களின் காலத்தை நிர்ணயிப்பதில்

அன்றைய ஐரோப்பிய அறிஞர்களிடையே நிலவிய இன மையவாதக் கண்ணோட்டம் நிலவியது. அதன் விளைவாக காலத்தை முன்தள்ளுவதிலும் பின்தள்ளுவதிலும் அறிவுக்குப் பொருத்தமில்லா வாதங்கள் நிலவின. அந்த நிலையில் நியாயத் தருக்க முறைப்படி திருஞானசம்பந்தர் காலத்தை கி.பி. 7ஆம் நூற்றாண்டு எனச் சுந்தரனார் நிறுவினார். இது தமிழ் இலக்கியங்களின் காலவரிசையைத் தெளிந்து கொள்வதில் மிகப் பெரிய பங்களிப்பைச் செலுத்தியது.

சுந்தரனாரின் படைப்புகளில் மனோன்மணியம் நாடகமே சுந்தரனாரைத் தொடர்ந்து தமிழ்ச் சமூகம் நினைவில் வைத்துக்கொள்ள காரணம். இந்த நூல் இன்றுவரை தமிழ்க் கல்வியில் நாடகப் பனுவல் பாடநூலாக இருந்து வருகிறது. இந்த நூலில் ஒரு விதமான நவீன தேசிய உணர்ச்சி தெரிவதாக வையாபுரிப் பிள்ளை எடுத்துக் காட்டியுள்ளார்.

சுந்தரனாரைப் பற்றி மதிப்பிட்டுப் பின்வருமாறு வையாபுரிப் பிள்ளை கூறுகிறார்:

> சென்ற நூற்றாண்டின் இறுதியிலே பெரும்புகழ் பெற்று விளங்கிய தமிழ்ப் பெரியார்களுள் அறுவர் சிறப்பாக எடுத்துச் சொல்லுதற்குரியர். அவர்களாவர்: ராவ் பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை, வி.கனகசபைப் பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார், இராஜமய்யர் என்று பெயர் வழங்கிய சுப்பிரமணிய அய்யர், பெ. சுந்தரம் பிள்ளை. இவ் அறுவரும் ஆங்கிலம் கற்று மேனாட்டுக் கலைப் பண்பில் திளைத்துத் தம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு ஒவ்வொரு வகையிலே தொண்டு புரிந்தவர்கள்... சுந்தரம் பிள்ளை தமிழிலக்கிய ஆராய்ச்சி, தமிழிலக்கிய சரிதம், தமிழ் நாடகம், தத்துவநூற் புலமை இவற்றில் எல்லாம் மேம்பட்டு, சிறந்த நூல்கள் இயற்றி, இத்துறைகள் வளர்ச்சியடைவதற்குக் காரணமாயிருந்தார்.

இந்த மதிப்பீடு இன்றும் கவனத்தில் கொள்ளத் தக்கது. வையாபுரிப் பிள்ளை குறிப்பிடும் அனைவருமே தேச உணர்ச்சி, சமூக சீர்திருத்தம், புதுமையைத் தழுவிக் கொள்ளுதல், பழமையைப் போற்றுதல் ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அ.கா.பெருமாள் சுந்தரனாரின் இந்த முகத்தை அதிகமாக விவாதிக்கவில்லை. வையாபுரிப் பிள்ளை சுந்தரனாரின் இன்னொரு முக்கிய முகம் தத்துவநூற் புலமையாளர் என்னும் முகம் ஆகும். இதைப் பற்றியும் அ.கா.பெருமாள் கவனம் செலுத்தவில்லை. சுந்தரனாரின் நூற்றொகை விளக்கம் என்ற நூல் பற்றிய விவரிப்பின் போதுகூட, அதை ஒரு உரைநடை நூல் என்னும் அளவிலேயே விளக்கியுள்ளார்.

மனோன்மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம்

அ.கா.பெருமாள்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

ரூ.70.00

சுந்தரனார்: ஒரு தத்துவநூற் தமிழ்ப் புலமையாளர்

காலனிய அரசால் உருவாக்கப் பட்ட புதிய கல்வி முறையில் சுந்தரனார் தத்துவம் பயின்று இளங்கலைப் பட்டமும் முதுகலைப் பட்டமும் பெற்றவர். மனோன்மணியம் நாடகத்தில் தத்துவ விவாதங்கள் உண்டு. தத்துவ ஆராய்ச்சியின் பயனாகவே சுந்தரனார் வரலாற்று ஆராய்ச்சியிலும் புகுந்தார் என்பது வையாபுரிப் பிள்ளையின் கூற்று. நூற்றொகை விளக்கம் என்ற நூல் சுந்தரனார் திட்டமிட்டிருந்த மிகப் பெரிய தத்துவ ஆய்வுநூல் திட்டத்தின் ஒரு சிறிய பகுதியே ஆகும்.

நூற்றொகை விளக்கம் என்ற தலைப்பில் உள்ள நூல் என்ற சொல் இன்று நாம் பயன்படுத்தும் புத்தகம் என்ற பொருளைக் குறிக்கும் சொல் அல்ல; (அறிவுத்) துறை என்ற சொல்லுக்கு ஈடானது ஆகும். நூல் என்பது அறிவினை உணர்த்தும் கருவி என வரையறுக்கும் சுந்தரனார், நூலும் சாஸ்திரமும் ஒரு பொருளுடையன என்று கூறுகிறார். “சிறப்புப் பொருள் களை நீக்கிப் பொதுவாக எதனையாவது வரன்முறை சாஸித்து ஒழுங்குபடுத்தி அறிவிப்பது என்ற பொது அர்த்தத்தை மாத்திரம் தருவதாகக் கருதில் சாத்திரமும் நூலும் ஒரு பொருளுடையனவேயாம்” என்பது சுந்தரனார் கூற்று.

பேரறிவு, சிற்றறிவு, புலனறிவு என்று அறிவை மூன்றாக வகுக்கின்றார். அதேபோல நூலையும் மதநூல், பொது நூல், கலைநூல் என்று மூன்றாக வகுக்கிறார். மத நூல், கலை நூல் ஆகிய இரண்டையும் அதிகம் பேசாது, பொதுநூல் குறித்து விரிவாகப் பேசுகிறார்.

முதல் நூல் (departmental sciences), வழிநூல் (derived sciences), சார்புநூல் (practical sciences) என பொதுநூலை மூன்றாகப் பகுக்கிறார். தத்துவநூல், கணித நூல், சத்தி நூல், இரசாயன நூல், உயிர் நூல், உளநூல் ஆகியவை பொதுநூல். சோதிடநூல், பௌமிய நூல், வியாகரணம் முதலானவை வழிநூல். தருக்க நூல், தரும நூல், சிற்ப நூல், நாவீகம், தனுர் வேதம், ஆயுள் வேதம் முதலானவை சார்பு நூல். அறிவை வகைப்படுத்திய முறையிலும், நூலை வகைப்படுத்திய முறையிலும் அவர் மரபார்ந்த கலைச்சொற்களைப் பயன்படுத்தினாலும், அச்சொற்களைப் புதிய அர்த்தங்களைச் சூத்திர விளக்கத்தில் அளிக்கிறார். அதைப் பற்றி விவரிப்பு விரிந்து செல்லுமாதலால், இவ்விடத்தில் தவிர்த்துக் கொள்கிறேன்.

அக்காலச் சென்னை மாகாணத்தின் சுதேச அறிவாளி களிடையே மூன்று விதமான போக்குகள் நிலவின. மரபார்ந்த மத, தத்துவ நிலைப்பாடுகளில் நின்று கொண்டு வாதப்போர் நிகழ்த்தும் போக்கு ஒன்று. மற்றொன்று ஐரோப்பிய மரபில் கரைந்துபோய், சுதேச மரபுகளை இகழ்ந்து நோக்குவது. சுதேச மரபுகளில் நின்று, காலனியத்தால் அறிமுகமான அறிவுப்பரப்பை உள்வாங்கிக் கொள்ள முனையும் போக்கு. இந்தப் போக்கைச் சேர்ந்தவர்களே நியாய இலக்கணம் எழுதிய யாழ்ப்பாணம் முத்துக்குமாரர் சிதம்பரம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை போன்றவர்கள்.

சுந்தரனார் மேற்கத்திய அறிவுப்பரப்பை ஆர்வத் தோடு வரவேற்று உள்வாங்கிக் கொண்டாலும், தமிழ் மரபில் நின்றே யோசிக்கிறார் போலத் தெரிகிறது. அறிவுத் துறைகளை வகைதொகைப்படுத்தி விளக்கும் முறை இதனை உணர்த்துகிறது. அதுமட்டுமல்லாமல் நூற்றொகை விளக்கம் சூத்திரங்களுக்கு எழுதிய விளக்கவுரையிலும் மரபான அத்வைத மரபிலோ, சித்தாந்த மரபிலோ நில்லாமல், ஆனால் அதே வேளையில் மேற்கத்திய தத்துவ மரபிற்குள்ளும் கரைந்து போகாமல், அறிவு, அறிவுப் புலங்கள் பற்றியெல்லாம் ஐரோப்பாவின் மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்களைப் போன்று முழுதளாவிய நோக்கில், புதிய வகையில் தமது சொந்த மரபுநிலை நின்று சிந்தனை செய்கின்றார்.

இந்த விசயம் பற்றி மேலும் இலக்கிய மாணவர் களும், வாசகர்களும் சிந்திப்பதற்கான வெளி திறந்து கிடக்கிறது. அதற்கு அ.கா.பெருமாள் எழுதியுள்ள நூல் துணை செய்யும். மனோன்மணியம் சுந்தரனாரின் இன்னொரு பக்கம் என்ற சிறிய, அறிவார்ந்த நடையில் எழுதப்பட்ட நூலே இப்படியான புதிய பரப்புகளுக்கு உந்தித் தள்ளும். ●

புதிய பொலிவுடன் புதிய ஆராய்ச்சி

இதழ் 5

வெளிவந்துவிட்டது



நா.வானமாமலையின்
மாணவர்களால்
நடத்தப்படும்
ஆய்விதழ்

₹ 200/-

ச.பிலவேந்திரன் | பா.ஆனந்தகுமார் | ஆ.தனஞ்செயன் | வி.பிரிட்டோ,சே.ச., | ச. கார்மேகம்
சி.மகேசுவரன் | ஞா.ஸ்டீபன் | ஆ.சிவசுப்பிரமணியன் | தி.சு.நடராசன் | இரா.காமராசு
கெவின் | பி.ஆண்டர்சன் | ஏ.பி.பரதன் | ஆறு.இராமநாதன் | வீ.அரசு | தி.புருஷோத்தமன்
எ.சுப்பராயலு | ஈ.சங்கரநாராயணன் | எஸ்.தோதாத்ரி | சாமிக்கண்ணு
ஆகியோர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

தொடர்பு முகவரி : நா.இராமச்சந்திரன், பொறுப்பாசிரியர். புதிய ஆராய்ச்சி
55/3, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி – 627007
அலைபேசி: +91 9487804805 மின்னஞ்சல்: newresearch.tamil@gmail.com

புதிய ஆராய்ச்சி இதழ் நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் அனைத்துக் கிளைகளிலும் கிடைக்கும்



தமிழியல் ஆய்வுவெளி - கல்விப்புலம் சார்ந்த உரையாடல்

சுப்பிரமணி இரமேஷ்

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத் துறைக்கு நீண்ட வரலாறு உண்டு; எனினும் இந்த வரலாறு எல்லாக் காலங்களிலும் ஒன்றுபோல இருந்த தில்லை. பல துணைவேந்தர்கள் உருவான இத்துறையின் முகம், துறைத் தலைவர்கள் மாறும்போதெல்லாம் தன்னுடைய முகத்தையும் மாற்றிக் கொண்டிருக்கிறது. நான் இத்துறையில் மாணவனாகச் சேரும்போது பேராசிரியர் வீ.அரசுவின் பொறுப்பில் இத்துறை இயங்கியது. கிராமங்களில் இருந்து முதுகலை படிப்பிற்காகச் சென்னைக்கு வரும் மாணவர்களுக்கு இப்பல்கலைக்கழகத்தின் தோற்றமும் அதன் நிறமும் ஒருவித அச்சத்தைத் தரும். அதற்கு நானும் விதி விலக்கல்ல. பொற்கோ துணைவேந்தரானதிற்குப் பிறகு அரசு தம் ஆய்வு மாணவர்களைக் கொண்டு தனியொரு வராக இத்துறையை நிர்வகித்து வந்தார். இக்கால கட்டங்களில்தான் இலக்கியத்துறை தன்னை முழுமை யாக நவீனப்படுத்திக் கொண்டது. 'இங்கெல்லாம் படிக்க நமக்கு இடம் கிடைக்குமா?' என்ற அவநம்பிக்கை தொடக்கத்தில் இருந்தது. நுழைவுத்தேர்வு மற்றும் நேர்காணலின் மூலம் தனக்கான மாணவர்களை அரசு தெரிவுசெய்தார்.

வீ.அரசுவின் ஆசிரியச் செயல்பாடுகள் குறித்து அ.மோகனா, 'தமிழியல் ஆய்வுவெளி' என்ற நூலொன்றை எழுதியுள்ளார். சந்தியா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இப்புத்தகம் அரசு என்ற மனிதரின் பிம்பத்தைக் கட்டியெழுப்பவில்லை; அவரைத் துதி பாடவில்லை. மாறாக, அவர் தம்முடைய மாணவர் களோடு இணைந்து முன்னெடுத்த பல்வேறு ஆய்வுப்

பணிகளைச் சிரத்தையோடு பதிவுசெய்கிறது. தனிமனித வழிபாட்டை எப்போதும் ஏற்றுக்கொள்ளாதவர் அரசு என்பது அவரை அறிந்த அனைவருக்கும் தெரியும். இதனை மோகனாவும் காப்பாற்றியுள்ளார். தன்னுடைய சிரத்தையான பணிகளுக்காக ஒருபோதும் தன்னை வியந்துகொள்ளாதவர் அரசு. விமர்சனங்களையும் பாராட்டுகளையும் சிறிய உதட்டுச்சுழிப்பில் கடந்து போகும் முதிர்ச்சியை அவர் பெற்றிருந்தார். நானும் அவருடைய மாணவன் என்கிற முறையில், அவருடைய வகுப்பறைச் செயல்பாடுகள் குறித்த என்னுடைய புரிதலை இப்புத்தகத்தின் துணையோடு இம்மனப் பதிவில் இணைத்துக்கொள்கிறேன்.

இலக்கிய மரபு, இலக்கண மரபு, புனைகதை மரபு, காப்பிய மரபு என அரசு எங்களுக்கென ஒரு புதிய பாடத்திட்டத்தை உருவாக்கியிருந்தார். ஒவ்வொரு தாளுக்கும் கீழே இருபதுக்கும் மேற்பட்ட பார்வை நூல்களை அதில் பரிந்துரைத்திருந்தார். ஒரு தாளுக்கு ஒரு புத்தகம் எனப் படித்துவிட்டு வந்த எங்களுக்கு இப் பட்டியல் ஒருவித அயர்ச்சியை உண்டாக்கியது. தற்போது அந்த நூல்கள் அனைத்தும் என்னிடம் இருக்கின்றன. இந்தப் புத்தகங்களையெல்லாம் வாங்க வேண்டும் என்றோ படிக்கவேண்டும் என்றோ ஒரு நாளும் எங்களிடம் அவர் கூறியது கிடையாது. ஆனால் அவரின் ஆசிரியச் செயல்பாடுகள் அவர் நினைத்ததை யெல்லாம் எங்களைத் தன்னெழுச்சியாகச் செய்ய வைத்தன. மரபிலக்கியத்தின்மீது ஒரு புறக்கணிப்பு இருந்ததை அவரிடம் உணரமுடிந்தது. 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்று என்னுடைய நண்பர் ஒருவர் பண்பாட்டிற்குக் கலித்தொகையில் இருந்து வரையறை கூறினார். அந்தப் பதில் கேட்டு அரசு மெலிதாகச் சிரிப்பதை நாங்கள் பார்த்தோம். எங்களுக்குச் சொல்லிக்கொடுத்த ஆசிரியர்கள்மீது அவர் வைத்த விமர்சனம்தான் அந்தச் சிரிப்பு என்பதை அடுத்துவரும் நாட்களில் நாங்கள் உணர்ந்து கொண்டோம். 'மனித இனக்குழுக்களின் ஒட்டுமொத்த உரையாடலைத்தான் 'பண்பாடு' என்ற சொல் குறிப்பிடுகிறது' என்று அந்த ஒற்றைச் சொல்லுக்கு இரண்டு மணிநேரம் விளக்கம் கொடுத்தார்.

அரசு தன்னுடைய பணிக்காலத்தில் (1985-2014) பாராட்டுதல்களைவிட விமர்சனங்களைத்தாம் அதிகமாக எதிர்கொண்டிருக்கக்கூடும் என்பது என்னுடைய அவதானிப்பு. அதைத்தான் அவர் வெளிப்படையாக விரும்பினார். தமிழ் இலக்கியத்தின்மீது அவருக்குச் சில மாற்றுக்கருத்துக்கள் இருந்தது. தெரிந்தெடுத்த சில இலக்கிய, இலக்கணங்களைத் தொடர்ந்து வாசித்தல்; அதிலுள்ள சில பகுதிகளை மனனம் செய்தல்; அப் பிரதியிலிருந்து கேட்கப்படும் சில வினாக்களுக்கு விடை எழுதுதல்; மதிப்பெண் பெறுதல் போன்ற மரபான வகுப்பறைச் சடங்குகளுக்கு எதிராக அவரின் செயல் பாடுகள் இருந்தன. தேர்வுத்தாளைக்கொண்டு மாணவர் களை மதிப்பிடும் முறையை முற்றாக அழித்தொழித்தார். மாணவர்கள் ஒரு பிரதியை எவ்வாறு அணுகுகிறார்கள்; அப்பிரதியின்மீது தன்னுடைய கருத்தை எவ்வாறு உருவாக்குகிறார்கள்; அதனைப் பொதுவெளியில் எவ்வாறு விவாதிக்கிறார்கள் போன்ற எதிர்வினைகளைக் கொண்டுதான் அவர் மாணவர்களை அளவிட்டார். ஒரு பிரதியின்மீது அல்லது கருத்தின்மீது அதிக விமர்சனங் களை முன்வைத்தவர்களை அரசு மறைமுகமாக ஊக்கப்படுத்தினார். எவற்றையும் கண்மூடித்தனமாகப் பாராட்டும் முறைமைக்கு எதிர்திசையில் இவரது நடவடிக்கைகள் இருந்தன என்பதற்கு என்னால் பல உதாரணங்களைக் கூற முடியும்.

அரசுவின் மாணவனாக நான் சேர்வதற்கு முன்பு 'சிறுபத்திரிகை' என்ற சொல்லைக் கேள்விப்பட்டதுகூட இல்லை. தமிழ்ச் சிறுபத்திரிகைகளை அவர்தான் எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர் சேகரிப்பில் இருந்த சிறுபத்திரிகைகள் பலவற்றை எங்களுக்கு வாசிக்கக் கொடுத்தார். பின்னர் நாங்களே ஆளுக்குக் கொஞ்சம் காசுபோட்டு பத்திரிகைகளை வாங்கி, மாற்றி மாற்றி படிக்க ஆரம்பித்தோம். சிறுபத்திரிகைகளோடு எங்கள் வாசிப்பை நிறுத்திக் கொள்ளாமல், நவீன இலக்கியம் சார்ந்த புத்தகங்களையும் வாங்கி வாசிக்கத் தொடங் கினோம். அப்போதுதான் பெண்கவிதைகளும் தலித் கவிதைகளும் எங்களுக்கு அறிமுகமாயின. எப்போ தாவது, 'என்னென்ன புத்தகங்கள் வாங்கினீர்கள்?' என்று கேட்பார். அவருடைய நண்பர்கள் அவருக்குக் கொடுத்த புத்தகங்களையும் எங்கள் வாசிப்பு வட்டத்துக்குப் படிக்கக் கொடுப்பார். 'ஆங்கில அறிவும் தமிழ்படிக்கும் மாணவர்களுக்குக் கண்டிப்பாக வேண்டும்' என்று தொடர்ந்து வலியுறுத்தினார். தினமணியையும் இண்டியன் எக்ஸ்பிரஸையும் வாங்கி வகுப்பில் படிக்கச் சொன்னார். ஒரு கட்டத்தில் வாசிப்பு வட்டத்தில் புத்தகங்களைப் பெறுவதில் போட்டி அதிகமானது. பிரச்சினை அவரது கவனத்துக்குச் சென்றது. புன்னகைத்தார்.

அரசு தன்னுடைய துறை சார்பில் 'மேடை' என்ற மாணவர்களுக்கான உரையாடல் அமைப்பை உருவாக்கி யிருந்தார். புதன் கிழமைகளில் இது செயல்பட்டது. மாணவர்கள் தங்களுடைய படைப்புக்களை இக் கூட்டத்தில் வாசிக்க வேண்டும். தொடர்ந்து அந்தப் படைப்பின்மீது விவாதம் நடைபெறும். தொடக்கத்தில் மட்டும் அரசு பங்கேற்றார். பின்பு மாணவர்களே இதனை ஒருங்கிணைத்தார்கள். எதையும் மறைந்திருந்து கண்காணிக்கும் அதிகார வளையத்தை அவர் ஒரு போதும் விரும்பியதில்லை. மாணவர்களே அனைத் தையும் முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கமாக இருந்தது. அதுவரை நான் அறியாத பல எழுத்தாளர்கள் எனக்கு அங்குதான் அறிமுகமானார்கள். தொடக்கத்தில் ஒருவித பதற்றம் அனைவருக்கும் இருந்தாலும் பின்பு விவாதத்தைத்

தாண்டிய ஒரு கொண்டாட்டத்திற்கான வெளியாக இந்த அமைப்புச் செயல்பட்டது. முதலாம் ஆண்டு மாணவர்கள் முதல் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் வரை இதில் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆய்விற்கான தேடல் இங்கிருந்துதான் தொடங்கியது.

'திரைவெளி' என்ற நிகழ்வையும் அரசு தம்முடைய மாணவர்களுக்காக ஒருங்கிணைத்தார். இந்நிகழ்வில், அரிய குறும்படங்களும் ஆவணப்படங்களும் மாணவர் களின் பார்வைக்காக ஒளிபரப்பப்பட்டன. மாணவர்கள் தாங்கள் வாசிக்கும் பிரதிகளோடு உரையாடலை நிறுத்தி விடாமல், அதன் ஆசிரியர்களோடும் ஊடாட வேண்டும் என்று அரசு விரும்பினார். அதற்கான வாய்ப்புகளையும் தொடர்ந்து உருவாக்கிக் கொடுத்தார். கா.சிவத்தம்பியைச் சென்னைப் பல்கலைக்கழக விருந்தினர் இல்லத்தில் சந்தித்து, தொல்காப்பியப் பனுவலில் எங்களுக்குள்ள புரிதலின்மை குறித்து உரையாடினோம். திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு தேநீர்க்கடையில் எங்களுக்கும் கோணங்கிக்குமான ஓர் உரையாடலை அவருடைய முனைவர்பட்ட ஆய்வு மாணவர் ஒருவர் ஒருங்கிணைத்தார். நுஃமான், மௌன குரு, சித்ரலேகா மௌனகுரு, வ.ஐ.ச.ஜெயபாலன் உள்ளிட்ட ஈழத்தைச் சார்ந்த ஆளுமைகள் அனை வரையும் மாணவர்களோடு உரையாடச் செய்தார். ஈழத் தமிழர்கள் குறித்த புரிதலை மாணவர்களிடம் வெளிப் படையாக விவாதித்தார். புலம்பெயர்ந்த தமிழர்களின் படைப்புகளை வாசிப்பதற்கென்றே 'தமிழர் அலை இயல்' என்ற தாளைப் பாடத்திட்டத்தில் சேர்த்தார். உலகம் முழுக்கப் பரவியுள்ள தமிழர்களின் கலை இலக்கியச் செயல்பாடுகளை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் முனைப்புடன் செயல் பட்டார். வருடத்திற்கொருமுறை இந்தியா முழுக்க மாணவர்கள் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்தார். இதனைத் தம்முடைய பணிக்காலம் முழுமையும் தொடரச்செய்தார். தம்முடைய மாணவர்கள் அனைத் தையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற கூடுதலான ஆசை அரசுவுக்குண்டு. அடுத்த பத்தாண்டுகளுக்குத் தமிழ்ச்சூழலில் செய்யவேண்டிய பணிகள் குறித்த பட்டியல் அவரிடம் எப்போதும் இருக்கும். இப் பட்டியல் தொடர்ந்து தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கும். 1989இல் மாணவர்களுக்கு நவீன இலக்கி யத்தைக் கொண்டு சேர்க்கும் நோக்கத்தில் 'சிறுகதை பட்டறை' என்னும் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். தமிழில் குறிப்பிடத்தகுந்த படைப்பாளிகளான ஜெயகாந்தன், வண்ணநிலவன், சி.சு.செல்லப்பா, வல்லிக்கண்ணன் போன்றவர்களைத் துறைக்கு அழைத்து மாணவர்களுடன் கலந்துரையாடலை நிகழ்த்தினார்.

சென்னையில் சிரத்தையாகச் செயல்படக்கூடிய நூலகங்களுக்கு மாணவர்கள் மாதம் ஒருமுறை செல்ல வேண்டும் என்று எங்களுக்கான கால அட்டவணையை உருவாக்கியிருந்தார். மறைமலை அடிகள் நூலகம், கன்னிமாரா நூலகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், ஆவணக் காப்பகம், உ.வே.சா. நூலகம் என சென்னையில் உள்ள முக்கியமான நூலகங்களெல்லாம் எங்களுக்கு இக்காலத்தில் அறிமுகமாயின. இந்த நூலகங்கள்தாம் எங்களுக்கான போதிமரங்கள் என்பதை நாங்கள் உணர்ந்தோம். வகுப்பறையைவிட இந்த நூலகங்களில்தான் நீங்கள் அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியும் என்று எங்களை நூலகங்களுக்குத் தத்துக் கொடுத்து விட்டார். அரசுவின் மாணவர் என்று தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் ஒவ்வொருவரும் சிறிய அளவிலாவது ஒரு நூலகத்தை தம்முடைய வீட்டில் பராமரிப்பர். இதுதான் அவர் தம்முடைய மாணவர்கள் மீது ஏற்படுத்திய தாக்கம்.

தமிழக பல்கலைக்கழகத் துறைகளில் அதிக அளவில் இளநிலை ஆய்வாளர்களை உருவாக்கிய பெருமையும் அரசுவுக்குண்டு. பல்கலைக்கழக மானியக் குழு (UGC) நடத்தும் கல்லூரி ஆசிரியர்களுக்கான தகுதித்தேர்வினை (NET), முதுகலை முடிப்பதற்கு முன்பே அவருடைய மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றுவிடுவார்கள். இதையெல்லாம் அவர் மிக எளிமையாகச் செய்துகொண்டிருந்தார். இதற்காக மாணவர்களை அவர் ஒருநாளும் வருத்தியது கிடையாது. பேராசிரியர் சி.நல்லதம்பி அவருக்குத் துணையாக இருந்தார். இது குறித்துப் பொதுவெளிகளில் பேசி, அரசு மகிழ்ச்சி அடைந்ததை நான் பலமுறை கவனித்திருக் கிறேன். ஆனால் ஒருபோதும் இதனைத் தன்னுடைய சாதனை என்று அவர் பெருமை பேசியது கிடையாது. 'அவர் என்னுடைய மாணவர்' என்று பிறரிடம் அடையாளப்படுத்தும்போது அவருடைய குரலில் வழியும் குதூகலம் அலாதியானது. இதைத்தான் அவர் தன்னுடைய மாணவர்களிடம் எதிர்பார்த்தார்.

தன்னை விமர்சிக்கும் மாணவர்களைத் தனிப்பட்ட முறையில் அரசு அங்கீகரித்தார். எதைப்பற்றியும் விவாதிக்கும் வெளியை அவர் மாணவர்களிடம் உருவாக்கியிருந்தார். ஆசிரியர்கள்மீதும் வகுப்பறையின் மீதும் கட்டப்பட்டிருக்கும் புனிதங்களை அவர் ஒரு போதும் தன்னுடைய துறையில் அனுமதித்ததில்லை. அவரைப் பார்க்கக்கூடிய எந்த இடத்திலும் நமக்குத் தேவையான அவரின் கையெழுத்தைப் பெறமுடியும். ஆசிரியர் குறித்த போலியான மதிப்பீடுகளையும் அதிகார வட்டத்தையும் தகர்ப்பதில் ஒரு கலகக்காரனாக அவருடைய செயல்பாடுகள் அமைந்திருந்தன. பொது வாகக் கல்லூரிகளில் ஆண்களும் பெண்களும் தனித் தனியாகத்தான் அமர்ந்திருப்பார்கள். அப்படித்தான் அவர்களுக்கு இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கும். இதனை அடியோடு தன்னுடைய துறையில் மாற்றினார். யாரும் யாருடைய பக்கத்திலும் அமர்ந்துகொள்ளும் சுதந்திரத்தை வழங்கினார். அதேசமயத்தில் வகுப்பில் தனித்தனிக் குழுவாக மாணவர்கள் பிரிந்திருப்பதை அவர்

ஒருபோதும் விரும்பியதில்லை. வகுப்பில் மாணவர் ஒருவர் கால்மீது கால்போட்டு அமர்வதை வரவேற்றார். குருகுலக் கல்வியின் எச்சங்கள், இன்றைய நவீனக் கல்வியில் தொடர்வதைத் தன்னுடைய சின்னச்சின்ன செயல்பாடுகளால் மாற்ற முயன்றார்.

சிவ.செந்தில்நாதனைப் பதிப்பாளராகக்கொண்டு அரசு வெளியிட்ட 'கங்குவரிசை' சிறுவெளியீடு தமிழில் நல்லதொரு முயற்சியாக அனைவராலும் வரவேற்கப் பட்டது. இதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட 'மாற்றுவரிசை' புத்தகங்கள் அவருடைய மாணவர்கள் பலரைப் புத்தக ஆசிரியர்களாகத் தகுதியேற்றம் செய்தன. ஒவ்வொரு வருடமும் ஒரு பொருண்மையைத் தெரிவுசெய்து மாணவர்களே கருத்தரங்கங்களை ஒருங்கிணைக்கச் செய்தார். 'மாற்றுவெளி' என்ற ஆய்விதழ் அரசுவின் ஆகச்சிறந்ததொரு முயற்சி என்று உறுதியாகச் சொல்லலாம். அவருடைய மாணவர்கள் பலர் இவ்விதழின் ஆசிரியர் குழுவில் இருந்தனர்; பலர் ஆய்வுக்கட்டுரைகளை எழுதினர். தம்முடைய மாணவர்கள் தொடர்ந்து ஆய்வுப்புலத்தில் செயல்படு வதற்கான பல்வேறு வெளிகளை அரசு தொடர்ந்து உருவாக்கிக்கொண்டே இருந்தார். மாணவர்கள் பலரின் புத்தக முயற்சிகளுக்குத் தம் நண்பர்களின் பதிப்பகங் களைப் பயன்படுத்திக் கொண்டார். அச்சு ஊடகத்தின் எல்லா வடிவங்களையும் மாணவர்களைப் பயன்படுத்தச் செய்தார்.

தம்முடைய மாணவர்களுக்கு இயல்பாக இருக்கும் திறன்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்வதில் தனித்துவம் மிக்கவராக அரசு இருந்தார். 1986-87இல் 'பல்கலை அரங்கம்' என்ற நாடகக் குழுவினைத் தம்முடைய மாணவர்களைக் கொண்டே உருவாக்கினார். தமக்கிருக்கும் நாடக வட்டத்தைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு நாடகப் பயிற்சியளித்தார். மேலும் தன்னுடைய துணைவியார் அ.மங்கை முன்னெடுத்து நடத்திய 'மௌனக்குறம்' சார்பில் 'குறிஞ்சிப்பாட்டு', 'தீனிப்போர்', 'ஔவை', 'மணி மேகலை' போன்ற நாடகங்களில் தம்முடைய மாணவர் களை நடிக்கச் செய்தார். அரங்கச் செயல்பாடுகளுக்காக ஈழத் தமிழர்களின் உதவியோடு அவர் நடத்திய 'கட்டியம்' இதழின் செயல்பாடுகள் பற்றி அ.மோகனா இந்நூலில் விரிவாக எழுதியுள்ளார். தமிழ் நாடகத்தில் நிறைய ஆய்வு களைச் செய்யவேண்டும் என்ற ஆசை அரசுவுக்குண்டு. கையெழுத்துப் பிரதியாகவுள்ள நாடகப்பிரதிகள் அனைத்தையும் தேடித்தேடி அச்சுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வமும் அவரை இன்று வரை விடவில்லை. அதன் தொடக்கச் செயல்பாடாகச் சங்கரதாஸ் சுவாமிகளின் பதினெட்டு நாடகங்களை ஒரே தொகுப்பாகப் பதிப்பித்தார்.

அரசு ஒரு பிரதியை அணுகும் தன்மை முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். இலக்கியத்தின் செய்யுளுக்குப் பொருள் சொல்லும் வாசிப்பு முறையை முற்றாக மறுதலித்தார். ஒரு செய்யுளுக்குப் பின்பு செயல்படும் அரசியலைப் புரிந்துகொள்ள முயற்சிக்கச் சொன்னார். தமிழ்த்துரோகி என்று அனைவராலும் 'அன்போடு' அழைக்கப்பட்ட வையாபுரிப்பிள்ளையை முழுமையாகப் படிக்கச் சொன்னார்; வைதீக சமயத்தை உயர்த்திப் பிடிக்கும் பரிமேலழகரின் உரையைப் புறக்கணிக்கச் சொன்னார்; சிலப்பதிகாரத்தை அனைவரும் கொண் டாடும்போது, மணிமேகலையின் சிறப்புக்களை எடுத்துக்கூறி அதன் வாசிப்பை வேறொரு தளத்திற்குக் கொண்டுசெல்வார். தமிழில் முதல் சிறுகதையை எழுதியவர் வ.வே.சு.ஐயர் என்று தொடர்ந்து இலக்கிய வரலாறுகள் கூறிவருகின்றன. ஆனால், 'தமிழ்ச்சூழலில் சிறுகதை வடிவத்தைக் கண்டெடுத்தவரும் அதனை



தமிழியல் ஆய்வுவெளி

வீ.அரசு ஆசிரியம் - ஆய்வு

அ,மோகனா

வெளியீடு: சந்தியா பதிப்பகம்,

புதிய எண்.77, 53வது தெரு, 9வது அவென்யூ,

அசோக் நகர், சென்னை - 600 083

ரூ.240/-

இதழியல் மரபு சார்ந்து நிலைபேறு கொள்ளச் செய்த வரும் புதுமைப்பித்தன்தான். அதற்குமுன் தமிழில் எழுதப்பட்ட சிறுகதைகளாகக் கூறப்படுபவை அனைத்தும் சமய மரபு சார்ந்த - நாட்டார் மரபு சார்ந்த போதனைக் கூறுகளைக்கொண்ட கதைத்தன்மைகளை உள்வாங்கி யவை. நவீன மரபை அவை உள்வாங்கவில்லை' என்று (மாற்றுவெளி:11) எழுதியுள்ளார். இதுபோன்று மாற்றுச் சிந்தனைகளின் விளைநிலமாக அரசு இருந்தார் என்பது தான் அவரைப்பற்றிய என்னுடைய புரிதல். இதற்காகக் கல்விப்புலம் சார்ந்தும் நிர்வாகப்புலம் சார்ந்தும் மறை முகமாக நிறைய நெருக்கடிகளை அவர் எதிர் கொண்டார்.

அ.மோகனா எழுதியிருக்கும் இந்நூல் பேராசிரியர் வீ.அரசு என்கிற ஓர் ஆளுமையைப் பற்றி மட்டும் பேச வில்லை. பதிப்புத்துறையில் அவர் முன்னெடுத்த பல்வேறு ஆளுமைகளின் செயல்பாடுகளையும்

விவாதிக்கிறது. குறிப்பாக, தமிழ்ச்சூழலில் பெரும்பாலும் அறியப்படாத ஆளுமைகளின் ஆய்வுக்கு அரசு முன்னுரிமை கொடுத்தார். வ.உ.சிதம்பரம்பிள்ளை ஆங்கிலேயருக்கு எதிராகக் கப்பல் ஓட்டியவர் என்ற படிமம்தான் பொதுப்புத்தியில் படிந்து போயுள்ளது. இறுதிக்காலத்தில் அவருக்கிருந்த இலக்கிய ஈடுபாட்டை ஆய்வாளர்கள் தொடக்கத்தில் முன்னெடுக்கவில்லை. அரசு, வ.உ.சி.யால் உருவம்பெற்ற பதிமூன்று நூல் களைத் தொகுத்துப் பதிப்பித்தார். இத்தொகுப்பு வ.உ.சி.யைச் சிறந்த பதிப்பாளராகவும் உரையாசிரிய ராகவும் முன்னிலைப்படுத்தியது. ஜீவாவின் தொகுப்பு, அவரைக் கடித இலக்கியத்தின் முன்னோடி என்று நிறுவுகிறது. பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திய புழங்கு பொருட்களைச் சேகரிப்பதில் ஆர்வமுடையவராகச் சாத்தன்குளம் அ.இராகவன் இருந்துள்ளார். அவர் குறித்த சிரத்தையான ஆய்வைத் தன் மாணவி ஒருவர் மூலம் நிகழ்த்தச் செய்தார். நவீன இலக்கியத்தில் புதுமைப்பித்தனின் இதழ்வழி பதிப்பு அரசுவின் புதிய முயற்சி. ஒவ்வொரு இதழுக்கும் தனித்தனி அரசியல் உண்டு. புதுமைப்பித்தன் என்ற கதையாசிரியர், ஒவ்வொரு இதழுக்கும் எழுதிய கதைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது வெளிப்படும் இதழியல் சார்ந்த அரசியல் இதன்மூலம் துலக்கம் பெற்றது.

நவீன இலக்கியத்தில் மற்றொரு புதிய முயற்சியை அரசு முன்னெடுத்தார். ‘இருபதாம் நூற்றாண்டின் சிறுகதைகள் நூறு’ என்ற சிறுகதைத் தொகுப்பை அடையாளம் பதிப்பகத்தின் மூலமாகக் கொண்டு வந்தார். இதுவரை அதிகமும் அறியப்படாத சிறுகதை ஆசிரியர்களுக்கு இத்தொகுப்பில் முக்கியத்துவம் கொடுத்தார். இடதுசாரிகள், பெண்கள், தலித்துகளின் சிறுகதை முயற்சிகள் இத்தொகுப்பின் மூலம் ஆவணப் படுத்தப்பட்டன. அனைவராலும் அறியப்பட்ட சிறு கதையாசிரியர்களின் கதைகள் இதில் இடம்பெற வில்லை. இதனை ஒரு கலகச்செயல்பாடாகவே அரசு செய்தார். தொகுப்புகள் எப்போதும் சார்புத்தன்மை கொண்டவைதாம்; இது ஒடுக்கப்பட்டவர்கள் சார்பான சார்பு என்று இத்தொகுப்பின்மீது வைக்கப்பட்ட விமர்சனங்களை மிக எளிமையாகக் கடந்து போய் விட்டார்.

தற்போதுள்ள பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களின் செயல்பாடுகள் குறித்து, அவநம்பிக்கை கொண்டவர் சந்தியா நடராசன். நிறுவனம் சாராத தனிமனிதர்கள் முன்னெடுத்த தமிழாய்வுகளைக்கூட இன்றுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் செய்யவில்லை என்பதுதான் அவருடைய வெளிப்படையான விமர்சனம். அவர் பதிப்பிக்கும் புத்தகங்களுக்குப் பதிப்புரைகூட அவர் எழுதுவதில்லை. ஆனால் இந்நூலுக்கு அரசு குறித்து அவர் எழுதியுள்ள அறிமுகவுரை, மிகச் சிறந்தொரு சாளரம்.

‘தமிழியல் ஆய்வுவெளி’ நூலின் பிற்சேர்க்கையில் இடம்பெற்றுள்ள அரசுவின் நேர்காணல் மிக முக்கிய மான பதிவு. மேலும் விவாதிக்கப்படவேண்டிய பல தொடக்கங்கள் இந்நேர்காணலில் இடம்பெற்றுள்ளன. வெளிப்படையான அவரது விமர்சனம்தான் அவரின் அடையாளம். அ.மோகனாவின் உழைப்பு இந்நூல் முழுக்கப் பரவிக்கிடக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் அரசுவின் ஆக்கபூர்வமானச் செயல்பாடுகளை இந்நூல் வழியாகத்தான் நான் ஒரு தொகுப்பாகக் கண்டடைந் தேன். அரசுவின் கல்விப்புலம் மற்றும் ஆய்வுப்புலம் சார்ந்த பணிகள் குறித்து, இதைவிடச் சிறந்தொரு ஆவணத்தை வேறொருவரால் உருவாக்கிவிட முடியாது என்பது என்னுடைய அவதானிப்பு. ●

வாசகர் குரல்

ஆகஸ்ட் மாத ‘உங்கள் நூலகம்’ இதழில் வெளியான இரா. காமராசு எழுதிய கொடிக்கால் அவர்களின் கட்டுரை படித்தேன். இக்கட்டுரை வராமல், இருந்திருந்தால் இவரைப் பற்றித் தெரியாமலே போயிருக்கும். கொடிக்கால் ஷேக் அப்துல்லாவைத் தேடித்தேடி, படிப்பேன் மிக்க நன்றி.

எதிர்ப்பிலக்கியத்தின் முன்னோடி, முல்க்ராஜ் ஆனந்த், தீண்டாமையைக் கிள்ளி எறிய 2004- செப்டம்பர் 28 வரை போராடி போராடிப் புகழ் அடைந்துள்ளார். இவருக்கெல்லாம் மரணம் இல்லவே இல்லை. சுரண்டப் படுபவர்களுக்காக வாழ்ந்தவர் எழுதியவர். காலிங்கராயன் கதை அருமை. வாழ்த்துக்கள்.

ஞா. சிவகாமி

‘வாசகர் குரல்’
பகுதிக்கு
வாசகர்களின்
கருத்துகள்
விமர்சனங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி :

உங்கள் நூலகம்
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.,
அம்பத்தூர், சென்னை - 600 098.
email:ungalnoolagam@gmail.com

திணைக் கோட்பாடு: ஆய்வு அறம்

சுஜா சுயம்பு

'...நாம் தொல்காப்பியம், அகத்திணையியல், புறத்திணையியல்களை வைத்துக்கொண்டே சங்கப் பாடல்களைப் பார்க்கின்றோம். சங்க இலக்கியம் பற்றிய நமது பார்வையைத் தொல் காப்பியமும் அதற்கான உரைகளும் தீர்மானித் துள்ளன. தொல்காப்பியப் பொருளதிகாரம் கிடைக்காமல் சங்க இலக்கியப் பாடல்கள் மாத்திரமே கிடைத்திருந்தால், சங்க இலக்கி யங்கள் பற்றிய எமது மதிப்பீடு இப்பொழுது உள்ளதுபோன்றே அமைந்திருக்குமா? என்பது ஒரு சுவாரசியமான வினாவாகும்.' (2007:47)

என்ற பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கேள்வி யுடனேயே இந்தக் கட்டுரையைத் துவங்கலாம் என்று எண்ணுகிறேன். மேற்குறிப்பிட்ட குறிப்பு சங்க இலக்கிய வாசிப்பு சார்ந்த உரையாடல்களின் பெரும்

பரிசல் புத்தக நிலையத்தின் வெளியீடாக, சில மாதங்களுக்கு முன்னர் திணை உணர்வும் பொருளும் என்ற நூல் வெளிவந்துள்ளது. இந்நூலை எழுதிய முனைவர் வெ. பிரகாஷ் இக்கட்டுரை ஆசிரியரின் ஒருசாலை மாணாக்கர் – ஒரு கை மாணவப் பரம் பரையைச் (ஒரே நெறியாள்கையைக் கொண்ட மாணவச் சந்ததிகளைக் குறிப்பிடும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை வழக்கம்) சேர்ந்தவர் என்ற முறையிலும் சங்க இலக்கியத் திணை, துறை தொடர்பாக முனைவர்பட்ட ஆய்வினை மேற்கொண்டவர் என்ற நிலையிலும் இந்நூல் தொடர்பாகப் பேசுவது எனது கடமை என்று எண்ணுகின்றேன்.

- இந்நூல் இரண்டு கட்டுரைகளையும் முடிவுரைக் கட்டுரையையும் சேர்த்து மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. முதல்பகுதி அல்லது கட்டுரை பகுதி 'தொல்காப்பியம்' என்ற இலக்கணப் பிரதியையும் அது சார்ந்த உரைமரபுகளோடும் கொண்டுள்ள பிரிப்பறியாப் புணர்வை எடுத்துக்காட்டுவதோடு இலக்கணமயப்பட்ட இலக்கிய வாசிப்பைப் புறக் கணிக்கும் புலமைக்குரல்களையும் கவனப்படுத்துகிறது.

நிறைவைப் பெறாத மேலாய்வுக்களங்கள் மீளாய்வு செய்யப்பட்டுப் புதிய பல கருதுகோள்கள் முன்வைக்கப் படுவது ஆய்வுலகிற்குப் புதியதன்று. ஆனால் ஏற்கனவே கிளர்த்தப்பட்டு முன்மொழியப்பட்ட கருதுகோள்களைத் தானே முதலில் கண்டுபிடித்தது போலவும் அது பற்றிய புதிய கொள்கைகளை மாறுபட்ட கோணத்தில் உருவாக்கிவிட்டதாகவும் எண்ணுகின்ற போக்கும் ஆய்வுலகில் உள்ளது. இதை ஒருவிதமான நோய் என்று கூறுவதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது.

திணைக்கோட்பாடு பற்றிப் பேசுகிறது; திணைக்கோட்பாட்டு உருவாக்கத்தின் அடிப்படைகளாகிய முதல், கரு, உரி; திணை வகுப்பில் செய்யப்படவேண்டிய மாற்றம் பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

- இரண்டாவது பகுதி கைக்கிளை, பெருந் திணை சார்ந்த உரையாசிரியக் கருத்தியல் களையும் பிற்காலப் பொருளிலக்கணச் செல் நெறிகளில் இவ்விரு கருத்துநிலைகளும் அடைந்த மாற்றத்தையும் எடுத்துக்காட்டி இவ்விரு திணைகளும் அன்பின் ஐந்திணை களோடு ஒப்பவைத்து எண்ணத்தகுந்தவை என்ற மையத்தைக் கொண்டமைந்துள்ளது.

- மூன்றாவது பகுதி உரிப்பொருளின் முக்கியத் துவத்தை விளக்கி, சங்க இலக்கியத் திணைப் பாகுபாடு உரிப்பொருள் அடிப்படையிலேயே செய்யப்படவேண்டும் என்ற கருத்தை முன் வைக்கிறது.

மேற்குறிப்பிட்ட நூல் பற்றிய விமர்சனமாக/ மறுப்பாக இக்கட்டுரை அமைகிறது. இந்த விமர்சனக் கட்டுரை இரண்டு பகுதிகளாக அமைகிறது. முதல் பகுதி திணைக்கோட்பாடு பற்றி விளக்கப்படும் பகுதியில் எடுத்துக்கூறப்பட்டுள்ள இரண்டு கருதுகோள்கள் மீதான மாற்றுக்கருத்தை முன்வைக்கிறது (பெருந்திணை பற்றிக் குறிக்கும் இடங்களிலும் எமக்குக் கருத்துவேறுபாடுகள் உண்டு எனினும் அவை இக்கட்டுரையில் குறிப்பிடப் படவில்லை. வேறொரு சூழலில் அக்கருத்து முன் வைக்கப்படும்). இரண்டாவது பகுதி மூன்றாம் கட்டுரையில், நண்பர் புறக்கணித்த உரையாசிரியக் கருத்தியலை எடுத்துக்கூறுவதாகவும் அமைகின்றது.

முதலில் தொல்காப்பியத் திணைக்கோட்பாடு பற்றிச் சுருக்கமாக விளங்கிக்கொள்ளலாம்.

சங்க இலக்கியத் திணை மரபு என்ற தொன்மை யான தமிழ்க் கவிதை மரபு பற்றிப் பேசும் ஒவ்வொரு ஆய்வுகளும் தொல்காப்பியரின் திணைக்கோட்பாட்டை விளக்காமல் சங்க இலக்கியத் திணை மரபு குறித்து எடுத்துரைப்பதில்லை. ஏன் எப்பொழுதும் தொல் காப்பியத் திணைக்கோட்பாட்டிலிருந்தே சங்க இலக்கியத் திணைமரபு விளக்கம்பெறுகின்றது? என்ற இயல்பான கேள்வி இங்கு எழும்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் பற்றிக் குறிப்பிடும்போது, 'இந்நூல் தொல்தமிழர்களின் வாழ்வியலை எடுத்துக் கூறுகின்றது' என்ற பொதுக் கருத்து வெகுமக்கள் வெளியில் கூறப்படுவதுண்டு. உண்மையில் தொல்காப்பியர் அவர் காலத்து வாய் மொழிப் பாடல்களைத் தளமாகக்கொண்டு அவற்றின் வகைமாதிரிகளைக் கருத்தில்கொண்டு வாழ்வியல்சார் கருத்தியலோடு அவற்றைத் தொடர்புபடுத்தி வரையறை களையும் சுட்டி, ஒழுங்குநிலைப்படுத்திக் கோட் பாடாகத் தந்துள்ளார். தொல்காப்பியரைப் பொறுத்த வரையில் திணைக்கோட்பாடு உருவாக்கம் என்பது குழுச் சமூகத்தின் திணைசார் வாழ்வியலான வாய்மொழிப் பதிவுகளை இலக்கணவிதிகளுக்கு உட்படுத்தித் திட்ட ஒழுங்கமைவுக்குள் கொண்டுவந்து பதிவுசெய்வதற்கான கருவியாக ஒரு கோட்பாட்டினை உருவாக்குதல் என்பதாகும். தொல்காப்பியம் சங்க இலக்கியத்தைப் பிரதிபலிக்கிறது; விதி மீறல்கள் அல்லது சமகாலப் படைப்பாக்கத்திற்கு ஒவ்வாத அல்லது ஏற்கத்தகுந்த புள்ளிகளைப் புறநடையாக விரிவாக்கம் செய்கிறது; தொல்காப்பியப் பொருளதிகார எடுத்துரைப்புகளில் சான்றிலக்கியங்களாக/ மேற்கோள் விளக்கத்திற்காக உரையாசிரியர்கள் சங்க இலக்கியங்களை எடுத்துக் காட்டியது இன்ன பிற காரணங்கள் திணை மரபின் 'தலைவாசலாகத்' தொல்காப்பியத்தை இனங்காட்டு கின்றன என்ற விளக்கத்தோடு திணைக்கோட்பாடு பற்றிக் காண்போம்.

திணைஇலக்கியம் படைக்கும்போது எத்தகைய முறையியலைக் கையாளவேண்டும் எது ஏற்றுக்கொள்ளப் படும், எது மாறிவந்தாலும் தவறில்லை என்பதை யெல்லாம் திணைக்கோட்பாட்டில் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார்.

1. திணை என்பது முதற்பொருள் என்ற நிலம், பொழுதுகள்; கருப்பொருள்கள், உரிப் பொருள்கள் இணைந்த தன்மையையே குறிக்கிறது (தொல். அகத்.இளம்.3); இதனைத் தன் காலத்துத் திணைஇலக்கியங்களைக் கருத்தில் கொண்டு தொல்காப்பியர் கூறி யுள்ளார். 'பாடலுட் பயின்று' வந்துள்ள முதல் கரு உரிப்பொருள்களை ஆராய்ந்து பார்த்தால் பாடும்போது இவை மூன்றும் ஒன்று மற்றதைவிடச் சிறந்து அமையும் என்பது அவர் கருத்தாக உள்ளது.

2. ஒரு உணர்வு பற்றிக் குறிப்பிடப்படும் இடத்தில்/பாடலில் வேறொரு உணர்வுக் குரிய கருப்பொருள்களும், பெரும்பொழுது, சிறு பொழுதுகளும் வரலாம் (தொல்.அகத். இளம்.15). இவ்வாறு மாறி வரும் கருப் பொருள், பெரும்பொழுது, சிறுபொழுதுகள் எந்த உணர்வைப் பாடல் சுட்டுகிறதோ அந்தத் திணைக்குரியதாக அவற்றைக் கொள்ள வேண்டும் (தொல்.அகத்.இளம்.21).

3. உரிப்பொருள் மாறி வராது (தொல்.அகத். இளம்.15). அதாவது ஒரு நிலத்திற்கு உரிய உரிப்பொருள் மற்றொரு நிலத்தோடு சேராது. அதாவது குறிஞ்சி என்ற குறியீட்டால் குறிப்பிடப்படும் புணர்தல் நெய்தல் நில வருணனையை ஏற்று வந்தாலும் அதனைக் குறிஞ்சியாக, புணர்தலாகத்தான் கொள்ள வேண்டும்.

4. நிலம் முற்றிலும் மயங்காது (தொல்.அகத். இளம்.14). இந்த இடம் தொல்காப்பியத் திணைக்கோட்பாட்டில் முக்கியமான இடம். ஏனென்றால், நிலம் என்பது மலை, காடு, கடல் போன்று ஒரு இடத்தை அதாவது நிலவியலின் ஒரு பகுதியைக் குறிக்கும் சொல்லாகத் தொல்காப்பியர் இங்கு இச்சொல்லைக் கையாண்டுள்ளார்.

5. திணையை உணர்ந்துகொள்வதற்கு உள்ளுறை உவமம், ஏனை உவமம் ஆகியவை துணை செய்யும் (தொல்.அகத்.இளம்.49).

6. அக இலக்கியங்கள் நாடக வழக்கும் உலகியல் வழக்கும் இணைந்த புலநெறி வழக்காகப் பாடப்படவேண்டும்; பாடுபொருள் கட்ட மைப்பில் பின்பற்றவேண்டிய தலையாய விதியாகத் தொல்காப்பியர் இதனைக் குறிப்பிடுகிறார் (தொல்.அகத்.இளம்.56).

மேற்குறிப்பிட்டவற்றுள் மூன்றாம் கருத்தினை அடிப்படையாக வைத்துத் திணைக்கோட்பாடு பற்றிக் கூறியவர்கள் ஒரு வகை ஒழுக்கம் ஒரே நிலத்தில் தான் நிகழும் என்பது ஏற்றுக்கொள்ள இயலாதது. இது நடைமுறைக்கு, உலகியலுக்கு மாறானது என்ற கருத்துக்களை முன்வைப்பதுண்டு. ஆனால் தொல் காப்பியர் குறிஞ்சி என்ற குறியீட்டின் மூலம் புணர்தலையும், முல்லை என்ற குறியீட்டின் மூலம் ஆற்றி இருத்தலையும், பாலை என்ற குறியீட்டின் மூலம் பிரிதலையும், நெய்தல் என்ற குறியீட்டின் மூலம் இரங்கலையும் குறிப்பிடுகின்றாரே தவிர ஒழுக்கங் களுக்கு நில உரிமையை அவர் கூறவில்லை[1].

•••

திணை: பண்பு அல்ல - தொகுப்புச் சொல்

திணைக்கோட்பாட்டு உருவாக்கத்தின் அடிப் படையைப் பற்றிப் பேசும்போது தொல்காப்பிய நூற்பாக்களுக்கு இளம்பூரணர் அளித்துள்ள உரையை எடுத்துக்காட்டி, திணை என்ற சொல் பண்பைக் கோடிட்டுக் காட்டுவதாக நண்பர் கூறுகின்றார். மேலும் தெய்வத்தையும் இளம்பூரணர் பண்பு என்று முடிவு செய்ததாக இவர் முடிவுசெய்கிறார். தெளிவு கருதி அப்பகுதி இங்குத் தரப்படுகின்றது.

> "'...அப்பெயரெச்சம் பண்பு என்னும் பெயர் கொண்டு ஐந்திணை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாகி நின்றது என உரைப்ப' என்று விளக்கம் தந்து, 'அஃது உரையன்று' என்று மறுப்பவர்களின் கூற்றையும் தந்து முடிவில் 'இவ்வுரை இரண்டினும் ஏற்பது அறிந்துகொள்க' என்று வாசகர்களிடம் முடிவை விடுகின்றார். இளம்பூரணரின் இந்த விளக்கம் திணை பற்றி அவருக்கு இருந்த பொருண்மை முடிவைக் காட்டுகின்றது. அதாவது திணை என்பது 'பண்பை' மையப்படுத்துகின்றது. திணைக்கான பொருளாகப் 'பண்பு' என்பதைக் கொண்டார் என்பதைப் பின்வரும் அவரது தொடராலும் உறுதிப்படுத்தலாம். 'மாயோன் மேய...' என்ற சூத்திரத்தில், 'இது நிறுத்தமுறையானே நிலத்தால் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று' என்று தொகை விளக்கம் தருகின்றார். 'நிலத்தால் திணையாமாறு' என்னும் கூற்றை இங்குக் கவனிக்க வேண்டும். திணையை நிலம் என்று இளம்பூரணர் கருதியிருந்தால் இப்படி எழுதியிருக்கமாட்டார்; நிலத்தின் பண்பையே இங்கு அவர் குறிப்பிடு கின்றார். அதே நேரத்தில் நிலப் பண்போடு தொடர்புடைய தெய்வத்தையும் பண்பாகவே முடிவுசெய்கிறார். முதற்பொருளில் ஒன்றான காலத்தைப் பற்றிக் குறிப்பிடும் சூத்திரத்தில், 'காலத்தால் திணையாமாறு' என்று எழுதி யதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்." (2016:17)

திணை என்ற சொல் குறித்த தெளிவை நண்பர் இன்னும் பெறவில்லை என்பதையே மேற்குறித்த பகுதி எடுத்துக்காட்டுகின்றது. மேலும் உரையாசிரியக் கருத்துகளை எடுத்தாளும்போது முழுமையான பயில்வு அவசியம் என்பதையும் இங்குச் சுட்டவேண்டியுள்ளது. தொல்காப்பியத்தின் இரண்டாவது நூற்பாவிற்கான உரையை எடுத்துக்காட்டித் திணை என்பது பண்பைக் குறிக்கின்றது என்னும் இவர் இந்த நூற்பாவின் இறுதி உரைப் பகுதியைச் சரியாகக் கவனிக்கவில்லையோ என்று தோன்றுகிறது.

> "...எற்றுக்கு? இந்நூலகத்து அகமும் புறமும் ஆகிய உரிப்பொருள் கூறுகின்றாராதலான் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என அமையுமேயெனின், புறப்பொருட்கண் நிரை கோடலை வெட்சியெனக் குறியிட்டாளு மாகலான் ஈண்டு இப்பொருளையும் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என ஆளும் என்க. இதனாற் பயன் என்னயெனின், உரிப்பொருளே திணையென உணர்த்துவாராயின் முதற் பொருளும் கருப்பொருளும் திணையாதல் தோன்றாதாம். அவையெல்லாம் அடக்குதற் பொருட்டு முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்றார் என்பது." (தொல். அகத்.இளம்.2, 1928:5)

அதாவது இந்த நூற்பாவில் புணர்தல் பிரிதல் என்றவாறு ஒழுக்கங்களாகக் கூறாமல் நிலங்களாகத் தொல்காப்பியர் ஏன் குறிப்பிட்டார் என்று வினா எழுப்பி அதற்கு புறத்திணையைச் சான்றாகக் காட்டுகிறார் இளம்பூரணர். பசுக்கூட்டங்களைக் கவர்ந்துவரும் போரின் தொடக்க நிகழ்வை வெட்சி என்ற குறியீட்டால் குறிப்பிடுவதைப் போலப் புணர்தல் முதலான ஒழுக்க நிலைகளைக் குறிஞ்சி, முல்லை என்று குறியீடாகத் தொல்காப்பியர் குறிப்பதாக இளம்பூரணர் கூறுகிறார். புணர்தல், பிரிதல் முதலான உரிப்பொருள்களை மட்டும் குறிப்பிட்டால் அது மட்டுமே திணையென்ற அர்த்தப் பாடு அதற்குள் அடங்கிவிடும்; திணை என்ற சொல் முதல், கரு, உரிப்பொருள்கள் இணைந்த தன்மையைக் குறிக்காது என்பதாலும் இவ்வாறு குறியீட்டால் சுட்டுவதற்குக் காரணம் கூறுகிறார் இளம்பூரணர்.

திணை என்ற சொல் பண்பைக் குறிக்கும் என்ற கருத்தை நிறுவுவதற்கு 'நிலத்தால் திணையாமாறு' (தொல்.அகத்.இளம்.5), 'காலத்தால் திணையாமாறு' (தொல்.அகத்.இளம்.6) என்று கூறும் பகுதிகளை

எடுத்துக்காட்டுகிறார். 'திணையை நிலம் என்று இளம்பூரணர் கருதியிருந்தால் இப்படி எழுதியிருக்க மாட்டார்' என்றும் நண்பர் கருத்துரைக்கின்றார். ஒழுக்க நிலைகளின் நிகழிடங்களை அல்லது நில இயல்பையே (காடு, மலை...) ஐந்தாம் நூற்பாவின் உரையில் இளம்பூரணர் விளக்குகிறார். அடுத்து ஒவ்வொரு ஒழுக்கவகைக்குமான காலத்தை/ பொழுதுகளைச் சிறப்பு நோக்கித் தொல்காப்பியர் குறிப்பிட்டவற்றைக் 'காலத்தால் திணையாமாறு' என்று இளம்பூரணர் உணர்த்துகிறார். மேலும் திணை மயக்கம் பற்றிக் குறிப்பிடும் நூற்பாவின் உரையில் (தொல். அகத். இளம்.14) 'மேல் அதிகரிக்கப்பட்ட நிலத்தினானும் காலத்தினானும் ஆகிய திணை மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று' என்று கூறுவது, திணை என்பது நிலம், பொழுதுகள், கருப்பொருள்கள், உரிப்பொருள்கள் இணைந்த ஒரு தொகுதியையே குறிக்கும் என்பதையே காட்டுகின்றது. வேறு முறையில் சொல்வதானால் நிலம், பொழுதுகள், கருப்பொருள்கள், உரிப்பொருள்கள் ஆகியவை திணையை நிர்ணயிக்கும் காரணிகள்.

திணை என்ற சொல்லுக்கான வரையறையைத் தொல்காப்பியர் தெளிவாகக் குறிப்பிடவில்லை; அகத்திணைகள் இவை என்று குறிப்பிடும் இடத்திலும் (தொல்.பொருள்.அகத்.1), செய்யுளியலில் செய்யுள் உறுப்புகளில் தொகுத்துச்சொல்லப்பட்ட திணையைத் தனியே விளக்கும்போதும் (தொல்.பொருள்.செய்.316) ஏழு திணைகளை மட்டுமே அவர் குறிப்பிடுகின்றார். இந்தக் காரணத்தினால்தான் திணைக்கோட்பாட்டைப் புரிந்துகொள்வதில் சிக்கல்கள் எழுகின்றன. திணை என்ற சொல் நிலத்தைக் குறிக்கின்றதா? பண்பைக் குறிக்கின்றதா? என்பன போன்ற விவாதங்களும் எழுகின்றன. திணை என்ற சொல் சங்க இலக்கியத்தில் பதினைந்திற்கும் மேற்பட்ட இடங்களில் பயின்று வந்துள்ளது; தொன்மையான குடி/குழுக்களையும் குடியிருப்பையும் குறிப்பதாக இச்சொல் உள்ளது. குறிஞ்சி, முல்லை முதலான திணைவகைப் பெயர்களும் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் பயின்று வந்துள்ளன. இவை மலர்களையும் இசை/பண்ணையும் பெரும்பான்மையான இடங்களில் குறிக்கின்றன. சில இடங்களில் நிலத்தைக் குறிப்பதாகவும் உள்ளது.

தொல்காப்பியர் முதல் நூற்பாவில் அகப்பொருள் என்ன என்பது பற்றிக் குறிப்பிடுபோது கைக்கிளை முதலாகப் பெருந்திணை முடிவாகக் குறிப்பிடும் ஏழு ஒழுக்க முறைகளைத் திணை என்றே குறிப்பிடுகிறார் (தொல்.அகத்.இளம்.1). அடுத்த நூற்பாவில் பாலைத் திணை பற்றிக் குறிப்பிடும்போது கடலால் சூழப்பட்ட இவ்வுலகம் நிலப்பண்பு (முல்லை, குறிஞ்சி, மருதம் நெய்தல்) அடிப்படையில் நான்காகப் பகுக்கப்படும் என்கின்றார்; அதாவது உலகம் நான்குவகையான அமைப்பு முறையைக் கொண்டுள்ளது என்கிறார். இந்த இடத்தில் திணையின் வகைமைப் பெயர்களைத் தொல்காப்பியர் நேரடியாக எடுத்தாளவில்லை. எனவே திணை என்ற சொல் மக்கள் குழுக்களைக் குறிப்பதோடு சேர்த்து அவர்களின் வேறுபட்ட ஒழுக்கநிலைகளையும் அவற்றின் நிகழிடங்களையும் குறிப்பிடும் குறிப்பானாகப் பொதுச்சொல்லாகவே தொல்காப்பியத்தில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

காலம் மாறினாலும் உரிப்பொருள் மாறாது; காலம் -உரிப்பொருள்: சிறப்பு கருதிய தொடர்பு

> 'திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே, நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப... (தொல்.அகத்.14) என்று திணை மயக்கம் பற்றித் தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ளார். திணை மயக்குறுதல் - அதாவது, ஒரு நிலத்திற்குச் சொல்லப்பட்ட பண்பு (கரு, உரி) மற்ற நிலத்திலும் வரலாம்; ஆனால் நிலம் மட்டும் மாறாது என்பது இதன் கருத்து. இதன் பின்னணியில் காலமும் மாறும் என்பதையும் பெற முடிகிறது. காலம் மாறாது என்று தொல்காப்பியர் குறிப்பிடவும் இல்லை. காலம் மாறினால் (மயங்கி மற்ற நிலத்திற்கு வந்தால்) உரிப்பொருளும் அனைத்து நிலத்திற்கும் மாறி வரும். ஏனென்றால் காலத்தையும் உரிப்பொருளையும் இணைத்தே தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ... மற்ற உரிப்பொருள்களும் நிலத்தை மையப்படுத்தாமல் காலத்தை மையப்படுத்தியே செயல்படுகின்றது.' *(2016:18, 19)*

திணை என்ற சொல்லைப் பண்பு என்று பொருள் கொண்டு - கரு, உரிப்பொருள்களை ஒரு நிலத்தின் பண்பாகக் கொண்டு ஒரு நிலத்திற்கு சொல்லப்பட்ட கரு, உரி மற்ற நிலத்திலும் வரலாம் ஆனால் நிலம் மட்டும் மாறாது என்பதாக இவர் பொருள்கொள்கிறார். இவர் கரு, உரிப்பொருள்களை ஒரு நிலத்தின் பண்பை நிர்ணயிக்கும் காரணிகளாகக் கூறுவதை ஏற்கலாம். ஆனால் உரிப்பொருள் மயங்காது என்று தொல்காப்பியர் கூற உரிப்பொருளும் மயங்கும் என்கிறார் நண்பர். 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' என்ற தொல்காப்பியக் கருத்துக்கு எதிராக இங்கு இவர் பொருள்கொண்டு திணைக்கோட்பாட்டையே மாற்றி அமைக்கிறார்.

தொல்காப்பியர் கூறியுள்ள 'உரிப்பொருள் அல்லன' என்பது 'எய்தாதது எய்துவித்தல்' என்ற விதிப்படி முதற்பொருளையும் கருப்பொருளையும் குறிக்கிறது. முதற்பொருளில் நிலம் மயங்காது என்று அவரே குறிப்பிடுவதால், பொழுதுகள் மயங்கும் என்பதும் கருப்பொருள்கள் மயங்கும் என்பதும் பெறப்படுகின்றது. திணைகளுக்குக் காலம் குறிப்பிடும்போது தொல் காப்பியர், 'காரு மாலையு முல்லை' (தொல்.அகத். இளம்.6), 'குறிஞ்சி, கூதிர் யாம மென்மனார் புலவர்'(தொல்.அகத்.இளம்.7), 'வைகறை விடியன்

மருதம்' (தொல். அகத்.இளம்.9), 'எற்பாடு, நெய்தலான் மெய்பெறத் தோன்றும்'(தொல்.அகத்.இளம்.10), 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு/ முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே' (தொல். அகத்.இளம்.11) என்று திணை வகைப் பெயர்களைப் பொழுதுகளுடன் தொடர்புபடுத்திக் குறிப்பிட்டுள்ளார். பொழுதுகள் பருவ மாற்றத்தால் ஏற்படுவது. பருவ மாற்றம் நிலங்களையும் நிலத்திலுள்ள மா, மரம், புள் முதலானவற்றைப் பாதிக்கும். இந்தப் பருவமாற்றம் மனித உணர்வுநிலைகளையும் பாதிக்கும். ஆனால் ஒழுக்க நிலைகளை/ உரிப்பொருளைக் குறிக்கும் குறியீடாகத்தான் இங்கும் திணைவகைப் பெயர்களைத் தொல்காப்பியர் கையாண்டுள்ளார். இந்தக் காரணத்தினால் தான் தொல்காப்பியர் பொழுதுகளையும் திணை வகைப் பெயர்களைக் குறியீடாகப் பயன்படுத்தி உரிப்பொருளையும் தொடர்புபடுத்திக்கூறியுள்ளார்.

சங்கத் தொகை இலக்கியங்களில் ஒரு நிலத்திற்குரிய பொழுது/காலம் மற்ற நிலங்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்தகைய இடங்களில் காலத்திற்கு ஏற்றார்போல் உரிப்பொருள் மாற்றம் பெறவில்லை. சான்றாகக் குறுந்தொகையில் பதின்மூன்று பாடல்களில்2 முல்லை ஒழுக்கத்திற்குரிய கார் காலம் இடம்பெற்று உள்ளது. இப்பதின்மூன்று பாடல்களில் பதினொரு பாடலில் முல்லை நில வருணனை இடம்பெற்றுள்ளது. ஆனால் குறுந்.197ஆம் பாடலிலும் கார்கால மழை குறிக்கப்பட்டுள்ளது; அதனோடு குறிஞ்சிக்குரிய கூதிர்பருவமும் இடம்பெற்றுள்ளது[3]. இப்பாடலுக்கு நெய்தல் என்று திணை குறிக்கப்பட்டுள்ளது. முல்லை, குறிஞ்சித் திணைகளுக்குரிய பொழுதுகள் இடம் பெற்றிருந்தாலும் பாடலின் உரிப்பொருள் இரங்கலுக்கு உரியதாக உள்ளது. இங்கு பொழுதுகள் மயங்கி வந்திருந்தும் உரிப்பொருள் எந்த மாற்றத்தையும் அடையவில்லை.

ஒரு நிலத்திற்குரிய பொழுது மற்ற நில வருணனைக்கும் பயன்படுத்தப்படலாம். இவ்வாறு சங்க இலக்கியத்திற்குள் பல பாடல்கள் உள்ளன (சான்று: அகம்.264:10 முல்லை - கூதிர், குறுந்.47:4 குறிஞ்சி - வேனில், ஐங்.183:4 நெய்தல் - மாலை); ஒவ்வொரு ஒழுக்க முறையும் சிறப்புகருதி ஒவ்வொரு திணைவகைப் பெயரோடு தொடர்புபடுத்தப்பட்டிருப்பதைப் போலவே ஒவ்வொரு பொழுதுகளும் சிறப்புகருதி ஒவ்வொரு ஒழுக்க நிலைகளோடு தொடர்புபடுத்தப் பட்டுள்ளன. சான்றாக, கார்கால மாலை துணையைப் பிரிந்தவர்களின் பிரிவுத் துன்பத்தை மிகுதிப்படுத்தும். அத்தகைய சூழலிலும் தலைவி தலைவனின் பிரிவை எண்ணி மனம் வேறுபடாது ஆற்றியிருப்பது சிறப்பு. இதுதான் முல்லை உரிப்பொருள். இதனால் கூதிர், முன்பனி - யாமப் பொழுதுகளில் புணர்தல்; பின்பனி, வேனில் - நண்பகல் பொழுதுகளில் பிரிவு; கார்-மாலைப் பொழுதுகளில் ஆற்றி இருத்தல்; அறுவகைப் பெரும் பொழுது - வைகறை, விடியல் பொழுதுகளில் ஊடல்; அறுவகைப்பெரும்பொழுது- எற்படு பொழுதுகளில் இரங்கல் உணர்வுகள் மட்டுமே தோன்றும் என்பது பொருளல்ல. உண்மையில் நிலங்களுக்குச் சொன்ன வரையறைப்படியே செய்யுள் படைத்தால் அது ஒரு வாய்ப்பாடு போலத்தான் அமையும்; அதில் இலக்கிய இன்பம் இருக்காது. ஒருவர் மற்றொருவருடன் இயல்பாகப் பேசுவதுபோல அமைந்தவையே நமது திணை இலக்கியங்கள். ஒரு தலைவி தனது பிரிவுத் துயரை எடுத்துக்கூறுகிறாள் என்றால் வேனில் காலக் கொடுமையை எடுத்துக்கூறுவதாகவே எல்லா கவிஞர்களும் பாடல் படைக்கமுடியாது; படைத்தாலும் அது சுவைக்காது. எனவே உரிப்பொருள்/ ஒழுக்க நிலைகள் நிலத்தையோ காலத்தையோ மையப்படுத்தவில்லை. அவை மனித உணர்வுகளுக்கு ஏற்ப மாறுபடும்.



திணை உணர்வும் பொருளும்
வெ.பிரகாஷ்
வெளியீடு: பரிசல்
96, ஜே.ப்ளாக், நல்வரவு தெரு, எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம், சென்னை - 600 106
ரூ.90.00

சிறப்புகருதியே அவை ஒவ்வொரு ஒழுக்கநிலைகளோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. பாடலில் எந்த உணர்வு கூறப்பட்டுள்ளதோ அந்த உணர்வினைக் குறிக்கின்ற குறிப்பானாகவே குறிஞ்சி முதலான திணைவகைப் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன; குறிக்கப்பட வேண்டும்.

புறக்கணிக்கப்பட்ட உரையாசிரியர்கள்

திணை இலக்கியப் பாடல்கள் பல பன்முகத்தன்மை கொண்டவையாக அமைகின்றன. இதற்குக்காரணம் அதன் கோட்பாட்டு வடிவம். ஒருவகையான ஒழுக்க முறையைப் பற்றிப் படைக்கும்போது வேறு நிலத்திற்குரிய பொழுதுகள், கருப்பொருள்கள் அதில் இடம் பெறலாம் என்பது கோட்பாடு என்ற நிலையையும் தாண்டி படைப்பாளனின் படைப்பு மனநிலையைப் புரிந்துகொண்டதையும் சுட்டுகிறது. ஒவ்வொரு

படைப்பாளனும் ஒவ்வொரு முறைமையைப் பயன் படுத்துவான். உவமை, உத்தி, மொழிநிலைகளில் அது அவனின் தனித்தன்மையைக் காட்டிநிற்கும். ஒருவேளை கவிஞன் சொல்லவந்த பொருளை நேரிடையாக எடுத்துக் கூறியிருந்தால் அது ஒரு சாதாரண பாடலாகவே அமைந்துவிடும். உணர்வை வெளிப் படுத்தக் கைக்கொள்ளப்பட்ட மாறுபட்ட இயற்கைப் பின்னணியே பாடலின் உணர்வைத்தாங்கிய உடலாக அமைந்துள்ளது. அந்த உடலை உலகியலுக்கு ஏற்றாற் போலவே படைப்பாளன் படைக்கிறான். சான்றாக, குருந்த மரம் முல்லைக்குரிய கருப்பொருள், யானை குறிஞ்சிக்குரிய கருப்பொருள். வரிமணல் நெய்தல் நிலத்திற்கு உரிது. இவை இலக்கியக்கோட்பாட்டின்படி ஒரே நிலத்திற்கு உரியது அல்ல; ஆனால் உலகியலில் அவ்வாறுதான் இருக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. எனவேதான் இப்படி முல்லை, குறிஞ்சி, நெய்தல் கருப்பொருளைக் கொண்ட பாடல் அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது (அகம்.304)4 நாடக வழக்கும் உலகியல் வழக்கும் இணைந்த புலனெறி வழக்காகவே படைப்பு அமையவேண்டும் என்கிறது தொல்காப்பியக் கவிதையியல். இதுதான் எதார்த்தமும் கூட. சங்க இலக்கியப் பாடல்களின் இந்தப் பன்முகத் தன்மையை உரையாசிரியர்கள் ஏற்கனவே குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். சான்றாக,

இளம்பூரணர்,

- *அகம்.164 - பிரிதற் பகுதியாகி பாசறைப் புலம்பலெனினும் நிலம்பற்றி முல்லையா யிற்று (தொல். அகத்.இளம்.24).*
- *'மலிதிரை யூர்ந்துதண் மண்கடல் வெளவலின்' என்னும் முல்லைக்கலி (கலி.104) புணர்தற் பொருண்மைத்தாயினும் முல்லைக்குரிய கருப்பொருளான் வருதலின் முல்லையாயிற்று (தொல். அகத்.இளம்.24).*
- *உயர்கரைக் கானியாற் றவிரற ஐங்.361 - இது புணர்தற்பொருளாயினும் கருப்பொருளாற் பாலையாயிற்று (தொல்.அகத்.இளம்.24).*
- *'சிலைவிற் பகழிச் செந்துவ ராடை' (ஐங்.363) என்னும் பாட்டினுள் 'கொலைவி லெயினர் தங்கை' எனப் புணர்தற்பொருண்மை வந்ததா யினும் பாலைக்குரிய மக்கட்பெயர் கூறுதலிற் பாலையாயிற்று (தொல்.அகத்.இளம்.24).*

பேராசிரியர்,

- *அகம்.9 - என்றவழிக் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்றபொருள் தத்தம் மரபிற்றாய் வந்தன பலவும் கண்டுகொள்க (தொல்.செய்.பேரா.392).*
- *அகம்.9 - என்றாற்போலச் செய்யுள் செய்தவன் தானே வகுப்பனவெல்லாங்கோடல்; இது பாலைப் பாட்டினுள் வந்ததாயினும் முல்லை முதலாயவற்றுக்கும் பொதுவாமென்பது. பொதுமையென்பது எல்லா உரிப் பொருட்கும் ஏற்கப் பல்வேறு வகையாற் செய்தல் (தொல். செய்.பேரா.520).*

நச்சினார்க்கினியர்,

- *ஐங்.240, 245, 283 - இவை குறிஞ்சிக்கண் மருதம் நிகழ்ந்தன (தொல்.அகத்.நச்.12).*
- *ஐங்.366 - இது பாலையிற் குறிஞ்சி (தொல். அகத். நச்.12).*
- *ஐங்.369, 370 - பாலைக்கண் மருதம் நிகழ்ந்தன (தொல்.அகத். நச்.12).*
- *'அருந்தவ மற்றியார்' என்னும் பாலைக்கலியும் (கலி.30) அது (பாலைக்கண் மருதம் நிகழ்ந்தன.) (தொல்.அகத். நச்.12).*
- *ஐங். 101 - இது நெய்தலிற் குறிஞ்சி (தொல். அகத். நச்.12).*
- *'புனையிழை நோக்கியும்' என்னும் மருதக் கலியும் அது (இவை மருதத்துக் குறிஞ்சி நிகழ்ந்தன.) (தொல்.அகத். நச்.12).*
- *அகம்.156 - (இவை மருதத்துக் குறிஞ்சி நிகழ்ந்தன.) (தொல்.அகத். நச்.12).*

இவ்வாறு சங்க இலக்கியப்பாடல்கள் நிலத்தால் ஒரு திணையையும் ஒழுக்க முறையால்/உரிப்பொருளால் ஒருதிணையையும் கொண்டுள்ள இத்தன்மையை மூன்று உரையாசிரியர்களும் தங்கள் உரையில் குறிப்பிட்டு உள்ளனர். இந்தத் தன்மையைத் தனது நூலில் எடுத்துக்காட்டிய நண்பர் ஒரு இடத்தில் கூட உரையாசிரியர்களின் இந்த உயிரோட்டமான, துல்லியமான, நிறைவான புரிதலைப் பற்றி எடுத்துக்கூறவில்லை. மாறாக இவற்றைத் தானே கண்டறிந்ததைப் போலவே முன்மொழிந்துள்ளார். இந்தப் போக்கு ஆய்வு உலகில் ஏற்கத் தகுந்ததல்ல.

திணைக்கோட்பாடு - திணை வகுப்புமுறைச் சிக்கல்கள்

எட்டுத்தொகைப் பாடல்களின் திணையமைப்புமுறைச் சிக்கலைப்பற்றிக் குறிப்பிட்டு, 'சங்கக் கவிதைகளில் குறிக்கப்பட்டுள்ள உணர்வுகளின் நிமித்தங்கள் விளங்காத காரணத்தால் திணைப் பகுப்புச் செய்தோர் சிக்கலை ஏற்படுத்தியுள்ளனர். ... இச்சிக்கலைத் தவிர்க்க தொல்காப்பியரின் முதல் - கரு - உரி என்னும் முறையியலை, உரி - கரு - முதல் என்ற வரிசை முறை மாற்றிப் பாடலை அணுகவேண்டும்' (2016:92, 97) என்று காரணத்தையும் அதற்கான தீர்வாக வரிசைமுறை மாற்றத்தையும் முன்வைக்கிறார்.

சங்கப் பாடல்களின் அடிப்படைப் பொருண்மையும் திணைப்பகுப்பும் பல இடங்களில் ஒன்றுபடுவதில்லை; பாடல்களுக்கான திணைப்பகுப்பு பாடலின் அடிப்படைப் பொருண்மையை விளக்குவதாக அமையவில்லை. இந்த நிலை திணையமைப்பைப் பேணாமல் தொகுக்கப்பட்ட தொகை நூல்கள் மட்டுமல்லாமல் திணைப்பாகுபாட்டு முறையியலோடு தொகுக்கப்பட்ட அகநானூற்றிலும் படைப்பு நிலையிலேயே திணை கைக்கொள்ளப்பட்ட ஐங்குறுநூற்றிலும் உள்ளது. தொல்காப்பியர் திணையை வகுப்பதற்கான முறையியலைச் சொல்லவில்லை; சொல்லவேண்டிய அவசியமும் இல்லை - அது அவர் வேலையும் இல்லை. ஒரு இலக்கியத்தை எப்படிப் படித்துச் சுவைக்க வேண்டும் என்று கூறுவது இலக்கண நூலின் கடமையன்று. மாறாக வாசிப்பவருக்குக் கோட்பாட்டுத் தெளிவை உருவாக்கிவிட்டாலே சுவைப்பதற்கான வழியைத் தந்ததாகும். ஆனால், உரையாசிரியர்கள் தங்கள் உரையில் இது பற்றிப் பேசியுள்ளனர். முதல் - கரு - உரி என்ற முறைமையில் திணையைக் குறிக்கலாம் என்று திணைவகுப்பு பற்றி முதலில் குறிப்பிடுபவர் இளம்பூரணர்[5]. இது நண்பரின் கவனத்திற்கு வரவில்லை என்பதாலோ என்னவோ இதனைத் தனது நூலில் எந்த இடத்திலும் அவர் குறிப்பிடவில்லை. பிற்காலப் பொருளிலக்கண நூல்கள் தொல்காப்பியத்தைப் பின்பற்றியதுபோலவே அதன் உரைகளையும் பின்பற்றியுள்ளன. சங்கத் தொகைகளுக்குத் திணை, துறை வகுத்த உரைக்குறிப்பாசிரியர்களும் இளம்பூரணத்தைப் பின்பற்றியுள்ளனர் என்பதும் தெரிகிறது.

தொகை இலக்கியத் திணை வகுப்புமுறையில் உரிப்பொருள் கவனப்படுத்தப்படவில்லை (இருபதாம் நூற்றாண்டுப் பதிப்பாசிரியர்கள் வரை) என்ற முக்கியமான கருத்தியலை விளக்குவதாகக் கட்டுரையாளரின் முனைவர்பட்ட ஆய்வேட்டின் ‘பதிப்பாசிரிய மரபு’ என்ற இயல் அமைந்துள்ளது. நண்பர் தனது முதுமுனைவர் பட்ட ஆய்வினை நிகழ்த்துகின்ற பாண்டிச்சேரியில் தாகூர் கலைக்கல்லூரியும் பிரெஞ்சு ஆய்வு நிறுவன இந்தியவியல் துறையும் இணைந்து ‘பல்துறைநோக்கில் தொல்காப்பியம்’ என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கு ஒன்றை நிகழ்த்தியது. 2013ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இக்கருத்தரங்கிலும் திணைக் கோட்பாடு - திணை வகுப்புமுறையில் உள்ள சிக்கல்கள் பற்றி, ‘தொல்காப்பியத் திணைக்கோட்பாடு - மீளாய்வு (வாசிப்பு வெளிப்பாடுகளை முன்வைத்து)’ என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை (2013:78-82) சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. என்ன காரணத்தாலோ இவை இரண்டும் ஆய்வாளரின் கவனத்தைப் பெறவில்லை.

இதுபோலவே, உங்கள் நூலகத்தில் கடைசி கட்டுரை எழுதும் நண்பரும் ஜூன் மாத இதழில் ‘ஆனந்தக் குற்றமும் சங்கப் பாடல் தொகுப்பு முறையும்’ என்ற கட்டுரையை எழுதியுள்ளார். அதில், “பாடலின் பொருளே’ தொகுப்பின் முதன்மைக் கூறாகக் கொள்ளப்பட்டுள்ளமை வெளிப்படுகின்றது. இதுநாள் வரையில் சங்கப்பாடல் தொகுப்பு வரலாற்றை எழுதியவர்கள் இந்தச் செய்தியைக் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.’ (உங்கள் நூலகம், ஜூன் 2016:82) என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ்த்தொகுப்பு மரபு: சங்க இலக்கியம் - எட்டுத்தொகை என்ற பெயரில் சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ் இலக்கியத் துறையில் கட்டுரையாளரால், நிகழ்த்தப்பட்ட ஆய்வின்[6] ‘தொகுப்பு மரபு’ என்னும் முதல் இயலில் பாடலின் பொருளும் தொகுப்பாசிரியர்களால் கவனத்தில் கொள்ளப்பட்டது என்பது விளக்கப் பட்டுள்ளது என்பதை ஆய்வாளருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்படி, ஆய்வுலகப் போக்குகள் பற்றிய முழுமையான பார்வை இல்லாமல் தான்தோன்றித்தனமாகக் கருத்துகளை அள்ளித்தெளிக்கும்போக்கு மிகுந்த வருத்தத்தை அளிப்பதாக உள்ளது.

அடிக்குறிப்புகள்

1. இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவு/ மொழுக்கமு மென்றிவை யிழுக்குநெறி யின்றி/ யிதுவா கித்திணைக் குரிப்பொ ளென்னாது/ பொதுவாய் நிற்றல் பொருள்வகை யென்ப. நிறுத்தமுறையானே பொருள்வகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று. இன்பமுந் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமுமென்று சொல்லப்பட்டவை வழுவுநெறி யின்றி இத்திணைக்குரிய பொருள் இப் பொருளென்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருளே பொருள்வகையாம் என்றவாறு (தொல்.இளம்.செய்.509, 1935:453).

2. (குறுந்.21, 65, 66, 126, 148, 162, 186, 188, 197, 233, 251, 282, 382)

3. யாது செய்வாம்கொல் தோழி நோதக/ நீர்எதிர் கருவிய கார்எதிர் கிளைமழை / ஊதையம் குளிரொடு பேதுற்று மயங்கிய/ கூதிர் உருவின் கூற்றம் / காதலர்ப் பிரிந்து எற்குறித்து வருமே (குறுந்.197, கச்சிப்பேட்டு நன்னாகையார்).

4. இருவிசும்பு இவர்ந்த கருவி மாமழை/ நீர்செறி நுங்கின் கண்சிதர்ந் தவைபோல்/ சூர்பனிப் பன்ன தண்வரல் ஆலியொடு/ பரூஉப்பெயல் அழிதுளி தலைஇ, வான்நவின்று, குரூஉத்துளி பொழிந்த பெரும்புலர் வைகறை, செய்துவிட்டன்ன செந்நில மருங்கில்/ செறித்து நிறுத்தன்ன தெள்அறல் பருகி/ சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை/ வலம்திரி மருப்பின் அண்ணல் இரலையொடு/ அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதிய/ சுரும்பு இமிர்பு ஊத பிடவுத் தளைஅவிழ/ அரும்பெரி மஞ்ஞை ஆல வரிமணல்/ மணமிடைப் பவளம் போல அணிமிகக்/ காயாஞ் செம்மல் தாஅய் பலஉடன்/ ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப/ புலன்அணி கொண்ட கார்எதிர் காலை/ ஏந்துகோட்டு யானை வேந்தன் பாசறை/ வினையொடு வேறுபுலத்து அல்கி நன்றும்/ அறவர் அல்லர்நம் அருளா தோர்என/ நம்நோய் தன்வயின்

அறியாள்/ எம்நொந்து புலக்கும்கொல் மாஅயோளே (அகம்.304, இடைக்காடனார்)

5. முறைமையாற் சிறத்தலாவது, யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணையாகுமென்பதூஉம், முதற்பொரு ளொழிய ஏனையிரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகுமென்பதூஉம், முதற்பொரு ளொழிய ஏனை யிரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகு மென்பதூஉம், உரிப்பொருள்தானே வரின் அதனால் திணையாகு மென்பதூஉமாம் (தொல்.அகத்.இளம்.3, 1928:5).

6. சங்க இலக்கியங்களை, குறைந்தபட்சம் எட்டுத்தொகையை மட்டுமாவது முழுமையாக வாசிக்கும்படியாக எனது ஆய்வுப்பரப்பு அமையவேண்டும் என்று கேட்டபோது, எட்டுத்தொகையின் பாடல் தவிர்ந்த பிற கூறுகளை ஆய்வுக்களமாகத் தெரிந்தெடுத்து வழங்கியவர் பேராசிரியர் வீ. அரசு. ஒவ்வொரு மாதமும் தனது முனைவர்பட்ட ஆய்வாளர்களோடு கலந்து உரையாடு வதை வழமையாகக் கொண்டிருந்த பேராசிரியர், செந்நெறிப் பின்னணியைக் கொண்ட சங்க இலக்கியத் திற்குத் திணை, துறை உள்ளிட்ட கூறுகள் அவசிமா என்பது பற்றி நிகழ்த்திய உரையாடல்கள் இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

துணை நூல்கள்:

- *1928*, தொல்காப்பியம், இளம்பூரணம், பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்), வ.உ. சிதம்பரம் பிள்ளை (பதி.), வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி.
- *1935*, தொல்காப்பியம், இளம்பூரணம், பொருளதிகாரம் (மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல்), வ.உ. சிதம்பரம் பிள்ளை (பதி.), வாவிள்ள இராமஸ்வாமிசாஸ்த்ருலு அண்ட ஸன்ஸ், சென்னை.
- *1970*, தொல்காப்பியம், பொருளதிகாரம் (அகத் திணையியல், புறத்திணையியல்), நச்சினார்க்கினியர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- *1996*, தொல்காப்பிய மூலம், பாடவேறுபாடுகள்: ஆழ்நோக்காய்வு, கே.எம்.வேங்கடராமையா, ச.வே.சுப்பிர மணியன், ப.வெ. நாகராசன் (பர்.) பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம், திருவனந்தபுரம்.
- *2007*, குறுந்தொகை மூலமும் உரையும், வி. நாகராசன் (உர்.), அ.மா. பரிமணம், கு.வெ.பாலசுப்பிரமணியன் (பர்.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- *2007*, அகநானூறு மூலமும் உரையும், இரா. செயபால் (உர்.), அ.மா. பரிமணம், கு.வெ.பாலசுப்பிரமணியன் (பர்.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- *2007*, தொல்காப்பியமும் கவிதையும், கா. சிவத்தம்பி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
- *2013*, பல்துறைநோக்கில் தொல்காப்பியம், தொகுதி - 2, சி.பத்மாசனி, தி.செல்வம், ஆ.மணி (பர்.) தமிழன்னை ஆய்வகம், புதுச்சேரி.
- *2016*, திணை உணர்வும் பொருளும், வெ. பிரகாஷ் பரிசல் புத்தக நிலையம், சென்னை.
- *2016*, உங்கள் நூலகம், மலர் *8*, இதழ் *3*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- 1993, A Word Index for Cankam Literature, Thomas Lehmann, Thomas Malten, Institute of Asian Studies, Chennai. ●

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

நியூ செஞ்சுரியின்
உங்கள் நூலகம்
மாத இதழுக்கு
வருடாந்திர சந்தா
கணக்கு முடிந்தவர்களுக்கு
தொடர்ந்து இதழை
அனுப்ப இயலாது.
ஆகவே தங்களது
ஆண்டுச் சந்தாவை
புதுப்பித்துக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆண்டுச் சந்தா ரூ. 240/-

நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் இதழுக்கு
சந்தா தொகையை மணியார்டர் மற்றும் DD அனுப்ப விரும்புவோர்
New Century Reader's Sangam
என்ற பெயரில் அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
பொறுப்பாசிரியர்
உங்கள் நூலகம்
41 - B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.

நண்பகல் அந்தி

முனைவர் இரா. வெங்கடேசன்

அகநானூற்றுத் தொகுப்பிலுள்ள ஒரு பாடலை (71) இயற்றிய புலவர் பெயர் 'அந்தியிளங்கீரனார்' என அமைந்துள்ளது. இளங்கீரனார் என்பது அவருடைய இயற்பெயராக இருந்திருக்கக்கூடும். முன்னொட்டாக 'அந்தி' எனும் சொல் இடப்பெற்றிருக்க வேண்டும். இந்த அந்தி எனும் சொல், இன்றைய (கிராமத்து) பேச்சு வழக்கில் 'அந்தி வேளை', 'அந்திப் பொழுது', 'அந்தி நேரம்' என 'வேளை', 'பொழுது', 'நேரம்' என்பனவற்றைச்



சுட்டி வழங்குகின்றன. ‘அந்திமழை அழுதாலும் விடாது’ என்ற சொல் வழக்கும் இங்கு உண்டு.

அந்தி வரும் நேரம்...; அந்தி மழை பொழிகிறது...; அந்தி நேரத் தென்றல் காற்று...; அந்தி மயங்குற நேரத்துல...; அந்தியில வானம்... என்று ‘அந்தி’ எனும் சொல்லை முதலாகக் கொண்ட பல தமிழ்த் திரைப்படப் பாடல்கள் உண்டு. இந்தத் திரைப்படப் பாடல்களிலும் மேற்சுட்டிய கிராமத்துப் பேச்சு வழக்கிலும் வழங்கு கின்ற ‘அந்தி’ எனும் சொல் ‘மாலை’ப் பொழுதைக் குறிப்பதாக வழங்குவது தெரிகின்றது.

புறநானூற்றுப் பாடலொன்றில் வரும் ‘காலை அந்தியும் மாலை அந்தியும்’ (புறம். *34*) எனும் பாடலடி, மேல்சுட்டிய தொடர்களையெல்லாம் கேள்விக்கு உட்படுத்துகின்றன. நாம் அனைவரும் நன்கறிந்த கீழ்வரும் புறநானூற்றுப் பாடலில் அந்தப் பாடலடி பயின்றுவருகின்றது.

‘ஆன் முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாண் இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்
பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கும்
வருவாய் மருங்கில் கழுவாயும் உள’ என
நிலம் புடை பெயர்வது ஆயினும் ஒருவன்
செய்தி கொன்றார்க்கு உய்தி இல்என்
அறம் பாடின்றே – ஆயிழை கணவ!
‘காலை அந்தியும், மாலை அந்தியும்
புறவுக் கரு அன்ன புன் புல வரகின்
பால் பெய் புன்கம் தேனொடு மயக்கி,
குறு முயற் கொழுஞ் சூடு கிழித்த ஒக்கலொடு,
இரத்தி நீடிய அகன் தலை மன்றத்து,
கரப்பு இல் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி,
அமலைக் கொழுஞ் சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்,
எம் கோன் வளவன் வாழ்க!’என்று, நின்
பீடு கெழு நோன் தாள் பாடேன் ஆயின்,
படுபு அறியலனே, பல் கதிர்ச் செல்வன்;
யானோ தஞ்சம்; பெரும! இவ் வுலகத்து,
சான்றோர் செய்த நன்று உண்டாயின்,
இமயத்து ஈண்டி, இன் குரல் பயிற்றி,
கொண்டல் மாமழை பொழிந்த
நுண் பல் துளியினும் வாழிய, பலவே! (புறம். 34)

‘இயன்மொழி’ எனும் புறப்பாட்டுத் துறையில் அமைந்த இந்தப் பாடலைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ‘ஆலத்தூர் கிழார்’ எனும் புலவர் பாடிய வாழ்த்தியல் பாடலாகும்.

மன்னன் வளவனின் இயல்பை வியந்து பாராட்டும் இப்பாடலின் பொருள் “ஆயிழையின் கணவ! பசுவின் பால் மடியினை அறுத்தும், மங்கல மகளிர் கருவினைச் சிதைத்தும், அறிவு தந்த ஆசானையே பழித்துக் கொடுமை செய்தவர்க்கும் அவர்கள் பிழை செய்த மையால் உண்டான தீவினையைப் போக்கக்கூடிய வழிகள் உண்டு. ஆனால், ‘உலகமே தலைகீழாகப்

போனாலும் ஒருவர் நன்றியைச் சிதைத்தவர்க்குத் தீவினையிலிருந்து மீள்வதற்கு வழியே கிடையாது' என்று அறநூல்கள் கூறுகின்றன.

காலைப் பொழுதிலும் மாலைப் பொழுதிலும் புறாக்கருப் போன்ற புன்செய் வரகினைப் பால்கலந்து சமைத்துத் தேனுடன் கலந்தும், கொழுத்த முயலின் சூடான இறைச்சியைச் சேர்த்தும் தின்பர் என் சுற்றத்தார். அவரோடு, இலவமரம் ஓங்கி வளர்ந்துள்ள பரந்த மன்றத்தில், மறைக்காத உள்ளத்துடன் உள்ளம் விரும்பும் மொழிகளைப் பேசிப்பேசிப் பெருந்திரளாகிய கொழுத்த சோற்றினை உண்டு மகிழ்வர் என்போன்ற பாணர்கள். இவர்களுக்கு அழியாத செல்வமெல்லாவற்றையும் கிடைக்குமாறு செய்தவன் எங்கள் கோமானாகிய வளவன் நீயே யன்றோ!. 'வாழ்க' என்று உன் பெருமை மிகுந்த வலிய திருவடிகளைப் பாடாமல் இருப்பே னாயின், சூரியன் தோன்றுவதை அறிமாமல் போவேனாகுவேன். பெருமானே! நான் மிகவும் எளியவன்! இந்த உலகத்திலே சான்றோர் செய்த நன்மைகள் இருக்குமானால், இமயமலையில் திரண்டு, இனிய இடியோசையைச் செய்து மேகங்கள் பொழியும் நுண்ணிய மழைத் துளிகளினும் மேலாகப் பல ஆண்டுகள் நீ வாழ்வாயாக!" என்பதாகும்.

'காலைப் பொழுதிலும் மாலைப் பொழுதிலும் புறாக் கருவைப் போன்ற புன்செய் வரகினைப் பால் கலந்து சமைத்துத் தேனுடன் கலந்தும், கொழுத்த முயலின் சூடான இறைச்சியைச் சேர்த்தும் பாணர்கள் தின்பர்' என்பதனால் 'அந்தி' எனும் சொல் இங்கு மாலை நேரத்தை மட்டும் குறித்து நிற்காமல் பொதுவாக நேரத்தினைக் குறித்து நிற்பதாகப் பயின்று வந்திருப்பது தெரிகின்றது. பத்துப்பாட்டுள் ஒன்றான பொருநராற்றுப் படையில்,

வருந்துநாய் நாவின், பெருந்தகு சீறடி
அரக்கு உருக்கன்ன செந்நிலன் ஒதுங்கலின்
பரற்பகை உழந்த நோயொடு சிவணி
மரல்பழுத் தன்ன மறுகுநீர் மொக்குள்
நன்பகல் அந்தி நடைஇடை விலங்கலின்
பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி

(பொருந. 42 – 47)

எனவரும் பாடலடிகளின் இடையில் வரும் 'நன்பகல் அந்தி' எனும் சொல்லாடலும் இன்றைய வழக்கிலுள்ள பொருள் ஒற்றைத் தன்மையில் மட்டும் அமைந் துள்ளதைக் காட்டுகின்றது.

பாடினியை வருணிக்கும் வகையில் வரும் இப்பாடலடிகள், 'ஓடியிளைத்த நாயினது நாக்குப் போன்ற சிவந்த சிறிய அடிகளில், அரக்கு உருக்கினாற் போன்ற சிவந்த செந்நிலத்தில் நடப்பதனால் வெம்பரற் கற்கள் வருத்த, பழம் போன்று சிவந்த கொப்புளங்கள் தோன்றும் என்பதனால் உச்சி வேளையில் (நன்பகல் அந்தியில்) நடத்தலைத் தவிர்த்தாள் மயில் போலும் சாயலையுடைய கல்விப் பெருமைமிக்க பாடினி' எனும் பொருளைத் தருகின்றன. 'நன்பகல் அந்தி' என்பது 'உச்சி வேளை' என்ற பொருளிலேயே இங்குப் பயின்று வருகின்றது. இங்கும் 'அந்தி' என்பது மாலை நேரத்தைக் குறிக்காமல் பொதுவாக 'வேளை' (நேரம்) என்பதையே குறித்து நிற்கின்றது.

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை ஐம்பெரும் பூதங்களின் ஆற்றல்கள் உடையவனாய் உவமித்துப் பாராட்டி, வாழ்த்தும் வகையில் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறநானூற்றுப் பாடலொன்றில் பயின்று வரும் 'அந்தி அந்தணர்' என்ற சொல்லாடல் நம் சிந்தனையைப் புதுவிதமாகக் கிளப்புகின்றது. அச்சொல் பயின்றுவரும் பாடலடிகள் இவ்வாறு வருகின்றன:

... . அடுக்கத்து,
சிறு தலை நவ்விப் பெருங் கண் மாப் பிணை,
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத் தீ விளக்கின், துஞ்சும்
பொற் கோட்டு இமயமும் பொதியமும் போன்றே!

(புறம். 2: 20 – 25)

"பக்க மலையிலே சிறிய தலைகளையுடைய குட்டி களுடன், பெரிய கண்களையுடைய மான் பிணைகள், அந்திக் காலத்து, செய்தற்கரிய கடனாகிய ஆவுதிகளைச் செய்யும் அந்தணர்களின் முத்தீயாகிய விளக்கொளியில் துயிலும், அவ்வாறு அம்மான்கள் துயிலுதற்கு இடமான, பொற்சிகரங்களையுடைய நிலைத்த இமய மலையும் பொதிய மலையும் போன்று நீ வாழ்வாயாக!" என்று இப்பாடடிகளுக்குப் பழைய உரை பொருள் தருகின்றது. அகநானூற்றில் வரும் 'அந்திக் கோவலர்' என்ற சொல்லாடலும் இங்கு எண்ணத்தக்கதாய் உள்ளது.

போர் கருதித் தலைவியைப் பிரிந்து சென்ற தலைமகன், தன் தேர்ப்பாகனிடம், பகைவர் நம்மைப் பணியப் போர் நின்றதால் பிரிவுத் துன்பம் தீரத் தேரை விரைந்து செலுத்துக என்று கூறும் அமைப்பில், மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் எனும் புலவர் பாடிய ஒரு அகநானூற்றுப் பாடலில் அந்தச் சொல் லாட்சி வருகின்றது. அப்பாடலடிகள்

... . மாலை
அந்திக் கோவலர் அம்பணை இமிழ்இசை
அரமிய வியலகத்து இயம்பும்
நிரைநிலை ஞாயில் நெடுமதில் ஊரே

(அகம்.124: 13 –16)

என வருகின்றன. இங்கு வரும் 'அந்திக் கோவலர்' என்பதும் 'அந்தி அந்தணர்' என்பதற்கு இணையாக வைத்தெண்ணக்கூடியதாக உள்ளது. இந்தப் பாடலின் முழுப்பொருளையும் நோக்கினால் மட்டுமே 'அந்திக் கோவலர்' என்பதற்குரிய பொருளைப் புரிந்துகொள்ள வாய்ப்பேற்படும். அப்பாடலின் பொருள்

'பகைவர், அணிகளையெல்லாம் கொண்டுவந்து அவற்றை யானைகளோடு திரையாகக் கொடுத்து வணங்கிப் பணிமொழி கூறிச் சென்று அருள்க என வேண்டி நிற்பர். நம் அரனும் பாரமிகுதியால் புவியினை வருத்துதல் செய்து திரண்ட சேனையுடன் இன்றே தம் ஊர்க்குத் திரும்புதல் பெரிதும் உண்மையாகும். இனி, மாடங்களால் மாண்புற்ற நமது மாளிகையில் பெருமை அமைந்த படுக்கையின்கண்ணுள்ள, வெறுப்பற்ற கொள்கை யினையுடைய நம் காதலி இன்பம் பெறுதலும், நமக்குப் பாசறையில் ஏற்பட்ட வருத்தங்கள் தீர்தலும் உறுதி யாகும்.

(எனவே, பாகனே) நீயும் மின்னல் ஓடினாற் போன்ற ஒளியினையுடைய பொன்னாற் செய்த கலனை முதலியவற்றால் பொலிவு பெற்று, கொய்யப்பெற்ற பிடரி மயிரினையும், வார் பிடித்துச் செலுத்துவோரின் கைக்கு இதமான ஓட்டத்தையும் உடைய குதிரையைத் தேரிலே பூட்டி, வளம் மிக்க மழை பெய்தமையால் மலர்ந்த முல்லைப்பூவில் மொய்த்திருக்கும் வண்டுகள் ஓடுமாறு தேரினை ஓட்டுக. அந்திக் காலத்தே இடையரது அழகிய குழலின் ஒலிக்கும் ஓசை நிலா முற்றமாய அகன்றவிடத்தே வந்து ஒலிக்கும், வரிசையாக நிற்கும் ஞாயிலையுடைய நீண்ட மதில் சூழ்ந்த ஊரின்கண் மாலைப் பொழுதில் சென்றடையுறுமாறு குதிரையினை விரைந்து செலுத்துவாயாக' என அமைந் துள்ளது.

மன்னன் ஓய்மான் நல்லியாதனைப் புறத்திணை நன்னாகனார் பாடியுள்ள புறநானூற்றுத் தொகுப்பி லுள்ள கீழ்வரும் இந்தப் பாடலில் 'சிவந்துவாங்கு அந்தி' என்றொரு சொல்லாட்சி வருகின்றது.

விசும்பு நீத்தம் இறந்த ஞாயிற்றுப்
பசுங்கதிர் மழுகிய சிவந்துவாங்கு அந்தி
சிறுநனி பிறந்த பின்றை, செறிபிணிச்
சிதாஅர் வள்பின்என் தடாரி தழீஇ,
பாணர் ஆரும் அளவை, யான்தன்
யாணர் நல்மனைக் கூட்டுமுதல் நின்றனென்!

(புறம். 376: 1- 6)

இங்கு வரும் அந்தி எனும் சொல் மேற்கண்டன வற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பொருளில் பயின்று வந்திருக்கின்றது. இப்பாடலடிகளின் பொருள் 'வானத்தி லிருந்து சூரியன் கடந்து சென்று பசிய கதிர்களின் ஒளி குறைந்து, செம்மை படர்ந்து, மேற்குத் திசையின்கண் வளைந்து தோன்ற மாலைப் பொழுதும் கழிந்த பின்னர் செறிந்த வார்களால் பிணிக்கப்பட்ட தடாரிப் பறையை ஒருபுறம் தழுவிக் கொண்டு பாணர்கள் உணவு உண்ணும் வேளையில், யான் அத்தலைவனின் புதுமை மாறாத பெருமையின்கண் நின்று பாடினேன்' என்பதாகும்.

சங்கப் பாடல்களில் வரும் காலை அந்தி, நன்பகல் அந்தி, மாலை அந்தி என்பன 'காலை வேளை', 'நன்பகல் வேளை', 'மாலை வேளை' என்பதனைக் குறிக்கின்றன; மாலை நேரத்தை மட்டும் குறித்து நிற்கவில்லை என்பது தெரிகின்றதுஇதனால் அந்தி என்பது இன்றைக்கு நாம் அறிந்திருக்கும் மாலை நேரத்தை மட்டும் குறித்து நிற்கவில்லை என்பது தெரிகின்றது. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் 'அந்தி' என்பதற்குக் காலை, மாலை, முற்பகல், செவ்வானம் ஆகிய பொருள் களைத் தந்திருப்பதும் இங்கு எண்ணுதற்குரியது.

துணைநின்ற நூல்கள்

1. பதிப்பாசியர் குழு. 1982 (மறுஅச்சு). Tamil Lexicon (தொகுதி -1) சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.

2. பரிமணம், அ.ம. & பாலசுப்பிரமணியன், கு. வெ. (ப.ஆ.); செயபால், இரா. (உ.ஆ.). 2011 (4ஆம் பதிப்பு). சங்க இலக்கியம் அகநானூறு (தொகுதி -1, 2) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

3. பரிமணம், அ.ம. & பாலசுப்பிரமணியன், கு. வெ. (ப. ஆ.); 2011 (4ஆம் பதிப்பு). சங்க இலக்கியம் புறநானூறு (தொகுதி1, 2) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

4. சாமிநாதையர், உ. வே. (ப.ஆ.) 1986 (நிழற்படப் பதிப்பு) பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

நூல் மதிப்புரைக்கான கட்டுரைகளை அனுப்புவோர் தவறாமல்
நூலின் இரண்டு பிரதிகளைச் சேர்த்து அனுப்புமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
நூல் பிரதி இணைக்கப்படாத கட்டுரைகளைப் பிரசுரிக்க இயலாது.

- பொறுப்பாசிரியர்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்

விலை : ₹ 70/-

விலை : ₹ 275/-

விலை : ₹ 90/-



விலை : ₹ 180/-



விலை : ₹ 80/-

விலை : ₹ 150/-

விலை : ₹ 80/-

விலை : ₹ 115/-

விலை : ₹ 220/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

போன்: 044-26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com